# தமிழரசு

16-10-1991 ரூ.1





# இந்த இதழில்...


புரட்சித்தலைவியின் 100 நாள் நிர்வாகம் புதிய தமிழகத்தின் விழிப்புணர்ச்சிப் பிரவாகம் ... 2

மது விலக்கே நம் இலக்கு! மகாத்மா வழியே நமது வழி! -மாண்புமிகு முதல்வர் உரை ... 5

ஆலயங்களைப் பராமரிக்க அறநிலையப் பணி சிறக்க அரிய திட்டங்கள் —மாண்புமிகு முதல்வர் உரை ... 9

37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு —பேராசிரியர் க. பொன்னுசாமி —பேரவைத் துணைத் தலைவர் ... 14

மாநிலத்தின் மறுமலர்ச்சி மகத்தான தொழில் வளர்ச்சி —மாண்புமிகு முதல்வர் உரை ... 17

கரும்பு உற்பத்தி ... 21

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் எழுத்தறிவுத் திட்டம் ... 23

திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 24

மூளையை மாற்றி அமைத்தல் ... 27

வளர்ச்சிக்கு வழிகாட்டும் வணிகவரிச் சீரமைப்பு —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

தமிழகத்தில் வனமும், வன உயிரினமும் ... 38

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு தருக —மாண்புமிகு முதல்வர் உரை ... 41

காவல் துறை-தீயணைப்புத்துறை-மதுவிலக்கு ஆயத்தீர்வை: —மாண்புமிகு முதல்வர் அவர்களின் முக்கிய அறிவிப்பு ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:22 இதழ்:8

16-10-1991






# புரட்சித்தலைவியின் நூறுநாள் நிர்வாகம் புதிய தமிழகத்தின் விழிப்புணர்ச்சிப் பிரவாகம்!


இந்தியாவின் முதல் தர மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கும் ஒப்பற்ற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் 1991 - ஜூன் திங்கள் 24-ந்தேதி. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எதிர்ப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஈடுகொடுத்து வெற்றிகரமான 100 நாட்களைக் கடந்து தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கின்றார்.


ஏழை எளியோர் வாழ்க்கை வளம் பெற, சரித்திரம் படைக்கும் சாதனைத் தலைவியின் எண்ணத்தில் உதித்து, செயல்வடிவம் பெற்றுவரும் பணிகள், அனைத்துத் துறைகளிலும் தொடர்கின்றன.

- அரசுக்கு ரூ.322 கோடி வருவாய் இழப்பு ஏற்படும் என்ற போதிலும் தாய்மார்களின் விழி நீரைத் துடைக்கும் நோக்கத்துடன் மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்டன.
- 6 மாதத்திலிருந்து 2 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு.
- ரூ.5 கோடி செலவில் பால்வள மேம்பாட்டுத்திட்டம்.
- குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லாது இருக்கும் 2483 குடியிருப்புகளுக்கு நடப்பாண்டில் ரூ.10 கோடி செலவில் குடிநீர் வசதி. இதுவரை குடிநீர் வசதியே செய்து தரப்படாத 1007 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.7 கோடி செலவில் தனித் திட்டம்.
- படித்து வேலையில்லாமல் இருக்கும் 1 லட்சத்து 50 ஆயிரம் இளைஞர்களைப் பயன்படுத்தி 15 லட்சம் பேருக்கு கல்வியறிவு வழங்கும் திட்டம்.
- தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் ஆதிதிராவிடர் வகுப்பில் 1000 தொழில் முனைவோர் உருவாக்கப்பட உதவித் தொகை மற்றும் தொடக்க உதவித் தொகை ரூ.4 கோடி.
- நகர்ப்புறங்களில் உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்ட ரூ.65 கோடி கடன் உதவி.
- கிராமப்புற வீட்டுவசித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.30 கோடி செலவில் 30 ஆயிரம் வீடுகள்.
- வரும் 5 ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு 3 லட்சம் கான்கீரிட் வீடுகள். இந்த ஆண்டில் மட்டும் 50,000 வீடுகள்.
- நலிந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.40 கோடி முதலீட்டில் ஒரு லட்சம் வீடுகள்.



- சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவமனைக்கு ஸ்கேனர் கருவி வழங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 கோடி நிதி ஒதுக் கீடு.
- ஆண்டுக்கு ரூ.5 செலுத்தி அறுவை சிகிச்சைக்காக ரூ.25,000 வரை மான்ய உதவி பெறும் வகையில் அரசு ஊழியர் கள் நல்வாழ்வு நிதி.
- சென்னை தரமணியில் ரூ.25 கோடி செலவில் நிரந்தர வாணிபப் பொருட் காட்சி வளாகம்.
- கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதி களைச் செய்து கொடுக்க ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் ரூ.1 கோடி.
- தமிழ்நாட்டில் முதன்முறையாக மாநி லம் தழுவிய அளவில் அனைவரின் உடல் நலத்தையும் முழுமையாக பரி சோதிக்க மிகப்பிரம்மாண்டமான மருத்துவ முகாம். இத்திட்டத்தில் 4 கோடி மக்கள் பயன்பெறுவர்.
- சென்னை தரமணியில் உட்புற, வெளிப்புற படக்காட்சிகள் எடுப்பதற் குரிய சகல வசதிகளுடன் ரூ.70 இலட் சம் செலவில் திரைப்பட நகர்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு வீட்டு மனைகள், வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, பாசனக் கிணறுகள், தெருவிளக்கு போன்றவற்றிற்கு புதிய 10 அம்சத் திட்டம்.
- ரூ.42.30 கோடி செலவில் 50 ஆயிரம் கைத்தறிகளை 5 ஆண்டுகளில் நவீன மயமாக்க சிறப்புத் திட்டம்.
- நடப்பாண்டில் 3 இலட்சத்து 75 ஆயி ரம் பேருக்கு இலவச மனைப்பட்டா, 5 ஆண்டுகளில் 50 இலட்சம் குடும்பங் களுக்கு வீட்டுமனைப் பட்டா.
- கருவுற்ற பெணகள், பாலூட்டும் தாய் மார்களுக்கு எட்டு மாத கால அள விற்கு சத்துணவு மற்றும் சுகாதார உதவி.
- அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் மர ணம் அடைந்தால் வழங்கப்படும் குடும்பப் பாதுகாப்பு ரூ.60 ஆயிரமாக உயர்வு.
- ரூ.1000 கோடி திட்டச் செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் கரும் புச் சக்கையைப் பயன்படுத்தி இரண் டாவது செய்தித் தாள் காகிதத் தொழிற் சாலை நிறுவ புதியத் திட்டம்.
- தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் ரூ.600 கோடி மதிப்பீட்டில் 9 தொழில் திட்டங்கள்.
- ரூ.395 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தற்போதைய ஆண்டு உற்பத்தித் திறனை இரட்டிப்பாக உயர்த்த நடவ டிக்கை.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.400 கோடி செலவில் ரப்பர் தொழிற்சாலை.
- தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் சார்பில் ரூ.40.65 கோடி செலவில் சோளிங்க நல்லூரில் மின் அணுவியல் நகரம்.
- குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ 2 லட்சம் வீதம் ஆதரவு உதவித் தொகை 45 திரைப்படங்களுக்கு வழங்க ரூ 90 லட்சம் ஒதுக்கீடு.





- ஆயத்த ஆடைகளும் கைத்தறி ஆடைகளும் தயாரிக்க செங்கற்பட்டு எம்.ஜி. ஆர். மாவட்டத்தில் உள்ள காக்கலூரில் தொழிற்பேட்டை.

- புதிய தொழிற்பேட்டைகள் / தொகுதிகள் அனைத்திலும் மகளிர் தொழில் முனைவோருக்கு 30 சதவிகித தொழிற்கூடங்கள் / மனைகள் ஒதுக்கீடு.

- தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளுக்குள் 5-ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி வழங்கும் திட்டம்.

- பள்ளிகளில் 5-ஆம் வகுப்பு வரை மகளிரை மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை.

- மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சேர்ந்த கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவியர்க்கு ரூ.57 லட்சம் செலவில் புதிய விடுதிகள்.

- அண்ணாவின் இருமொழிக் கொள்கைதான் அரசின் கொள்கை. தமிழ் நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும்.

- ரூ.310 கோடியில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும்.


- தமிழகத்தில் இருக்கும் கோவில்களைச் சீரமைத்துப் பராமரிக்க 'திருக் கோவில் நிர்வாக வாரியம்.'

- சென்னை நகரில் குடிசையில் வசிக்கும் மக்களுக்காக ரூ.100 கோடி செலவில் 45 ஆயிரம் வீடுகள்.

- 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற கொள்கையின்படி நடப்பு ஆண்டில் 1,22,000 வீடுகள் கட்டித் தர திட்டம். அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 10 லட்சம் வீடுகள் கட்டித்தர இலக்கு.

- தருமபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில் பெண்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.22.47 கோடி செலவில் கூட்டுறவு நூற்புஆலை.

- சிவகங்கையில் ரூ.15 கோடி செலவில் 'கிராபைட்' தொழிற்சாலை.



**காலம் கனிகிறது; தமிழகம் வளர்கிறது!**



# மதுவிலக்கே நம் இலக்கு!

# மகாத்மா வழியே நமது வழி!

## அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் பேச்சு

அண்ணல் காந்தியடிகளின் 123-வது பிறந்தநாள் விழா, அரசு செய்தித் துறையின் சார்பில் மிகச் சிறப்பாக 2.10.91 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது.

அன்று காலையில் காமராசர் சாலையில் உள்ள அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.பீஷ்ம நாராயணன் சிங், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி ஆர். முத்தையா மற்றும் தமிழக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து, 'நூற்பு வேள்வி' இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**கருத்தரங்கம்**

அன்று பிற்பகல் 3.30 மணியளவில், கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில்- 'மது, போதை மருந்துப் பழக்கமும் இளைஞர் சமுதாயமும்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்குத் திரு.நா.மகாலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் எஸ். ஜெயப்பிரகாசம், திரு. டி.டி.திருமலை, காவல்துறை ஆணையர் திரு. ரா. ராஜகோபாலன், டாக்டர் இரா. பொன்னுதுரை ஆகியோர் அந்தக் கருத்தரங்கில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்.

**சிறப்புக் கூட்டம்:**

அன்று மாலை நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மேதகு தமிழக ஆளுநரும் மாண்புமிகு தமிழக முதல்வரும், மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி.ஆர். பட்டாபிராமன், திரு. வாழப்பாடி கே.இராமமூர்த்தி எம்.பி., மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற- சட்ட மன்ற உறுப்பினர்களும் அரசு உயர் அதிகாரிகளும், ஏராளமான மாணவ மாணவிகளும் கலந்து கொண்டார்கள்.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். ''சமூக சீர்திருத்தத்தைத் தலையாய கடமை யாகக் கொண்டு, கிராமமக்கள் வாழ்வு வளம் பெற்றாலொழிய பூரண சுயாட்சி பெற்றதாகாது என்று பாடுபட்டவர் காந்தியடிகள்; தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்து நூறு நாட்கள் ஆனநிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் காந்தியார் கனவை நனவாக்கும் வகையிலேயே பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

இதன்பின், மேதகு ஆளுநர் அவர்கள்- காந்தியடிகள் பிறந்த நாளில் உண்மை, அகிம்சை பற்றிய உறுதிமொழி படிக்க- அதைச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க.கணேசன் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார். விழாவுக்கு வருகை தந்திருந்தோரனைவரும் அதை அப்படியே திரும்பச் சொன்னார்கள்.

**சிறப்புரைகள்:**

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி.ஆர்.பட்டாபிராமன் அவர்கள் தமது சிறப்புரையில்- தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் இந்தியர்களுக்காகப் போராடிய போது பட்ட இன்னல்களை விவரித்தார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த அவர் குணநலன்களைப் புகழ்ந்தார். ''மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட காந்தி அடிகளுக்கு ஒரு திறம்மிக்க பெண்மணியின் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு விழா எடுப்பது மிகவும் பொருத்தமானதும் சிறப்புக்குரியதுமாகும்'' எனப் பாராட்டினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. வாழப்பாடி கே. இராமமூர்த்தி எம்.பி. அவர்கள் தம்முடைய சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

''ஆட்சி அமைத்து நூறுநாட்கள் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தமிழக மக்களின் சார்பில் வாழ்த்துகிறேன். இதுபோல் மேலும் பல நூறு நாட்களைக் காண வேண்டும் என வாழ்த்துகிறேன். இதற்கெல்லாம் காரணம்- காந்தியடிகளின் கட்டளைக்கிணங்க இன்று தமிழ் நாட்டில் மதுக்கடைகள் மூடப்பட்டு, தாய்மார்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்; வன்முறை தவிர்ப்பதே நன்முறை என்று காந்தியடிகள் பெரிதும் பாடுபட்டார்; அதற்காகத் தமிழக முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். காந்தியாரின் கொள்கைகள், தமிழக அரசில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எதற்கானாலும் சரி, சத்தியத்தின் அடிப்படையில் போராட வேண்டும் என்று காந்தியார் சொன்னார்; தமிழக முதல்வர் அவர்களே, அப்படிப் பட்ட போராட்டத்தை முன் நின்று நடத்துங்கள்- உங்கள் பின்னாலே தமிழகம் இருக்கிறது.''

மாண்புமிகு தமிழ்நாடு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் தனது சிறப்புரையில்- காந்தியடிகள் பல இன்னல்களை ஏற்ற பிறகே சுதந்திரம் கிடைத்தது என்றும் அதே போல நாட்டுமக்கள் நலன்கருதிப் பல துன்பங்களை ஏற்ற பிறகே புரட்சித்தலைவி அவர்கள் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இலட்சியப் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்றும் தெரிவித்து, ''அன்றைக்குக் காந்தியார்- இன்றைக்குப் புரட்சித்தலைவி'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

**விழா மேடையில்...**

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா நடத்தப்பட்ட காந்தி மண்டபத்தின் விழா மேடையில் காந்தியடிகள்- அவர் துணைவியார் கஸ்தூரிபா இருவரின் முழு உருவங்களும் வைக்கப்பட்டிருந்தன. மேடையின் முன்புறம் வைக்கப்பட்டிருந்த காந்தியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

விழா மண்டபம் முழுவதும், வண்ணப் பூச்சரங்கள் வனப்புறக் கட்டப்பட்டிருந்தன.

மண்டபத்தின் உள்ளும் புறமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள்.

**முதல்வர் உரை**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

'மகாத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலக சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர், இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக்கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் நமக்குத் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர், காந்திஜி.

'பிறப்பிலேயே நானொரு ஜனநாயகவாதி' என்று தன்னை அழைத்துக்கொண்ட மகாத்மா காந்திதான், எதற்கும் பயப்படுகிற

**★ அகிம்சையும் உண்மையும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் ஏற்பட்டவையன்று. மனித இனம் அனைத்துமே அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். என் சொந்த அனுபவத்தைக் கொண்டே நான் இதைக் கூறுகிறேன். இதுபோலவே, தன்னடக்கம் என்பதும், ஒரு சில மகாத்மாக்களுக்கு மட்டும் ஏற்பட்டதன்று; மனித இனம் அனைத்திற்குமே ஏற்பட்டதாகும்.**

**—அண்ணல் காந்தியடிகள்**

இந்தியனை வலிமையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர். வெறும் கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்துச்' சுதந்திரம் பெற முடியாது என்பதால், தன்னல மற்ற வழியில், பொதுநலச் சேவைக் காகச் சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும், நமது சுதந்திரப் போராட்டத்தில் புகுத்தி வெற்றி கண்டவர்.

'சத்தியாக்கிரகம்' என்பது இரண்டு நபர்களுக்குள்ளோ, அல்லது இரண்டு பிரிவினருக்கு இடையேயோ ஏற்படும் முரண் பாடல்ல, அது உண்மைக்கும் - பொய்மைக்கும், நல்லவைகளுக்கும் - கெட்டவைகளுக்கும் இடையே நடக் கும் போராட்டம், என்ற உண் மையை உலகிற்கு உணர்த்தியவர் அண்ணல் காந்தி.

சுதந்திர இந்தியாவின் பிரச்சி னைகள் எப்படி இருக்கும் என் பதைத் தனது தொலைநோக்குப் பார்வையில் கணித்து, தமது ஒப் பற்ற காந்தியக் கொள்கைகளின் மூலம், அவற்றிற்கெல்லாம் வழி முறைகளையும் வகுத்துச் சொன் னார் அவர். எனவேதான் 'The first and foremost indigenous Social Scientist of India' என்று அவர் அழைக்கப்பட்டார்.

அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி, பொருளாதாரச் சுதந்திரத்தையும் இந்தியா அடைய வேண்டும் என்பதே, அவரது அனைத்து எண் ணங்களிலும் மூலப்பொருளாய் விளங்கியது.

அரசியலில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை நெறி, வரலாற்று ஆசிரி யர்களுக்குப் பெரிய வியப்பைத் தந்தது.

'சத்தியம்', 'உண்மை' என்ற மாபெரும் தத்துவம் அவரது எண் ணங்களிலும், செயல்களிலும், மற்றும் அனைத்து வாழ்க்கைக் கூறுகளிலும் பரவியிருந்த பாங்கு அவர் ஏற்றிருந்த பொதுப் பணி களுக்குத் தீவிரமான வழியமைத்துத் தந்தது. இந்த உலகத்தில் தோன்றிய தலைவர்களில் எவருமே காந்தியடி களைப் போன்று அரசியல், பொரு ளாதாரம், சமுதாயம், ஆன்மீகம் என்று தாம் தொட்ட அனைத்துத் துறைகளிலும் இந்தத் தத்துவத்தைப்

> ★ மது அருந்துவது மக்கள் அறியாமலே எத்தகைய கேடுகளை அவர்களுக்கு உண்டாக்குமோ, அதுபோல மக்கள் தொகைப் பெருக்கமும் நாம் அறியாமலேயே சமுதாயத்திற்குக் கேடுண்டாக்கக் கூடியவை!
>
> — டாக்டர் எம்.ஜி.ஆர்.

பின்பற்றவில்லை என்பது, உலக வரலாற்றில் அதிசயிக்கத்தக்க உண் மையாகும்.

மகாத்மாவின் அகிம்சைக் கொள் கைகள், நடைமுறைக்கு உதவாதது என்ற சிலரது நினைப்பு, பொய் யாகி வருவதை நாம் கண்டுவரு கிறோம். இன்றைய உலகிலும் சரி, எதிர்காலத்திலும் சரி, உலக நாடு களுக்கு இடையே நிலவி வரும் சண் டைச் சச்சரவுகள், வன்முறைச் செயல்கள் ஆகியவற்றினைத் தடுப் பதில், இந்த அகிம்சை பெரும் பங்கு வகிக்கும் என்பதை, உலக அமைதி யில் அக்கறை கொண்டவர்கள் பின்னரே தெரிந்து கொண்டனர். அதுபோலவே, எதிர்ப்பினைத் தெரி விப்பதற்கு வன்முறை நாடாத மக் களுக்கு, சத்தியாக்கிரகத்தைவிட வேறெந்த எதிர்ப்பு முறைகளும் சரியான வழிமுறைகள் ஆகாது எனவும் காந்தியடிகள் கருதினார்.

அதுவன்றி, தீவிர வன்முறை யினை அடிப்படையாகக் கொண்டு, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்க நினைக்கும் சிலர் ஆயுதம் தாங்கி, அமைதியைக் குலைத்து, சாதாரண மக்களை அன்றாடம் கடுத்துயரத்தில் ஆழ்த்தும் செய்கைகளை, நாம் இன்று எங்கும் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் விரும்புகிற வெற்றி, அவர்களுக்குக் கிடைக் காமல் தூரப் போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால், காந்தியடிகள் வலுவாகத் திட்டம் தீட்டி, வன்முறை யின்றி அமைதி வழியில், நமக்குச் சுதந்திரத்தினைப் பெற்றுத் தந்து, உலக வரலாற்றில் எவரோடும் ஒப்பிடமுடியாத சாதனையாளராகத் திகழ்கிறார்.

தனது அனுபவப் பாணியில், இந்திய நாட்டில் புரையோடிப் போயிருக்கிற பல்வேறு பிணிகளைக் களைய, மகாத்மா காந்தி எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். மகளிர் மேம்பாடு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கிராமியத் தொழில் நலம் காத்தல், மதங்களி டையே ஒற்றுமை, ஆகியவற்றினை நடைமுறைப்படுத்த அவர் ஆற்றிய பணிகள் மகத்தானது, மறக்க முடியாதது.

**மகாத்மா காந்தி அவர்களின் முக்கியக் கொள்கையான மதுவிலக் கினை, இன்றைக்குத் தமிழகத்தில் எங்கள் அரசு குறிப்பாக, மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு, நடைமுறைக்குக் கொண்டு வந் துள்ளது என்பதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். எங்களின் இந்தச் செயல், இச்சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிணிகளையும் களைய, நாங்கள் தொடுத்திருக்கும் அறப் போரின் முதற்கணை என்பதனை, உறுதியோடு உங்கள் முன் தெரி வித்துக் கொள்கிறேன்.**

மதுவை ஒழிக்க முயற்சி மேற் கொள்ளாமல், மகாத்மாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவதும், பெண் ணடிமையை நீரூற்றி வளர்த்துக் கொண்டு, தேசப்பிதாவின் பிறந்த நாளைப் பிரமாதப்படுத்துவதும், ஜாதியத்தைப் பேசி மக்களின் மனதில் ஜாதிய விஷத்தை விதைத் துக் கொண்டு, காந்திஜியின் பிறந்த நாளை விளம்பரப்படுத்துவதும், வெறும் சடங்குகளாக வேண்டு மானால் இருக்க முடியுமே தவிர, அவர் விரும்பிய கொள்கைகளை நாம் பின்பற்றுவதாக நிச்சயமாக இருக்க முடியாது.

**எனவேதான், மது ஒழிப்பில் இந்த அரசு காட்டிவரும் தீவிரத்தை யும், மக்கள் அதற்காக வழங்கிவரும் ஆதரவையும், பாராட்டுக்களையும், மலர் மாலைகளாகக் கருதி, அவற்றை அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில், அவருக்கு அணி வித்து மகிழ்வதில் நான் பெருமைப் படுகிறேன்!**

மகாத்மா காந்தி தனது இதயத் தில் வைத்துப் போற்றிய இன் னொரு கொள்கை தீண்டாமை ஒழிப்பு. 'கடவுளின் குழந்தைகள்' என்று அவரால் கருதப்பட்ட ஆதி திராவிடர் மக்களை, தங்களது அரசியல் இலாபத்திற்காகத் தூண்டி விட்டு, பலிகடாவாக ஆக்குகிற முயற்சிகள், நம்முடைய தமிழ்நாட்டி லேயே தற்போது நடந்து வருவதை,

நான் சட்டமன்றத்திலே பலமுறை எடுத்துரைத்துள்ளேன்.

**வாழ வழியற்ற அந்த ஏழை மக்களுக்கு உதவுகிற எங்களது இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தி, தங்களது வன்முறைத் திட்டத்திற்கு அவர்களைப் பலியாக்க நினைக்கின்றவர்களுக்கு, அண்ணல் காந்தி அடிகளின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், என்னுடைய ஆட்சியில் ஆடுகளை ஏமாற்றி, ஓநாய்கள் இரத்தமும் குடிக்க முடியாது; மிரட்டிச் சத்தமும் போடமுடியாது. ஏனென்றால், நான் ஓநாய்களைச் சந்தித்துவிட்டு, வெறிநாய்களை வீழ்த்திவிட்டுத்தான் இந்த ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறேன். எனது இந்த எச்சரிக்கை மக்கள் எதிரிகளுக்குப் புரியுமென்று நம்புகிறேன். இதைக்கேட்டு அவர்கள் திருந்துவார்கள் என்று நம்புகிறேன். இது மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் என்பதால், இந்த நேரத்தில் நான் இந்த அளவுக்குத்தான் கூறமுடியும்.**

அண்ணல் காந்தி அடிகளின் மனதைக் கவர்ந்த மற்றொரு அம்சம் கிராம ராஜ்யம். 'கிராம ராஜ்யம்' உருவாக்கப்படவேண்டுமென்ற காந்திஜியின் எண்ணம்தான், இன்றைக்குப் பல்வேறு உருப்பெற்று, கிராமங்கள் தன்னிறைவு பெறுகிற திட்டங்களை மத்திய அரசும், மாநில அரசுகளும் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையாய் அமைந்திருக்கிறது. 'தமிழ்நாட்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்படுவதன் நோக்கம், காந்தி அடிகளின் கனவுகளை நனவாக்கத் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பது தான்.

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்ற காந்தி அடிகளின் கூற்று வெறும் வார்த்தை ஜாலம் அல்ல; அது அவரது அனுபவத்தின் வெளிப்பாடு. குறிப்பாக சம்பாரன் (Champaran) என்ற கிராமப் பகுதி விவசாயிகளை, இந்தியாவிற்கு வந்தவுடன் முதன் முதலில் சந்தித்தபோது 'நான் அவர்களைச் சந்தித்ததன் மூலம் கடவுளை, அகிம்சையை, உண்மையை நேருக்கு நேர் சந்தித்தேன்' என்று கூறி மனம் மகிழ்ந்தார் அவர். அப்படிப்பட்ட கிராம ஏழைகளுக்கு உதவுகிற பணியைத்தான் எங்கள் அரசும் மனமுவந்து, தமிழகத்தில் செயற்படுத்தி வருகிறது. அதன்மூலம் உண்மையான கிராம ராஜ்யம் உருவாக, மேலும் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி சாதாரண மனிதனது மேம்பாட்டுக்காக வாழ்நாளெல்லாம் சிந்தித்து உழைத்ததால்தான் இன்றும், என்றும் இந்திய நாட்டு மக்களின் ஆத்மாவாக மகாத்மா திகழ்ந்து வருகிறார்!

பண்டித நேரு அவர்கள் தனது மாபெரும் தலைவரான காந்தி அடிகளைப்பற்றிக் கூறும்போது -

'Whether Gandhiji is a democrat or not,
he does represent the peasant masses of India;
he is the quintessence of the conscious and
sub-conscious will of those millions'

என்று புகழாரம் சூட்டினார். மகாத்மா காந்தி அவர்களது நாட்டுப் பற்றும், இந்தியாவிற்காக அவர் எதையும் இழக்கத் தயாராக இருந்தார் என்பதும், உலகறிந்த உண்மையாகும். தென் ஆப்பிரிக்காவிலிருந்து அவர் இந்தியாவிற்கு புறப்படும்போது -

'I am about to leave a bhogabhumi for a Karmabhumi... Anyone who seeks deliverance must go to the sacred soil of India' என்று மனம் நெகிழ்ந்து பேசினார்.

**அண்ணல் காந்தி அடிகள் இப்படி வாழ்த்திய, வணங்கிய இந்தியாவை எவர் கூறுபோட நினைத்தாலும், எதிர்த்துப் பிரிவினைக் கூக்குரலிட முயன்றாலும், அதை முறியடிப்பதும், அதற்கு முற்றுப் புள்ளி வைப்பதுமே, நமது சூளுரையாக இன்றைய தினத்தில் இருக்க வேண்டும்.**

அவர் வெள்ளையனை வெளியேறச் சொன்னது, நமது விடுதலைக்காக மட்டுமின்றி, இனி எந்த நாட்டுக்காரனும் இந்திய மண்ணில் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியாது என்பதை வலியுறுத்தவும், அது வரலாற்றுப் பாடமாக இருந்து, எதிர்காலச் சந்ததியினருக்கு உதவ வேண்டுமென்பதற்காகவும்தான் என்று நான் எண்ணுகிறேன்.

மனித சமுதாயத்தில் இன்றைக்கு எத்தனையோ தத்துவங்கள், இயக்கங்கள், கொள்கைகள் ஆகியவை, மக்களால் நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், காந்தியக் கொள்கைகள் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கக் காரணம், அவை அனைத்தும் மனித நேயத்தினையும், நல்லெண்ணத்தினையும், சகோதரத்துவத்தினையும், மற்றும் அன்பு, அறம், அகிம்சை ஆகிய அரும்பெரும் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு, உலகப் பொது நோக்கிற்கு உதவி வருவதால்தான், என்றால் அது மிகையாகாது.

எனவே, மகாத்மா காந்தி நமக்குக் காட்டிவிட்டுப் போயிருக்கிற புனித வழியில் தொடர்ந்து, கௌரவத்தோடு நாம் தலை நிமிர்ந்து தைரியமாக முன்னேறவும், அவர் அமைத்துத் தந்துள்ள பாதையில் நடந்து, உலக அமைதிக்குப் பாடுபடவும், அவரது இந்தப் பிறந்த நாள், நமக்கு மீண்டும் வழிகாட்டி உள்ளது, ஒரு வாய்ப்பளித்துள்ளது.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினார்.

கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியரிடையே காந்தி அடிகள் பற்றி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ-மாணவியருக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பரிசுகள் வழங்கித் தலைமை உரை ஆற்றினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு க. கணேசன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை யாற்றினார்.

விழா நிறைவுற்ற பின் - பத்மஸ்ரீ அலர்மேலு வள்ளி வழங்கிய பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர் மற்றும் பிரமுகர்கள் அந்நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு**
பி.எல்.ஆர்.

# ஆலயங்களைப் பராமரிக்க, அறநிலையப் பணி சிறக்க, அரிய திட்டங்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 26.9.'91 அன்று சட்டப் பேரவையில் பேசியதாவது:

**த**மிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகத்தின் மானியக் கோரிக்கை எண். 12-இன் மீது கொள்கை விளக்கக் குறிப்பு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாக அமைப்பு, ஆலய நிர்வாக வாரியம் அமைத்தல், சமய நிறுவனங்கள் மற்றும் கட்டளைகள் நிர்வாகம், உலோகத் திருமேனிப் பாதுகாப்பு, திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் மேம்பாடு, முதலமைச்சரின் கோயில் திருப் பணி மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் ஆலய ஊழியர்கள் நலன் ஆகிய முக்கிய அம்சங்கள் பற்றி விளக்கப்பட்டிருக்கின்றன.

எங்கள் தேர்தல் அறிக்கையில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களைத் தவிர, தமிழகம் எங்கும் உள்ள கிராமங்களில் சிறு சிறு புராதனக் கோயில்கள் பல்லாயிரக் கணக்கில் பராமரிப்பு இன்றி பாழ்பட்டு கிடக்கின்ற நிலையில் அவைகளை நன்கு பராமரித்து, அவற்றின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்து இருந்தோம். சிறப்புக்குரிய இக்கோயில்களின் பராமரிப்புப் பணிகளையும் ஆலய நிர்வாகப் பணிகளையும் கவனிக்கத் தனியாக ஆலய நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டு இருந்தோம். அதனை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு ஆளுநர் உரையில் தமிழகத்தின் புகழ்மிக்க பெரிய கோயில்களில் பராமரிப்பும், வழிபாடுகளும் முறையாக நடைபெறத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் அறிவித்து இருந்தோம். அந்த அறிவிப்புக்குச் செயல் வடிவம் கொடுத்து, ஆலய நிர்வாக வாரியத்தை அமைக்கத் தற்போதைய 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டத்திற்குத் திருத்தம் ஒன்றை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்த உள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சட்டத்திருத்தத்தின் அடிப்படையில், புதிய நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

அறிமுகப்படுத்தப்பட உள்ள இச்சட்ட முன் வரைவில், ஆலய நிர்வாக வாரியத்தின் அமைப்பு, அவற்றின் அதிகாரங்கள், மற்றும் பணிகள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியவர்களின் அதிகாரங்கள், அரசின் அதிகாரங்கள் போன்ற முக்கிய அம்சங்கள் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத் தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப் பட வேண்டும்; அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப் பட வேண்டும், என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக அமைப்பு பற்றி நான் சில விளக்கங்களைக் கூற விரும்புகின்றேன். இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்கள், மடங்கள் குறிப்பிட்ட அறக்கட்டளைகள் மற்றும் சமண மத அறநிலையங்கள் ஆகியவைகள் மொத்தம் 35,150 ஆகும்.

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

இத்துறை 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், இம்மண்டலங்கள் 17 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டமும் ஒரு உதவி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. தற்போது நம் மாநிலம், நிர்வாக வசதிக்காக 21 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மாவட்டங்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மாநிலம் முழுவதிலும் அறநிலையத் துறையைப் பொறுத்தவரை 8 மண்டலங்களாகவே இயங்கி வருகின்றது.

இந்த 8 மண்டலங்களில் குறிப்பாக சென்னை, சேலம், மதுரை போன்ற 3 மண்டலங்களில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலைமதிப்புள்ள நகர்ப்புற நிலங்கள் இருக்கின்றன. அங்கே நிர்வாகப் பணிகள் அதிகரித்துள்ளன. ஆலயங்கள் குறித்த வழக்குகளும் அதிகமான அளவுக்கு நிலுவையில் உள்ளன. மதுரை, சென்னை மண்டலங்களில் புகழ்பெற்ற, முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள் பல உள்ளன. நாளுக்கு நாள் வருமானம் அக்கோயில்களில் பெருகி வருகிறது.

அத்துடன் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக, ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவற்றின் விலை மதிப்பும் தற்போது மிகவும் உயர்ந்து உள்ளது. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்காரணங்களை முன்னிட்டு சென்னை, சேலம் மண்டலங்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து வடஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும், அதேபோன்று மதுரை மண்டலத்தை 2 ஆகப் பிரித்து பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சிவகெங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும் அமைக்கப்படும்.

அறநிலையங்கள் அவைகள் பெறுகின்ற ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தற்போது நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட அறநிலையங்களில் ரூபாய் ஒரு இலட்சமும், அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுகின்ற திருக்கோயில்களுக்கு அறங்காவலரைத் தற்போது அரசு நியமித்து வருகிறது. ரூ.50,000-லிருந்து ஒரு இலட்சம் வரை வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள், ரூ.10,000-லிருந்து ரூ.50,000 வரை வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள், ரூ.10,000-க்குக் கீழ் வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள் ஆகியவற்றிற்கு அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரத்தை முறையே ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் பெற்று இருக்கின்றனர். இம்முறையைப் பின்பற்றுவதால் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் காலதாமதம் ஏற்படுகின்றன. இந்த முறை ஆலயங்களின் திறமையான நிர்வாகத்திற்கு நலம் பயப்பதாக இல்லாததாலும், நடைமுறைச் சிக்கல்கள் தோற்றுவிப்பதாலும் பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்குத் தற்போதய நடைமுறையை மாற்றி அமைப்பது குறித்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், சட்டத் திருத்த மசோதா ஒன்று கொண்டு வரப்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்குக் கொண்டு வரப்படும் புதிய முறை சிறப்பான வகையில் செயல்படுவதாக அமையும்.

## ஆலய நிர்வாக வாரியம் அமைக்கப்படும் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி அமைக்கப்படும்.

திருக்கோயில்களின் திருப்பணிகள், பொதுமக்கள் நன்கொடை, அரசு மானியம், ஆணையரின் பொதுநல நிதி, ஆலயங்களின் உபரி நிதி ஆகியவைகளிலிருந்து கிடைக்கின்ற நிதிகளின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பணிக்காக அரசு ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ரூ.45 இலட்சம் ஒதுக்குகிறது. இந்த ஆண்டிலும் இதற்காக ரூ.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 1985-86-ஆம் ஆண்டிலிருந்து 1990-91 வரை 322 திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன. இவ்வாண்டில் அதாவது 1991-92-இல் 45 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும்.

தமிழகத் திருக்கோயில்களில், ஒவ்வொரு பசலி வரவு- செலவுத் திட்டத்திலும், வரவுத் தொகையில் ஒரு சதவிகிதம், ஆணையர் பொது நல நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1988-89-லிருந்து 1991-92 வரை இந்நிதியின் மூலமாகப் பயன் அடைந்த கோயில்களின் எண்ணிக்கை 97 ஆகும். இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.49.17 இலட்சம் ஆகும். தற்போது இந் நிதியில் கையிருப்பு ரூ.16 இலட்சம் உள்ளது. இந்தத் தொகை தேவைப்படும் கோயில்களின் திருப்பணிகளுக்கு அளிக்கப்படும்.

உபரி நிதி உள்ள கோயில்களிலிருந்து 1988-89-ஆம் ஆண்டு 15 திருக்கோயில்களுக்கு ரூ.31.27 இலட்சமும், 1989-90-ஆம் ஆண்டு 26 திருக்கோயில்களுக்கு ரூ.22.65 இலட்சமும், 1990-91-ஆம் ஆண்டு 14 திருக்கோயில்களுக்கு ரூ.11.56 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு, அதாவது, 1991-92-இல் கும்பகோணத்தில் வருகிற பிப்ரவரி மாதத்தில் கொண்டாடப்பட இருக்கின்ற 'மகாமகம்' திருப்பணிக்கு ரூ.12 இலட்சம் உபரி நிதி மாற்றத்திலிருந்து வழங்கப்படும். மேலும் அரசு மானியமாக 'மகாமகம்' திருப்பணிக்கு ரூ.12.50 இலட்சம் வழங்கப்படும். மேலும் இத்திருப்பணிக்கு நிதி தேவைப்பட்டால் 'முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' யிலிருந்து வழங்கப்படும்.

நலிவுற்ற திருக்கோயில்களில் குறைந்தபட்சம் ஒரு கால பூசை செய்வதற்காக நிதி வசதி உள்ள திருக்கோயில்களில் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி நிதி மாற்றம் செய்து 1984-85-ஆம் ஆண்டு ரூ.5 கோடி ஆலய மேம்பாட்டு நிதி உருவாக்கப்பட்டது. இத்தொகையிலிருந்து ஆண்டு தோறும் சுமார் ரூ.50 இலட்சம் வட்டி பெறப்படுகிறது. இதில் 50 சதவிகிதத்தை நலிவுற்ற திருக்கோயில்களில் ஒரு கால பூசை நடத்துவதற்கும், எஞ்சியுள்ள 50 சதவிகித வருமானத்தைப் பழமையான திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் செலவிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 3,915 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசை நடத்த ரூ.132.04 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மங்களா சாசனம் மற்றும் பாடல் பெற்ற 12 திருக்கோயில்களுக்கு ரூ.25,000 வீதம் வைப்பு நிதி அளிக்கப்பட்டு அதன் வட்டியைக் கொண்டு இந்தத் திருக்கோயில்களில் ஒரு கால பூசை நிரந்தரமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிதியிலிருந்து திருப்பணிக்காக 1989-90-லிருந்து இதுவரை 32 திருக்கோயில்களுக்கு ரூ.195.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு கால பூசை நடத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் தேவைப்படுகின்ற ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,500 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் உபரி நிதி

யிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கு, ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தி அதன் வட்டி வருமானத்திலிருந்து நிதி வசதி இல்லாத திருக்கோயில் திருப்பணிக்காக அரசு அனுமதியுடன் ரூ.10,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்நிதி 1984-இல் தொடங்கப்பட்டது. இந்நிதி கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் தொகை தற்போது ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டிலிந்து 1989- 90-ஆம் ஆண்டு வரை 553 திருக்கோயில்களுக்கு ரூ.54.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 66 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு ரூ.16.50 இலட்சம் ஒதுக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது துறையின் ஆளுகைக்குட்பட்ட 35,150 திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்களில் 476 திருக்கோயில்களுக்கு ரூ.7.10 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 294 திருக்கோயில்களின் திருப்பணியை மேற்கொள்வதற்கு ரூ.9.96 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு அவற்றுக்கான நிர்வாக அனுமதியும் ஆணையர், அறநிலையத் துறை அவர்களால் வழங்கப்பட்டு உள்ளது. இப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்து சமய அறநிலையத்துறை, திருக்கோயில்களுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகளைப் பற்றி ஓர் ஆய்வு நடத்தியுள்ளது. அந்த ஆய்வு மொத்தம் 14,920 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இத்திருக்கோயில்களில், பட்டியலில் சேர்ந்த 1,137 ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்கு ரூ.28.57 கோடி தேவைப்படும் என்றும், பட்டியலில் சேராத 6,861 ஆலயங்களுக்கு ரூ.24.14 கோடி தேவைப்படும் எனவும், 6,688 சிறு ஆலயங்களுக்கு ரூ.21.81 கோடி தேவைப்படும் என்றும், ஆளுகைக்கு உட்படாத 234 திருக்கோயில்களுக்கு ரூ.56 இலட்சம் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டு இருக்கிறது. எனவே, திருக்கோயில்களைப் பராமரிப்பதற்கு ரூ.75 கோடி தேவைப்படும். இது அளவில் மிகப்பெரிய தொகையாக இருப்பதால், பொதுமக்கள் கொடை உள்ளம் படைத்தவர்கள் மற்றும் பொது நிறுவனங்கள் நிதியை வழங்கினால் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். இதற்காக ஒரு நீண்டகாலத் திட்டம் வகுத்து இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுககலாம்.

இத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில் தவிர, தமிழகம் எங்கும் உள்ள கிராமங்கள் பலவற்றில், சிறுசிறு புராதனக் கோயில்கள், பல்லாயிரக் கணக்கில், பராமரிப்பின்றிப்பாழ்பட்டுக் கிடப்பது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவற்றின் பராமரிப்பு, அன்றாடத் தேவைகளுக்கு என உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றிற்குள்ள நித்திய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று தேர்தல் அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில் முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி எனது நன்கொடை ரூ.1,00,008 உடன் 2.8.91-இல் துவக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பாழடைந்த நிலையில் உள்ள சிறு கோயில்களுக்குத் திருப்பணி வேலைகளை மேற்கொள்ளவும் பல கோயில்களுக்கு அன்றாட வழிபாடுகள் நடத்த ஏற்பாடு செய்யவும் அவற்றைப் பராமரிக்கவும் இந்நிதியானது பயன்படுத்தப்படும். 25.9.91 வரை ரூ.1.51 கோடி இந்நிதியில் சேர்ந்துள்ளது. பொதுமக்கள், கொடையுள்ளம் படைத்தவர்கள், தொழிலதிபர்கள், இன்னும் சமுதாயத்தில் இருக்கின்ற பலதரப்பட்ட மக்கள் அவர்களாகவே மனமுவந்து நிதியை வழங்குகின்றனர்.

திருக்கோயில்களில் இருக்கும் பழமை வாய்ந்த உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் தற்போது 1,785 திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையத்தில் இருந்து திரு

---

### பழம், காய்கறிகள் உற்பத்தியில் முன்னேற்றம்

பழங்கள், காய்கறிகள் உற்பத்தியில் நமது நாடு மிக வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இவற்றின் உற்பத்தி சுமார் 5 மடங்காக உயர்ந்திருக்கிறது. 1970-இல் 52,274 டன்களாக மட்டுமே இருந்த பழம், காய்கறிகளின் உற்பத்தி, 1989-இல் 2.40 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. 1970-இல் பழம் மற்றும் காய்கறி பதனிடும் தொழிற்சாலைகள் நமது நாட்டில் மொத்தம் 1,094 இருந்தன. 1991-இல் இவற்றின் எண்ணிக்கை 3,629.

பழம் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதியிலும் நமது நாடு கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. 1980-இல் சுமார் 21.90 கோடி ரூபாய் மதிப்புக்கே இவற்றை ஏற்றுமதி செய்த நாம், 1989-இல் ரூ.79.48 கோடி மதிப்புக்கு அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம் எனில் இவற்றின் உற்பத்தியில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் நன்கு புலப்படும்.

இந்தியாவில் தற்சமயம் ஆண்டிற்குச் சுமார் 7 கோடி டன் அளவுக்குப் பழங்களும், காய்கறிகளும் உற்பத்தி செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் பழங்களின் உற்பத்தி மட்டும் 33.6 சதவிகிதம்.

—நன்றி 'CO-OPERATION'

---

விழாக்காலங்களில் தேவைப்படும் திருமேனிகள் எடுத்துச் செல்லப் பட்டு, திருவிழாக்கள் முடிந்தவுடன் மீண்டும் திரும்பப் பெறப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருமேனிகள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், அவற்றின்மீது அரிப்பு மற்றும் உலோக நோய்கள் (Metal diseases) ஏற்படாமல் இருக்கவும் இந்த மையத்தினைக் குளிர் சாதன வசதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டுள்ளேன். இப்பணி அடுத்த மாத இறுதிக்குள் முடிக்கப் படும்.

இந்த நேரத்தில் 1976-ஆம் ஆண்டு களவாடப்பட்டு லண்டனுக்குக் கடத்தப்பட்ட பத்தூர் நடராசர் உலேகத் திருமேனி, பல ஆண்டுகள் வழக்கு நடைபெற்று நமக்குச் சாதகமாக முடிவுற்ற பிறகு, இங்கிலாந்து நாட்டில் இந்தியத் தூதராகப் பணிபுரியும் டாக்டர் சிங்வி அவர்கள் தாமே அதை சென்னைக்குக்கொண்டுவந்து,நினைவு கூரத்தக்க விழாவில் என்னிடம் நேரில் வழங்கியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் திருமேனி தற்போது பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திருமேனி சுமார் ரூ.7 இலட்சம் மதிப்பில் பத்தூரில் கட்டப்பட்டு வரும் அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் பிரதிட்டை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களில் திருட்டுக்களைத் தடுக்க காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். முக்கிய திருக்கோயில்களில் திருடர்கள் எச்சரிக்கை மணியும் (Burgler Alarm) மற்றும் விழிப்புப் பதிவுக் கடிகாரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

திருக்கோயில்களால் 5 கல்லூரிகளும், 10 மேல்நிலைப் பள்ளிகளும், 9 உயர்நிலைப் பள்ளிகளும், 2 பாலிடெக்னிக்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை, தவில் நாதஸ்வரப் பள்ளி, காது கேளாதோர் பள்ளி, சித்த மருத்துவ மனைகள், முதியோர் இல்லங்கள், அன்பு இல்லங்கள் ஆகியவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பழனி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலின் கீழ் ஆண்களுக்கென பராமரிக்கப்படும் பாலிடெக்னிக்கிற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் தொழிற் கூடங்கள் கட்ட, உலக வங்கியிடம் சுமார் ரூ.46.80 இலட்சம் கடனுதவி பெற்று பணிகள் நிறைவேற்றப் படும். இதுதவிர, பெண்களுக்கான பாலிடெக்னிக்கிற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கவும், பாலிடெக்னிக்கை விரிவாக்குவதற்கும் ரூ.75.90 இலட்சம், உலக வங்கிக் கடன் உதவி பெற்று, நடப்பு ஆண்டில் பணிகளைத் தொடங்க இருக்கிறோம். பெண்கள் பாலிடெக்னிக் தற்போது பழனி மலையில் அடிவாரத்தில் நடைபெற்று வருகிறது. அதை விரிவாக்குவதற்கான இடவசதி அங்கு இல்லை. எனவே, அதை பழனி ஆண்டவர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் கல்லூரி விடுதிக்குப் பின்புறப் பகுதிக்கு மாற்றி, புதிய கட்டடங்கள் கட்டும் பணி, உலக வங்கித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

திருக்கோயில் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் இந்து சமய அறநிலைய குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 உதவியாக வழங்கவும் திட்டம் தற்போது அமலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாத வருமானம் ரூ.100-க்கு மேல் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.2 சந்தாவாகப் பெறப்படுகிறது. மாத வருமானம் ரூ.100-க்குக் குறைவாகப் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து சந்தாத் தொகை பெறப்படுவதில்லை. ஆனால், அவர்களுக்கும் குடும்பநலத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

> ★ என்னோடு கலந்திருப்பது உழைப்பு. நான் அதற்காகவே இருக்கிறேன். எனது கால்களை எவ்வளவு தூரம் உபயோகிக்க முடியும் என்ற அளவைக் கண்டு கொண்டேன்; எனது பார்வையை எவ்வளவு தூரம் செலுத்த முடியும் என்பதையும் அறிந்து கொண்டேன்; ஆனால், என் உழைப்பின் சக்தியை மட்டும் என்னால் காண முடியவில்லை!
>
> —மாவீரன் நெப்போலியன்.

தற்போது குடும்பநல உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ.10,000-த்தை ரூ.20,000-ஆக உயர்த்தி வழங்குவதற்குப் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் அடிப்படை ஊதியம் ரூ.100-ம் அதற்கு மேலும் வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் 16,640 நபர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.5 வீதமும், பட்டியலைச் சேராத 33,060 திருக்கோயில்களில் பணி புரியும் மாதம் அடிப்படை ஊதியம் ரூ.100-க்குக் குறைவாக வருமானம் பெறும் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதமும், சந்தாத் தொகை வசூலிக்கப்பட்டு, இப்புதிய திட்டம் மேற்கொள்ளப் படும். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.13.95 இலட்சம் வருவாய் கிடைக்கும். ஆனால், இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ.30 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள வருவாய்த் தொகையைவிட அதிகமாக உள்ள செலவினை, உபரி வருவாய் உள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியை வைப்புநிதியாக வைத்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஈடு செய்யலாம் என்று உத்தேசிக்கப் பட்டுள்ளது.


இந்து சமயத்திற்கு ஆணிவேராகக் கருதப்படுவது வேதங்களும், ஆகமங்களும் ஆகும் என்பது எல்லோரும் அறிந்ததே. தற்போது இந்த அற்புதமான வேத ஆகமம் மற்றும் சாஸ்திரங்களை ஒருசில தனியார் மூலமாகவே பாதுகாக்கப்பட்டும், வளர்ச்சி செய்யப்பட்டும் வருகிறது. இத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் வேத ஆகமப் பள்ளிகள், மேலும் சிறப்பாக ஆகம சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்க இயலாத சூழ்நிலையிலேயே உள்ளது. காலப்போக்கினால், வேத ஆகம சாஸ்திரிகள் இப்புனிதப் பணியை விட்டுவிட்டு மேலும் அதிக வருவாய் ஈட்டக்கூடிய பல நவீன துறைகளில் ஈடுபட்டு உள்ளனர். எனவே, தற்போது திருக்கோயில்களில் முறையாக வேத ஆகமம் மற்றம் சாஸ்திரங்களைக் கற்றுத் தெளிந்த வல்லுநர்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, வேத ஆகமம் மற்றும் சாஸ்திரங்களில் முழுமையான

தேர்ச்சி பெற ஒரு வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை அமைத்து ஆதரவளிப்பது காலத்தின் கட்டாயம் எனக் கருதுகிறேன். இதன்படி (Tamil Nadu Institute of Vedic Science) என்ற ஒரு அமைப்பினை நமது மாநிலத்தின் தக்கதொரு இடத்தில் நிறுவுவது ஒரு அத்தியாவசியத் தேவையாகும். இந்தத் திட்டத்தில் வேதம், ஆகம சாஸ்திரம், வேதத்தின் உபசாஸ்திரம், திருமுறைகள் மற்றும் நாலாயிரத் திவ்யபிரபந்தங்கள் ஆகிய பாடத் திட்டங்கள் அமையும். சமஸ்கிருத மொழியிலுள்ள வேத ஆகம சாஸ்திரங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லோரும் எளிதில் கற்றுக்கொண்டு சிறிய திருக்கோயில்களில் கூட சாஸ்திர முறையில் பூசைகள், வழிபாடுகள் நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்படும். நிதி உபரியாக உள்ள திருக்கோயில்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாகத் திரட்டி இத்திட்ட வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படுமென்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட அரசு சார்ந்த மற்றும் அரசு சார்பற்ற நடவடிக்கைகள் மூலம் தமிழ் நாட்டில் கலைப்பொக்கிஷமாகத் திகழும் திருக்கோயில்களைப் பழுதடையாமல் பாதுகாக்கவும், கோயில்களின் கலாச்சாரத்தை, தொன்மையைக் காலவெள்ளம் அழித்து விடாமல் அரவணைக்கவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சட்டப் பேரவையில்...



மிகவும் மோசமாகப் பழுதுபட்டுள்ள சாலைகளைத் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் செப்பனிட்டுப் பராமரிக்கும் ஏற்பாடு முதன் முதலாகச் சோதனை அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் (28.9.91) சட்டப் பேரவையில் அறிவித்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட மாவட்டத்திலுள்ள சாலைகளைத் தனியார் தொழில் நிறுவனங்கள் அல்லது தொழில் அதிபர்கள் செலவு செய்து, செப்பனிட்டுப் பராமரிப்பார்கள். இதற்காக அந்தச் சாலைகளில் அவர்கள் ஒரு சிறிய அளவுக்குச் சுங்கக் கட்டணம் வசூலிக்கவும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் அறிவித்தார்.

தமிழகத்தில் பட்டு நெசவுக்குத் தேவையான கச்சாப்பொருள் தட்டுப்பாட்டைச் சமாளிக்கக் கொடைக்கானல், குன்னூர் ஆகிய மலைப் பகுதிகளில் அரசு நிலத்தைக்கையகப்படுத்திப் பட்டுப் புழு வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. முகமது ஆசிப் அவர்கள் சட்டப்பேரவையில் (26.9.'91) தெரிவித்தார்.

சென்னை மெரீனா கடற்கரையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கடல்மீன் அருங்காட்சியகம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு வனம் மற்றும் மீன் வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்கள் சட்டப்பேரவையில் (26.9.'91) அறிவித்தார்.

காவல் துறையில் பணியாற்றும்போது வீர மரணம் அடையும் காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் (24.9.'91) அறிவித்தார்.

மிக அதிக பட்ச விளைச்சலை ஈட்டித்தரும் விவசாயிகளுக்குப் பத்து இலட்சம் ரூபாய் வரை பரிசுகள் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பரிசுகளை இந்த ஆண்டுமுதல் தமிழக முதல்வர் அளிக்க இருக்கிறார் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் சட்டப்பேரவையில் (25.9.'91) அறிவித்தார்.



# 37-ஆவது

# காமன்வெல்த்

# பாராளுமன்ற மாநாடு

பேராசிரியர் க. பொன்னுசாமி
பேரவைத் துணைத் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு புதுடெல்லி அசோகா ஓட்டல் மாநாட்டு அரங்கினில் 23.9.91 முதல் 28.9.91 வரை நடைபெற்றது.

1991-92-ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் உறுப்பு நாடான இந்தியாவின், தமிழ்நாட்டின் சார்பில் நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் அரிய வாய்ப்பினைப் பெற்றமைக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கு எனது நன்றியினைக் காணிக்கையாக அவரது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

காமன்வெல்த் பாராளுமன்ற அமைப்பு 1911-இல் நிறுவப்பட்டு எம்பயர் பாராளுமன்ற சங்கமாக யுனைடெட் கிங்டம் பிரிவினால் நிர்வாகம் செய்யப்பட்டு 1948 முதல் தற்போதைய பெயருடன் செயல்பட்டு வருகிறது.

பாராளுமன்ற ஜனநாயகத்தினை நடைமுறைப் படுத்தும் காமன்வெல்த் நாடுகளைச் சார்ந்த பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் உறுப்பினராகத் தகுதி பெற்றவர்கள் ஆவர். தற்போது 50 நாடுகளைக் கொண்ட காமன்வெல்த்தில் 47 நாடுகள் காமன்வெல்த் பாராளுமன்ற நாடுகளாக உள்ளன.

அரசியலமைப்பு சட்டம், சட்டமன்றம், பொருளாதாரம், சமூகம் மற்றும் பண்பாட்டு அமைப்புகளை, பாராளுமன்ற ஜனநாயக நெறிப்படி, காமன்வெல்த் நாடுகள் விரிவாக அறியவும், பயிலவும் இச்சங்கம் பணியாற்றுகிறது.

37-வது காமன்வெல்த் பாராளுமன்ற கூட்டத்தில் 23.9.91 முதல் 27.9.91 வரை கீழ்க்கண்ட பொருள்கள் மீது விவாதங்கள் மேற்கொள்ளப் பட்டன.

1. வளைகுடா நெருக்கடி
2. தென் ஆப்பிரிக்காவில் சீர்த்திருத்தங்கள்
3. உலகில் தற்போதைய அகதிகள் பிரச்சினை
4. ஜனநாயகத்தில் பத்திரிகைகளின் பங்கு
5. மக்கள் தொகை அதிகரிப்பாலும், தொழில்



★ நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் உள்ளத் திற்கும் உலகத்திற்கும் உண்மையாக நடந்து கொள்ளுங்கள்.

—அண்ணல் காந்தியடிகள்

வளர்ச்சியாலும் நகரமைப்பு அமைப்பாலும் ஏற்படும் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு
6. வளரும் நாடுகளில் சுகாதார நலன்களை உயர்த்துதல்
7. உணவு. உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்தல் தொடர்பாக காமன்வெல்த் பாராளுமன்ற நாடு களின் பணி
8. போதை மருந்து பிரச்சினை மற்றும் குற்றவியல் நடவடிக்கை
9. சிறிய காமன்வெல்த் உறுப்பு நாடுகளின் ஜனநாயகத்தினைப் பலப்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
10. மகளிர் மற்றும் குழந்தைகள் மீதான வன் முறை

*23.9.91* அன்று பாராளுமன்ற மத்திய அரங்கில் பாரத குடியரசுத் தலைவர் மேதகு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் 37-வது காமன் வெல்த் பாராளுமன்ற மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். அன்று மதியம் ''வளைகுடா நெருக் கடி'' தொடர்பாக விவாதம் மேற்கொள்ளப் பட்டது.

*24.9.91* அன்று காலை ''தென் ஆப்பிரிக்கா வில் சீர்திருத்தங்கள்'' 'தலைப்பிலும், மாலை, ''உலகில் தற்போதைய அகதிகள் பிரச்சினை'', மற்றும் ''ஜனநாயகத்தில் பத்திரிக்கைகளின் பங்கு''தொடர்பாகவும் விவாதம் மேற்கொள்ளப் பட்டது. அன்று மாலை சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் பாரத குடியரசு துணைத் தலைவர் மேதகு சங்கர் தயாள் சர்மா அவர்கள் விருந்து அளித்தார்.

*25.9.91* அன்று காலை ''சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பும்'', ''சுகாதார நலன்களை வளரும் நாடுகளில் உயர்த்துதல்'', தொடர்பாக வும் விவாதம் நடைபெற்றது. அன்று மாலை நடந்த ''போதை மருந்து பிரச்சினைகள் மற்றும் குற்ற வியல் நடவடிக்கை'' தொடர்பான விவாதத்தில் நான் பங்கேற்று எனது கருத்துக்களைத் தெரி வித்தேன். அந்நிகழ்ச்சியில் நான் ஆற்றிய உரையின் சில முக்கிய குறிப்புகளைத் தெரிவிக் கிறேன்.

''துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்''

என்ற திருக்குறளுடன் எனது உரையினைத் தொடங்கினேன்.

''தொடர்ந்து போதை மருந்துகள் பயன்படுத்து வோர் பொதுவாழ்வில் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் ஆர்வமற்றவர்களாக இருப்பார்கள். சமூகப் பிரச்சினையில் விபசாரமும், சூதாட்டமும், போதை மருந்துகளுடன் தொடர்புடையவை. போதை மருந்து கடத்தல் என்பது மனிதநேயத் திற்கு எதிரான குற்றம் என உலகில் கருதப் படுகிறது. இந்தியாவில் கஞ்சாவும், ஒபியமும் பயன்படுத்தப்பட்டுவரும் போதைப் பொருள்கள் ஆகும்.

உயிர் குடிக்கும் போதை மருந்துகள் விற்பனை யால் பெறப்படும் பணத்தின் மீது மையல் கொண்டு போதை மருந்து கடத்தல்காரர்கள் கஞ்சாவினைப் பயிரிடுகிறார்கள்.

கஞ்சா பயிரிடுவது மண்வளம் பாதிக்கப்பட்டு மரங்கள் விழக் காரணமாகிறது. இந்தியாவில், சமீப ஆராய்ச்சியில் கடத்தலும் தீவிரவாதமும் போதை மருந்து கடத்தலுடன் தொடர்புடையதாக உள்ளன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதை மருந்துகள் கடத்தலினால் அதன் மூலம் பெறப்படும் அதிக அளவு பணத்துடன் குற்ற நடவடிக்கைகள், லஞ்சம், ஆயுதக்கடத்தல் மற்றும் தங்கக் கடத்தல் ஆகியவைகள் பெருகி வருகின்றன.

குடி மற்றும் போதை மருந்துகளினால் ஏற்படும் தீமைகளைத் தக்க விளம்பரங்களின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தி, போதை மருந்துப் பழக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். போதை மருந்துக் கடத்தலை தீவிர சட்டங்கள் மூலம் தடுக்கலாம். ஓர் வலுவான பெண்கள் இயக்கம் தொடங்கி, போதை மருந்துப் பழக்கத் தினை இந்தியாவிலிருந்து விரட்டப் போராட லாம்.''

அன்று மாலை குடியரசு தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் மேதகு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் விருந்தளித்தார்.

உலக அளவில் பல்வேறு அறிஞர்கள், சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரபலமான பிரமுகர்கள் கலந்து கொண்ட 37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு, விவாதத்தில் பங்குபெறும் வாய்ப்பினைப் பெற்ற நான் இதனை என் வாழ்நாளில் ஓர் முக்கிய நிகழ்ச்சியாக கருதுகிறேன்.

இவ்வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன். ●




# குடிசைப் பகுதியில் குடும்ப நலக் கருத்தரங்கம்

சென்னை மாநகராட்சியின் சார்பில் சைதாப்பேட்டை ஜோதியம்மாள் நகர் குடிசைப் பகுதியில் (25.9.91) குடும்பநலக் கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய தமிழ்நாடு திட்டக் குழுத் தலைவர் திரு. டி.வி.அந்தோணி குடும்ப நலத்தில், கேரளத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்றும் அடுத்த 5 ஆண்டுகளில் இப்போது 1000-க்கு 23.1 என்று உள்ள பிறப்புவிகிதம் ஆயிரத்துக்கு 16 அல்லது 17 ஆகக் குறையக் கூடும் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது: ''22 வயது முதல் 27 வயது வரை பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வயது என்றும், இக்காலக்கட்டத்தில் பிறக்கும் குழந்தைதான் அதிக எடையுடன் (குறைந்த அளவு 3 கிலோ) ஆரோக்கியமாகப் பிறக்கும். மேலும் பிறவியிலேயே இறக்கும் குழந்தை விகிதம் குறைவு. பெண்கள் 27 வயதுக்குள் குழந்தை பெறுவதை நிறுத்தி விட வேண்டும். அப்போதுதான் குடும்பம் அளவோடு வளமாக விளங்கும். தந்தை 58 வயதை - ஓய்வுபெறும் வயதை - அடையும்போது குழந்தைகள் 25 வயதினராகி குடும்பப் பொறுப்பை ஏற்க இயலும். பெண் திருமணம் செய்து கொள்ள ஏற்ற வயது 21. அப்போதுதான் பெண் 3 கிலோ எடைக்குக் குறையாத ஆரோக்கியமான குழந்தையைப் பெறமுடியும். முதல் குழந்தை பிறந்தவுடன் தேவையானால் அடுத்த குழந்தை 3 ஆண்டு இடைவெளிக்குப் பிறகே பெறவேண்டும். அப்போதுதான் தாய்சேய் நலமுடன் வாழ முடியும். 4 அல்லது 5 குழந்தைகள் பெறுவோர்க்கு கருவாய்ப் புற்று நோய் வரவும்கூட வாய்ப்புள்ளது''. என்றும் கூறினார்.

கருத்தரங்கத்திற்கு மாநகராட்சி ஆணையர் திரு. மா.இராமு தலைமை வகித்தார்.

இவ்விழாவில் இந்திய மக்கள் தொகைத் திட்ட இயக்குநர் திரு. வி.கே.சுப்பராஜ், சைதை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே.பாலன், இந்திய மக்கள் தொகைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர். ஹைமாபாலச் சந்தர் ஆகியோரும் பேசினார்கள்.

விழாவில் முன்மாதிரித் தாய்மார்கள், ஆரோக்கியமான குழந்தைகள், பொதுமக்களிடையே புகைப் பழக்கத்தைப் போக்கப் பிரச்சாரம் செய்த நரிக்குறவர் இன மாணவ, மாணவியர்கள் ஆகியோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. காலை 8.00 மணிமுதல் 1.00 மணி வரை மருத்துவப் பரிசோதனை முகாம், சத்துணவு, குடும்ப நலக் கண்காட்சி, ''திரைக்கதம்பம்'' படக்காட்சி, கலை நிகழ்ச்சி, மரம் நடுதல் ஆகியவையும் நடைபெற்றன.

விழா முடிவில்- துணைத் தகவல் தொடர்பு அலுவலர் திரு. தாமோதரன் நன்றி கூறினார்.



## வட சென்னையில்

## 30,000

## குழந்தைகளுக்குத்

## தட்டம்மைத்

## தடுப்பூசி

சென்னை மாநகராட்சியும், அரிமாச் சங்கங்களும் இணைந்து நடத்தும் தட்டம்மைத் தடுப்பூசி முகாம் 18.9.91 அன்று வட சென்னையில் இராயபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த ஆண்டு வடசென்னையில் ஒரு வயதுக்குட்பட்ட 30,000 குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தட்டம்மைத் தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியம் என்றும், இந்நோயால் கண்பார்வை இழப்பு, வயிற்றுப்போக்கு போன்றவை ஏற்படும், பொதுமக்கள் மாநகராட்சியோடு ஒத்துழைத்துத் தம் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட்டுக்கொண்டு அக்கம்பக்கத்திலுள்ளோருக்கும் இதை எடுத்துக்கூறி இந்நோயை அறவே ஒழிக்கப் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.மா.இராமு.



# மாநிலத்தின் மறுமலர்ச்சி மகத்தான தொழில் வளர்ச்சி

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

**தொழில்துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் *19.9.91* அன்று சட்டப் பேரவையில் பேசியதாவது:**

தமிழகத்தில் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்திட வேண்டும், இதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் எண்ணற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் ஓர் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திட வேண்டும் என்பது இந்த அரசின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று. இப்பணியில் தொழில்துறை ஒரு சிறப்பான பங்கினை ஏற்றிட வேண்டும், முக்கியமான சாதனமாகப் பணியாற்றிட வேண்டும் என்று திட்டவட்டமான கருத்தினை இந்த அரசு கொண்டுள்ளது.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை, எங்கள் கட்சியின் அணுகுமுறை தேர்தல் அறிக்கையிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சான்றாக, புதிய தொழில் முனைவோர் ஊக்குவிக்கப்படுவர்; தொழில்கள் தோன்றி, வளர்ந்திட அரசு இயந்திரமோ, அல்லது விதிகளோ ஓர் தடையாக இருக்கலாகாது; அரசு அதிகாரிகள் தொழில் முனைவோருக்குத் தேவையான உதவிகளை நல்கி, உற்ற நண்பர்களாகச் செயலாற்றுமாறு அறிவுறுத்தப்படுவர். பெருரகத் தொழில்களைத் துவக்கிடத் தடையேதும் இராது; தமிழகத்தில் மேலும் அதிக அளவிற்குத் தொழில்களில் முதலீடு செய்யவேண்டுமென்று மைய அரசு கோரப்படும்; நாட்டின் இதர பாகங்களிலிருந்து தொழில் முனைவோர், அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள் இவர்களெல்லாம் உதவிகள் அளிக்கப்பட்டுத் தமிழகத்தில் சிறிய, பெரிய தொழில்களைத் துவக்குமாறு ஊக்குவிக்கப்படுவர்; மற்றும் ஏற்றுமதி சார்புடைய தொழில்களுக்கும், அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய தொழில்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பன போன்ற கருத்துக்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் செயற்படுத்திட, அரசு முனைப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பதவியேற்ற ஒரு சில நாட்களுக்குள்ளாகவே (6.7.91 அன்று) பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில் அதிபர்களைக் கருத்துப் பரிமாற்றத்திற்கென அழைத்திருந்தேன். இது அரசின் திட்டவட்டமான அணுகுமுறையை அவர்களுக்குத் தெளிவுபடுத்திடவும், அவர்தம் பிரச்சினைகளையும், குறைகளையும் நேரிடையாகக் கேட்டு அறியவும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டவும் ஓர் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தது. தொழில் வளர்ச்சி விரைவு பெற்றிட வேண்டும், அதன் பயன் பிற்பட்ட பகுதிகளுக்கெல்லாம் பரவிட வேண்டும் என்பது அரசின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள எந்த ஒரு தொழிலும் தமிழகத்தில் தோன்றி, வளர்ந்திட எதுவும் தடையாக இருக்காது என்பனவெல்லாம் அவர்களுக்கு அது சமயத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன; மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

பெரிய தொழில்களும், மிகப் பெரிய தொழில்களும் அமைந்தால் தான் அவற்றைச் சார்ந்து சிறு தொழில்களும், துணைத் தொழில்களும் வளர்ந்திட இயலும். இதனைக் கருத்திற்கொண்டு, மிகப்பெரிய தொழில்களுக்கு, அதாவது ரூ.50 கோடிக்கு மேற்பட்டு ரூ.100 கோடிக்கு உட்பட்ட முதலீடுள்ள தொழில்களுக்குச் சிறப்பு முதலீட்டு உதவித் தொகையாக ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட முதலீடு கொண்ட தொழில்களுக்கு உதவித் தொகையாக ரூ.50 இலட்சமும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இவற்றிற்கு முறையே 5 ஆண்டு விற்பனை வரி விலக்கு அல்லது 10 ஆண்டுகளுக்குத் தள்ளி வைத்தல், 6 ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக்கு வரி தள்ளிவைப்பு போன்ற வசதி அளிக்கப்படும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குப் போதிய அளவில் மின்சக்தி கிடைத்திட

வேண்டியது மிகவும் அவசியம் என்பதனை அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு செயல்பாட்டிலுள்ள திட்டங்களை விரைவு படுத்திடவும், புதிய திட்டங்களை உருவாக்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சக்தி உற்பத்தியில் தனியார் முயற்சியை ஊக்குவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மகளிர்தம் ஈடுபாட்டினை மேம்படுத்த சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த ஆண்டில் 800 மகளிர் தொழில் முனைவோருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த கீழ்க்காணும் முடிவுகளையும் அரசு எடுத்துள்ளது:-

தொழில்கள் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தோன்றி, வளர்ந்திட அடிப்படைத் தேவைகள் போதிய அளவில் கிடைக்கப் பெறுதல் மிகவும் அவசியமாகும். இதற்கென அடிப்படை வசதி அமைப்பு நிறுவனம் ஒன்று அமைக்கப்படும். இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டு முதலீட்டாளர்கள், அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள், தொழில் முனைவோர் இவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், தேவையான உரிமங்களையும் ஒப்புதல்களையும் பெற்றுத்தருதல், இவற்றிற்கெனத் தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதன்மூலம் தமிழகத்தில் நடைமுறை இடர்ப்பாடுகள் இன்றித் தொழில்கள் மலர்ந்திட இயலும் என்று அரசு கருதுகிறது.

**உதவித் தொகை**

அ. தற்போது 31 மிகவும் பிற்பட்ட வட்டங்கள் உள்ளிட்ட 107 பிற்பட்ட வட்டங்களிலும், அரசுத் தொழில்பேட்டைகள் போன்றவற்றிலும் முதலீட்டு உதவித் தொகை முதலீட்டில் 15 விழுக்காடு உச்ச அளவாக ரூ.15 இலட்சம் அளிக்கப்படுகிறது. மிகவும் பிற்பட்ட வட்டங்களில் அமைந்திடும் தொழில்களுக்கு உதவித் தொகை முதலீட்டில் 20 விழுக்காடு உச்ச அளவு ரூ.20 இலட்சமாக இனி உயர்த்தப்படும்.

ஆ. தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 30 விழுக்காட்டிற்கு மேல் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக முதலீட்டில் 5 விழுக்காடு உச்ச அளவாக ரூ.5 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்படும். ஆனால் பொதுவாக ஏற்கெனவே மகளிருக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் அளித்து வந்துள்ள தைக்கப்பட்ட ஆடைகள், கையால் தீப்பெட்டி செய்தல் போன்ற தொழில்கள் இவற்றில் அடங்கா.

இ. மின்னணுத் தொழில், தோல் தொழில் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கெனச் சிறப்பு முதலீட்டு உதவித் தொகை வழங்கிடும் திட்டம் செயற்பாட்டில் உள்ளது. கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர், பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் போன்ற தொழில்கள் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ளவை என்ற அடிப்படையில் முன்னுரிமை பெறவேண்டிய தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அளித்திடும்.

ஈ. அரசு சார்புடைய எல்லாப் புதிய தொழிற்பேட்டைகளிலும், தொழில் மையங்களிலும், தொழிற்கூடங்கள் மற்றும் மனைகள் இவற்றில் 30 விழுக்காடு மகளிருக்கு ஒதுக்கப்படும்.

புதிய தொழில்களை ஊக்குவிப்பது எந்த அளவிற்கு முக்கியமோ அந்த அளவிற்கு ஏற்கெனவே உள்ள தொழில்களும் சரிவரச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் விளைவாக ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் விரைவில் செயல்படத் துவங்கும். இதற்கான பூர்வாங்க வேலைகள் கடந்த மாதத்திலேயே துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி நிறுவனம் (டிட்கோ) ரூ. 600 கோடி மொத்த முதலீடு கொண்ட 9 தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும். இந்நிறுவனத்துடன் இணைந்து முதலீடு செய்யக்கூடிய தொழில் முனைவோர்களைத் தொடர்பு கொள்ளுமாறு இந்நிறுவனம் செய்தித்தாள்களில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம் இது சம்பந்தமாக மேல்நடவடிக்கை எடுக்கும்.

ரூ.5,000 கோடி முதலீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பழுப்பு நிலக்கரி வளத்தை அடிப்படையாகக் கொண்டு 1,500 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்திடும் திட்டத்தை டிட்கோ நிறுவனம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத்துறையில் செயல்படுத்திடுதல் அரசின் பரிசீலனையில் உள்ளது. முதல் கட்டமாக ரூ.1,500 கோடி முதலீட்டில் 500 மெகாவாட் உற்பத்தியை இது மேற்கொள்ளும். இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு மைய அரசு கோரப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ரூ.395 கோடி

- **இந்த ஆண்டில் 800 மகளிர் தொழில் முனைவோருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.**

- **தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.**

செலவில் அதன் வருடாந்திர உற்பத்தித் திறனை 90,000 மெட்ரிக் டன்னிலிருந்து 1,80,000 மெட்ரிக் டன்னாக இரட்டிப்பாக்கத் திட்டம் கொண்டுள்ளது. இது சம்பந்தமான பணிகள் இவ்வாண்டில் துவங்கும்.

சென்னைக்கு அருகில் சோளிங்கநல்லூரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.40.65 கோடி முதலீட்டில் மின்னணுத் தொழில் நகரம் ஒன்றினைத் தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் அமைத்திடும், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய மின்னணுத் தொழில்கள் ஒரே மையத்தில் அமைந்திட இது வழிவகுக்கும். இங்கு தேவையான எல்லா அடிப்படை வசதிகளும் அமைத்துத் தரப்படும்.

ரூ.25 கோடி முதலீட்டில் இத்தாலிய அரசு மற்றும் மைய அரசு உதவியுடன் கம்ப்யூட்டர் மூலம் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிலையம் ஒன்று அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. தமிழ்நாட்டில் பொறியியல் தொழில்களுக்குத் தேவையான கருவிகள், அச்சுகள் மற்றும் மோல்டுகள் இவற்றை இது உற்பத்தி செய்ய உதவும்.

தமிழ்நாடு கனிம வள நிறுவனம் (டாமின்) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் (சிவகங்கையில்) ரூ.15 கோடி முதலீட்டில் கிரானைட் பெனிபிசியேசன் திட்டம் ஒன்றினை அமைத்திட இந்த ஆண்டில் பணிகளைத் துவக்கும். இது முழு வடிவில் அமைந்திடும் போது ரூ.200 கோடிக்கு மேற்பட்ட முதலீட்டில் உயர் தொழில்நுட்பம் கொண்ட பல சார்புத் தொழில்கள் உருவாகிட வழிபிறக்கும்.

இதைத்தவிர, வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் கிரானைட் பாறைகள் வெட்டி மெருகேற்றும் பிரிவுகளை அமைத்திடும். தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் அருகே மாதப்பள்ளி கிராமத்தில் ரூ.15 கோடி முதலீட்டில் கிரானைட் தொழில் மையம் அமைத்திட அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சென்னையில் தரமணியில் ரூ.25 கோடி முதலீட்டில் ஓர் நிரந்தர வாணிபப் பொருட்காட்சி வளாகம் அமைக்கப்படும். இது மாநில அரசும், மைய அரசின்

- **சென்னைக்கு அருகில் சோளிங்கநல்லூரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.40.65 கோடி முதலீட்டில் மின்னணுத் தொழில் நகரம் ஒன்று அமைக்கப்படும்.**
- **சென்னை தரமணியில் ரூ.25 கோடி முதலீட்டில் ஓர் நிரந்தர வாணிபப் பொருட்காட்சி வளாகம் அமைக்கப்படும்.**

டிரேட் ஃபேர் அத்தாரிட்டியும் இணைந்து கூட்டுத்துறையில் அமைத்திடும் திட்டமாகும். இதில் பொருட்காட்சியகத்தோடு, பெரிய கூட்ட அரங்கு, புதுடெல்லியில் உள்ள அப்பு-கர் (Appu-Ghar) போன்ற பொழுதுபோக்குப் பூங்கா போன்றவை அடங்கும். இது சம்பந்தமான ஒப்பந்த மடல் டிரேட் ஃபேர் அத்தாரிட்டியுடன் ஒப்பமிடப்பட்டுள்ளது. இந்த வளாகம் சம்பந்தமான வேலைகள் விரைவில் துவங்கும்.

காக்களூரில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்றுமதி சார்புடைய ஆடைகள் உற்பத்தித் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்படும். இது பெருவாரியான வேலைவாய்ப்பினுக்கு வழிவகுப்பதோடு, நாட்டிற்கு அவசியமாகத் தேவைப்படும் அந்நியச் செலாவணியை ஈட்டவும் வகை செய்யும். இது சம்பந்தமான வேலைகளை சிட்கோ நிறுவனம் மேற்கொள்ளும்.

ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி நவீன மாதிரிகள் மற்றும் வடிவமைப்புகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் ஒன்று அரசால் அமைக்கப்படும். நெசவுத் தொழில் பொருள்களைப் பொறுத்தவரை, 1989-90-இல் நாட்டின் மொத்த ஏற்றுமதி ரூ.6,987 கோடியாகும். இதில் தமிழகத்தின் பங்கு ரூ.1,240 கோடியாகும். அதாவது 18 விழுக்காடு ஆகும். இதில் பருத்தி ஆடைகள் ஏற்றுமதி மட்டும் ரூ.500 கோடியாகும். பன்னாட்டுச் சந்தையில், நமது ஆடைகளும், தோல் பொருள்களும் இன்னும் அதிக அளவில் விலை போக வேண்டுமானால் அவை

மாறிவரும் நவீனத் தேவைகளை நிறைவு செய்திடக்கூடிய வகையில் அமைந்திட வேண்டும். எனவே அயல்நாட்டுச் சந்தைகளின் தேவைக்கேற்ப நமது பொருள்களை உருவாக்கக்கூடிய திறன்பெற்ற மனித வளத்தை உருவாக்க இம்மையம் வகைசெய்யும். இது புதுடெல்லியிலுள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஃபாசன் டெக்னாலஜி (N.I.F.T.) நிலையத்தைப் போன்று அமையப் பெறும்.

பொருள் உற்பத்தியை அதிகரிப்பதிலும், குறைந்த முதலீட்டில் பரவலான முறையில் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் இவற்றின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதனை அரசு உணர்ந்துள்ளது. இவற்றின் வளர்ச்சியினை மேம்படுத்தக்கூடிய வகையில் நடைமுறைகளை எளிதாக்குதல், நவீன உத்திகளில் பயிற்சி அளித்தல், மூலப்பொருள்கள் போதுமான அளவில் கிடைக்கச் செய்தல், பொருள் விற்பனைக்கு உதவி அளித்தல், ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்றவற்றிற்கு அரசு முக்கியத்துவம் அளித்திடும்.

தற்போது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு-குறிப்பாக, சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு உரிய முயற்சிகளை மேற்கொண்டிடும் பணியில் 19 மாவட்டத் தொழில் மையங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றின் செயல் திறனை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்கென அரசு

கீழ்க்காணும் திட்டங்களைச் செயல் படுத்தும்:

அ. அடுத்த 5 ஆண்டுகளில் மாநிலத்தில் ஒரு இலட்சம் சிறு மற்றும் ஊரகத் தொழில்கள் அமைக் கப்படும். இவற்றின் மூலம் உற் பத்திப் பெருக்கம், பரவலான வேலை வாய்ப்பு மற்றும் கூடுதலான ஏற்று மதி இவற்றிற்கு வழிவகுக்கப்படும்.

ஆ. பிற்பட்ட பகுதிகளில் வளர்ச் சியினை ஊக்குவிக்கும் நோக்குடன், 107 பிற்பட்ட வட்டங்கள் ஒவ் வொன்றிலும் அடிப்படை வசதி களுடன் கூடிய குறைந்தது 10 தொழிற்கூடங்களாவது அமைத்துத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 1,070 தொழிற் கூடங்கள் பிற்பட்ட பகுதிகளில் உருவாகும்.

இ. இந்த 107 வட்டங்கள் ஒவ் வொன்றிலும் தொழில்களுக்குரிய மின் இணைப்பு வசதி (Industrial feeder) குறைந்தது ஒன்றாவது அமைத்துத் தரப்படும்.

ஈ. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் செயல்படும் ஒருமுனைத் தீர்வுக் குழுக்களின் (Single Window Committees) செயல்திறன் தேவை யான உரிமங்களும், ஒப்புதல்களும், விரைவாகவும் குறிப்பிட்ட கால அளவுகளுக்குள்ளும் கிடைத்திடக் கூடிய வகையில் மேம்படுத்தப்படும். முடிவுகளை மாவட்ட நிலையிலேயே மேற்கொள்ளக்கூடிய வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படும். விண்ணப்பப்படிவங்களும் எளிது படுத்தப்படும்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சி யின் வேகம் விரைவுபட வேண்டு மானால் இதில் மைய அரசின் முதலீடு மிகவும் முக்கியமான பங் கினை வகிக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழ கத்தில் மைய அரசின் முதலீடு எவ்வாறு குறைந்துள்ளது, இக்குறை யினைப் போக்க வேண்டியது எவ் வளவு அவசியம் என்பதையெல் லாம் மாண்புமிகு பிரதமர் அவர் களிடமும், சம்பந்தப்பட்ட மைய அமைச்சர் பெருமக்களிடமும் நேரி டையாக வலியுறுத்தியுள்ளேன்.

பாதுகாப்புத்துறை, தொலைத் தொடர்பு மற்றும் ரெயில் போக்கு வரத்துத் துறைகளின் முதலீட்டினை உயர்த்துமாறு மைய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

இதுவரை மேற்கொள்ளப்பட் டுள்ள நடவடிக்கைகளெல்லாம் பெரும் முயற்சிக்குரிய ஓர் சிறிய துவக்கமே. இது சம்பந்தமாகத் தொடர்ந்து பல முயற்சிகளை மேற் கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழகம் ஓர் உயர்ந்த நிலையை எய்திட வேண் டும் என்பது அரசின் திட்டவட்ட மான குறிக்கோளாகும். தமிழகத்தில் தொழில் உற்பத்தியினைப் பெருக்கு தல், உற்பத்தித் திறனை உயர்த் துதல், பல்லாயிரக்கணக்கான நபர் களுக்கு வேலைவாய்ப்பினை ஏற் படுத்துதல், நாட்டின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பொருள்கள் கூடுத லான பங்கினைப் பெறுதல் போன்ற குறிக்கோள்களை அடைந்திடத் தேவையான அனைத்து உதவிகளை யும் அளித்திட அரசு முன்வரும். இவற்றைப் பயன்படுத்தி, அரசுக்கு ஒத்துழைப்புத் தந்து செயலாற்ற வேண்டியது தொழில் முனைவோரின் பொறுப்பாகும்.

**தொழிற்சாலைகள் சட்டத் திருத்தம்**

மிகச் சிறிய தொழிற்பிரிவுகள், தொழிற்சாலைகள் சட்டத்திலிருந்து விலக்குப் பெற ஏதுவாகத் தொழிற் சாலைகள் சட்டத்தின்படி குறிப்பிட் டுள்ள குறைந்தபட்சத் தொழிலாளர் களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அதற்கேற்பத் தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டும் எனவும் சிறு தொழில் சங்கங்கள் விடுத்திருந்த கோரிக் கையை ஏற்க அரசு முடிவு செய்துள் ளது. இத்திருத்தம் கொண்டுவரப் பட்ட பின், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஈர்க்கப்படும் வரம்பு, மின்சக்தி கொண்ட தொழிற்பிரிவு களின் தற்போதுள்ள எண்ணிக்கை அளவான 10 தொழிலாளர்களுக் குப் பதில் 25 தொழிலாளர்களாக வும், மின்சக்தி அற்ற தொழிற்பிரிவு களில் தற்போதுள்ள எண்ணிக்கை அளவான 20 தொழிலாளர்களுக் குப் பதிலாக 50 தொழிலாளர்களா கவும் இருக்கும். 10 குதிரைத் திறன் வரை பயன்படுத்தும் தொழிற் சாலைகள், மின்சக்தியைப் பயன் படுத்தாத தொழிற்சாலைகளாகக் கருதப்படும். ●

## சேமித்து வைப்பதே சிறந்த வருமானம்!

பணம் செலவு செய்வதை எழுதி வை; செலவு செய்தது அவசியம் தானா என்பதை எண்ணிப் பார்; சிக்கனம் தானாக வந்து விடும்!

—காந்தியடிகள்

திறமையற்றவர்கள் சிக்கனமாயிருக்க முடிவ தில்லை; சிக்கனமில்லாதவர்களிடம் பணம் தங்கு வதில்லை.

—சிங்-செள

சீராகச் செலவு செய்து சேமித்து வைப்பதே ஒரு சிறந்த வருமானம்.

—எட்மண்ட்பர்க்

வறுமையை விட, சிக்கனமின்மை மிகக் கொடியது.

—சிங்-செள


பைசாவை நீ பத்திரப்படுத்தினால் போதும், ரூபாய்கள் தாங்களே தங்களைக் கவனித்துக் கொள்ளும்.

—ஃபிராங்க்லின்

சிக்கனம் வாழ்க்கைப் போராட்டத்தில் பாதி யாகும். பணம் தேடுதல் அவ்வளவு கஷ்டமன்று, அதை முறையாகச் செலவழிப்பதே கஷ்டம்.

—ஸ்பர்ஜியன்

# கரும்பு உற்பத்தி




நமது நாட்டின் மிக முக்கிய பயிர்களில் ஒன்றான கரும்பு உற்பத்தியின் விலை மதிப்பானது, நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியின் விலை மதிப்பில் சுமார் 7 சதவிகித மாக உள்ளது. நாட்டில் கரும்புப் பயிரைச் சாகுபடி செய்வதில் சுமார் இரண்டரைக் கோடி விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கரும்பு பயிரானது, பூமத்திய ரேகையின் இரு பக்கங்களிலும் உள்ள வெப்பப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தியாவிலும் சில பசுபிக் தீவுகளிலும்தான் கரும்பு முதன் முதலாகச் சாகுபடி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்துதான் கரும்புச் சாகுபடியானது சீனாவிலும் அரபு நாடுகளிலும் பரவியது. பின்னர் கரும்புப் பயிரை சிசிலி தீவிலும், ஸ்பெயின் நாட்டு தென் பகுதியிலும் அராபியர்கள் கொண்டு போய் சாகுபடி செய்ய ஆரம்பித்தனர்.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கரும்புச் சாகுபடி, மேற்கு இந்தியத் தீவுகளுக்குப் பரவியது. அந்தத் தீவுகளில் முதன் முதலாக பார்படோஸ் பகுதியில் பயிரிடப்பட்டது. இந்தியா மட்டுமல்லாமல் பிரேசில், கியூபா, பாகிஸ்தான், மெக்சிகோ, பிலிபைன்ஸ், தாய்லாந்து, சீனா, அர்ஜென்டினா, அமெரிக்கா, கொலம்பியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் கரும்பைப் பயிரிடும் முக்கிய நாடுகளாகும்.

**கரும்பு பயிராகும் பகுதிகள்**

இந்தியாவில் மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மட்டுமல்லாமல் பஞ்சாப், அரியானா, உத்திரப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் கரும்பு பயிராகிறது.

நாட்டில் கரும்பு பயிராகும் மொத்த நிலப்பரப்பில் பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பு, உத்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரத்தில் பத்து சதவிகித நிலங்கள் உள்ளன. நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் 45.5 சதவிகிதத்தை உத்திரப்பிரதேசமும் சுமார் 13 சதவிகிதத்தை மகாராஷ்டிரமும் உற்பத்தி செய்கின்றன.

பல்வேறு தட்ப வெப்ப நிலைகள் காரணமாக, கரும்புப் பயிர் ஜூலை

• • •

**கரும்பு உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கரும்பு வளர்ச்சியில், சர்க்கரை ஆலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு முதல் செய்துள்ளதன் விளைவாக, சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்புச் சாகுபடியாளர்களுக்கும் பெரும்பலன்கள் ஏற்பட்டுள்ளன.**

• • •

மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரைதான் வளருகிறது. உத்திரப் பிரதேசத்தில் கரும்பு பயிரிடப்படும் நிலங்களில் சுமார் 70 முதல் 75 சதவிகிதம் வரை நீர்ப்பாசன வசதி பெறும் நிலமாகும். அதைப்போல பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்களில் கரும்பு பயிராகும் நிலங்களில் சுமார் 85 முதல் 90 சதவிகித நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களாகும். பீகார் மாநிலத்தில் இந்த அளவு சுமார் 25 சதவிகிதமாக உள்ளது.

### சர்க்கரைத் தொழில் வளர்ச்சி

இந்தியாவில் முதலாவது நவீன சர்க்கரை ஆலையானது உத்திரப் பிரதேசத்தில் 1903-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1932-ஆம் ஆண்டு வரை நாட்டில் சர்க்கரைத் தொழில் மிகவும் மெதுவாகவே வளர்ந்தது. 1950-51-ஆம் ஆண்டு வாக்கில் நாட்டில் இந்தச் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 139 தான். அவற்றில் உற்பத்தியான சர்க்கரையின் அளவு 11,34,000 டன்தான். ஆனால் இன்றோ இந்தியாவில் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 350ஆக உயர்ந்துள்ளது. அவற்றின் உற்பத்தி சக்தி சுமார் 73 இலட்சம் டன். 1981-82-ஆம் ஆண்டில் இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி 84 இலட்சம் டன்னைத் தாண்டிவிட்டது. அதாவது பிரேசில், கியூபா ஆகிய நாடுகளையும் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா முந்திவிட்டது.

கரும்பு உற்பத்தியான நிலங்களின் பரப்பு, உற்பத்தியளவு ஆகிய வற்றைப் பொறுத்தவரை 1980-90-ஆம் ஆண்டு காலகட்டத்தில் தாறுமாறான நிலை காணப்பட்டது. 1981-82-ஆம் ஆண்டில் கரும்புச் சாகுபடியான நிலப்பரப்பு 31 இலட்சத்து 90 ஆயிரம் இருந்தது. அதற்கடுத்த ஆண்டில் இந்த அளவு 33 இலட்சத்து 60 ஆயிரம் எக்டேராக உயர்ந்தது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த அளவு படிப்படியாகக் குறைந்து 1985-86-ஆம் ஆண்டில் 28 இலட்சத்து 50 ஆயிரம் எக்டேர் அளவாக ஆயிற்று. 1986-87-ஆம் ஆண்டிலிருந்து இந்த அளவு ஏறுமுகமாயிற்று. 1989-90-ஆம் ஆண்டு இந்த அளவு 34 இலட்சத்து 10 ஆயிரம் எக்டேராக உயர்ந்தது. அதைப்போல 1982-83-ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தியளவு 18 கோடி 95 இலட்சம் டன்னாக இருந்தது. ஆனால், இந்த அளவு 1984-85-ஆம் ஆண்டில் 17 கோடியே 3 இலட்சத்து 20 ஆயிரம் டன்னாகக் குறைந்தது, என்றாலும் 1988-89-ஆம் ஆண்டில் நிலைமை மேலும் வளர்ந்து இந்த உற்பத்தியானது 20 கோடி டன்னைத் தாண்டிவிட்டது.

> ★ **புதிய சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற மனப்பான்மை நமக்கு ஏற்பட வேண்டும்; பழைய வழக்கத்தை விடமாட்டேன்; ஆனால் புதுவாழ்வு மட்டும் வேண்டும் என்று சொல்லுவது எப்படிச் சரியாகும்?**
>
> **—காமராசர்**

1990-91-ஆம் ஆண்டில் கரும்பின் மொத்த உற்பத்தியானது சுமார் 23 கோடியே 34 இலட்சத்து 50 ஆயிரம் டன்னாக இருந்தது. ஆனால், குறியளவு 22 கோடி டன்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்க்கரை உற்பத்தி 1990-91-ஆம் ஆண்டில் இத்தகைய உச்ச அளவை எட்டியதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால், 1. சிறந்த வித்துக்கள் கிடைத்தன. 2. பயிர்களில் ஏற்பட்ட பூச்சிகளை ஒழிக்க பூச்சிக் கொல்லி மருந்துகளை உடனுக்குடன் தெளிப்பதில் சிறந்த பலன்கள் கிடைத்தன. 3. பயிர் நடுவதில் சரியான சமயம் பார்த்து பணி நடந்தது. 4. அறுவடை தக்க சமயத்தில் நடந்தது. 5. பயிரிடுவதில் நவீன முறைகள் பின்பற்றப்பட்டன. 1991-92-இல் கரும்பு உற்பத்தியளவு 23 கோடி டன் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### உற்பத்தித் திறனை உயர்த்துதல்

இரண்டாயிரம் ஆண்டு வாக்கில் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் தேவை அளவுகள் முறையே சுமார் 2 கோடியே 40 இலட்சம் டன், 2 கோடியே 99 இலட்சம் டன் ஆக இருக்கும் என்று தேசிய விவசாயக் கமிஷன் மதிப்பிட்டுள்ளது. இந்தத் தேவையைச் சமாளிப்பதற்காகச்சுமார் 35 கோடி டன் அளவுக்கு கரும்பை நாடு உற்பத்தி செய்ய வேண்டியிருக்கும். ஆகவே, உற்பத்தித் திறனைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கரும்பு சாகுபடியாகிற நிலங்களின் மொத்தப் பரப்பை உயர்த்துவது அநேகமாகச் சாத்தியம் ஆகாது. ஆகவே, உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டியது மிக அவசியமாகிறது.

நாட்டில் கரும்புப் பயிர் பற்றிய ஆராய்ச்சியை இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், மாநில அரசுகளின் வேளாண்மைத் துறைகள் ஆகியவை நடத்தி வருகின்றன. லக்னோவில் உள்ள இந்திய கரும்பு ஆராய்ச்சிக் கழகம், கோவையில் உள்ள கரும்பு பயிர்க் கழகம் ஆகிய இரண்டு மத்திய கழகங்கள் மட்டுமல்லாமல் ஏற்கெனவே உள்ள பழைய ஆராய்ச்சி நிலையங்கள், நாட்டில் கரும்பாராய்ச்சி விஷயத்தில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளன.

### ஆராய்ச்சி நிலையங்கள்

புதிய ஆராய்ச்சி நிலையங்கள் சில இடங்களில் அமைப்பது மட்டுமல்லாமல், பழைய ஆராய்ச்சி நிலையங்களை வளப்படுத்துவதற்கும் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கரும்புப் பயிர் வளர்ச்சியில், சர்க்கரை ஆலைகள் தங்கள் சொந்தப் பொறுப்பின் பாகமாகவே கருதி பல மாநிலங்களில் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. கரும்பு சாகுபடியாகும் நிலங்களின் பரப்பை விரிவாக்குவதில் இந்த நடவடிக்கைகள் பெருமளவுக்கு உதவுகின்றன. இதனால் கரும்பு உற்பத்தியும், சர்க்கரை உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

கரும்புப் பயிர் வளர்ச்சியில், சர்க்கரை ஆலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு முதலீடு செய்துள்ளதன் விளைவாக, சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்புச் சாகுபடியாளர்களுக்கும் பெரும் பலன்கள் ஏற்பட்டுள்ளன. கரும்பு உற்பத்தியாளர் சங்கங்களும், கரும்பு வளர்ச்சிக் கழகங்களும் சர்க்கரை ஆலைகளின் ஆதரவில் கரும்புப் பயிர் வளர்ச்சிப் பணியை நடத்துகின்றன.

**—பத்திரிகைத் தகவல் அலுவலகம்**

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்:

# எழுத்தறிவுத் திட்டம்

**'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதற்கிணங்க, எல்லார்க்கும் எழுத்தறிவு கிடைத்திட வேண்டும் என்னும் நோக்கில் 'அறிவொளித் தீபம் ஏற்றும் விழா' நடைபெறுகிறது. அதனை விளக்குகிறது இக்கட்டுரை.**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் முழு எழுத்தறிவுத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாவட்டத் தலைநகரான சிவகங்கையில் 14.4.91 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குத்சியா காந்தி, இ.ஆ.ப., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் சீரிய நோக்கம், எழுத்தறிவற்றவர்களுக்குக் கல்வி அறிவை வழங்குவதே ஆகும்.

இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 10,74,989 பேர்கள் ஆகும். மத்திய, மாநில அரசுகளால் இம்மாவட்டம் இத்திட்டத்தைச் செயல்படுத்திடத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தனிமனித முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் எழுத்தறிவு மிகவும் இன்றியமையாதது. உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் நம் நாட்டில்தான், எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்தியாவில் 1991-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் எழுத்தறிவுற்றோர் (15-35 வயது வரை) எவ்வளவு பேர்கள் உள்ளனர் என்பதைக் கண்டறிய 6.7.91 அன்று இம்மாவட்டம் முழுவதும் ஒரு நாள் புள்ளி விவரச் சேகரிப்புப் பணி நடைபெற்றது. இப்பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் 6.7.91 அன்று கொல்லங்குடியில் துவக்கி வைத்தார். இக்கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில் படிக்காதவர்களின் எண்ணிக்கை (15 முதல் 35 வயது வரை) ஒரு இலட்சத்து ஏழாயிரத்து நூற்று இருபத்து ஏழு) (1,07,127) பேர்கள் உள்ளனர். இதில் பெண்கள் 74,286, ஆண்கள் 32,841 பேர்கள்.

இவர்களுக்குக் கல்வி போதித்திட தொண்டுள்ளம் கொண்ட 12,000 தொண்டர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் சேவை மனப்பான்மை கொண்ட படித்தவர்கள் தாமாக முன்வந்து இப்பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.

எழுத்தறிவற்றவர்களைப் படிக்கத் தூண்டும் வகையில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்ற பேரணிகள், மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இம்மாவட்டத்தின் பல



வேறு பகுதிகளிலும் நடத்தப் பெற்றன. காரைக்குடியில் பெண்கள் பெருமளவில் பங்குபெற்ற மாவட்ட மகளிர் பேரணியும், கருத்தரங்கமும் நடத்தப்பெற்றன. மேற்கண்ட நிகழ்ச்சிகளின் வாயிலாக, சாதாரண மக்களும் இந்த அறிவொளி இயக்கம் பற்றிய அறிய வாய்ப்பு ஏற்பட்டது.

மக்களிடம் எழுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்த, தொண்டர்களால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. இக்கலை நிகழ்ச்சிகள் 24.7.91 அன்று துவக்கப்பட்டு இம்மாவட்டத்தின் பதினொரு ஒன்றியப் பகுதிகளிலும் நடத்தப்பெற்றன. கலைக்குழுவில் மருத்துவர், பொறியாளர், கல்லூரி ஆசிரியர்கள், மட்டுமல்லாமல், சத்துணவு அமைப்பாளர், ஆட்டோ ஓட்டுநர், மாணவர்கள் என்று பலர் இடம் பெற்றுள்ளனர். கலை நிகழ்ச்சிகள் 18 நாட்கள் தொடர்ந்து நடந்தன.

இந்தக் கலைக்குழுவினர் இம்மாவட்டத்தில் 990 கிராமங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர். 15.8.91 அன்று சிவகங்கையில் அறிவொளித் தீபம் ஏற்றும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேசுவரன் அவர்கள் அறிவொளித் தீபத்தை ஏற்றி வைத்தார். திருமதி திலகவதி, இ.கா.ப., அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்துப் பேசினார். அன்றைய தினம் இம்மாவட்டத்தில் 2 இலட்சம் வீடுகளில் அறிவொளித் தீபம் ஏற்றப்பட்டது.

17.8.91 அன்று இளையான்குடியில் அறிவொளி வகுப்பு தொடக்க விழா நடைபெற்றது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லெட்சுமி அவர்கள் அறிவொளி வகுப்பைத் துவக்கி வைத்து கற்போருக்குப் 'பட்டா' - 'படி' போன்ற வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுதிக் கல்வியைப் போதித்தார். திட்ட அலுவலர் திரு. எஸ். கதிரேசன் அவர்கள், கற்போருக்குப் புத்தகங்கள், சிலேட்டுகள், குச்சிகள் போன்ற எழுதுபொருட்களை வழங்கினார். ●

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:

# வளர்ச்சிப் பணிகள்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், 1991-92-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மொத்தம் 233.65 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. சீரிய முறையில் மேற் கொள்ளப்பட்ட குடும்ப ஆய்வு களின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மிகவும் நலிந்த மக்களின் வாழ்வு மேம்பட திட்டமிட்டபடி 7,477 பயனாளிகள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அப் பயனாளிகளுக்கு வங்கிகளின் மூலம் ரூ.160.87 இலட்சம் மானியமாக வழங்கப்படும் என்றும், அத்தொகை யாவும் 31.12.91-க்குள் பயனாளி களுக்கு போய்ச் சேரும் வகையில் பணிகள் செய்யப்பட வேண்டுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிற்குத் தீர்மானிக்கப்பட்ட பய னாளிகளின் எண்ணிக்கை 10,000 ஆகும். எனவே, எஞ்சியுள்ள 2,523 பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அவர்கள் யாவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மிக நலிந்த மக்களாகவே இருக்க வேண்டுமெனவும்கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங் கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் ஒதுக் கீடு செய்யப்பட்ட தொகை ரூ.248 இலட்சமாகும். அவற்றில் மானிய மாக மட்டும் வழங்கப்பட்ட தொகை 200.25 இலட்சமாகும். மொத்தம் 7,894 பயனாளிகள் இலக்காக நிர் ணயிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் 8,919 பயனாளிகள் தேர்ந்தெடுக் கப்பட்டு நிதியுதவி அளிக்கப்பட்ட னர். எனவே, நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு கூடுதலாக 1,025 பய னாளிகள் பயன் பெற்றுள்ளனர். இவற்றில் 8,097 சொத்துக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுள் 4,495 பயனாளிகள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். 3,896 பெண்களும் அடங்குவர். பலவகை உதவிகளில் கறவை மாடுகள் மட்டும் 3,902 பேருக்கு வழங்கப் பட்டுள்ளன.




## ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசித்து வரும் கிராமப்புற மக்களி டையே வேலை வாய்ப்பினை ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது நூறு நாட் களுக்கேனும் உறுதியளிக்கவும் அவர் தம் உழைப்பால் சமுதாயச் சொத் துக்களை உருவாக்கிடவும் வேண்டி 1989-90-ஆம் ஆண்டு முதல் முன்னர் இருந்த திட்டங்களை ஒருங் கிணைத்து ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை 2,878 ஆகும். இவற்றில் 2,604 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.757 இலட்சம் ஆகும். இதில் ஒதுக் கப்பட்ட தொகையில் 720 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் கீழ் 27 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டன. கடந்த ஆண்டில் ஆதிதிராவிடக் குடும்பங் களில் தொகுதி வீடுகள் 1,700 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் 2,150 வீடுகள் கட்டப்பட உள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 450 வீடுகள் அதிகமாகும்

1991-92-ஆம் ஆண்டில் 16 பள்ளிக் கட்டடங்கள் கட்ட 22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 57 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்ட ரூ.39 இலட்சமும் 16 சத்துணவுக் கூடங்கள் அமைக்க ரூ.11 இலட் சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 45.6 கி.மீ. தார் சாலைகள் போடுவதற்காக ரூ.75 இலட்சமும் சரள் சாலைகள் 65 கி.மீ. அமைக்க ரூ.71 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 100 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டி

முடிக்கப்பட வேண்டுமென நிர்ண யிக்கப்பட்டுள்ளது. சிறுபாசன வேலைகளுக்கென ரூ.142 இலட்சம் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டிற்கு மட்டும் 672 இலட்சமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.153 இலட்சம் விடுவிக்கப்பட்டுச் செல விடப்பட்டுள்ளது.



**பெரு விவசாயத் திட்டம்:**

பெரு விவசாயத் திட்டத்தின் கீழ், நிலம் மேம்பாட்டிற்காக ரூ.4 இலட்சமும், சிறு பாசனத்திற்கென ரூ.26 இலட்சமும் நிதியாக ஒதுக்கப் பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நிலத் தடி நீர்ப் பராமரிப்பு சிறு பாசனம், தோட்டக்கலை, கோழி வளர்ப்பு, சமூகக் காடுகள் வளர்த்தல் பணி களுக்கென 478 எக்டேர் பரப்பில் ரூ.15 இலட்சம் செலவிடத் திட்டமிடப் பட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2.60 இலட்சம் பலவகைச் செடிகளை இலவசமாக விநியோகித்து, மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவை யான மரக் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன.

''டிரைசம்'' எனப்படும் தொழில் நுட்பப் பயிற்சி இலக்குப்படி. இவ் வாண்டின் இலக்கான 1,330 நபர் களில் 1,190 நபர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

''டோக்ரா'' என்றழைக்கப் படும் மகளிர் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டத்திற்கென 100 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 79 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 1,441 நபர்கள் இலக் காக நிர்ணயிக்கப்பட்டுள்ளதில் 1,210 நபர்கள் பயனடைந்துள் ளனர். அவர்களில் தாழ்த்தப்பட்ட வர்கள் 499 நபர்கள் ஆவர். இத் திட்டத்திற்கென 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாண எரிவாயுக் கலன்கள்**

மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்பு குறிக் கோளில் நவீன எரிபொருள் உற் பத்தியாக 1990-91-ஆம் ஆண்டில் சாண எரிவாயுக் கலன்கள் மானிய உதவியோடு 300 என்ற இலக்கை விட 372 கலன்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றின் சாதனை 124 சதவிகிதம். இவ்வாண்டில் இதன் இலக்கு 300 என நிர்ண யிக்கப்பட்டு, இதுவரை சாதனை 110 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**சிறுசேமிப்புத் திட்டம்**

சிறு சேமிப்பின் கீழ், இம்மாவட் டத்திற்கு கடந்த ஆண்டில் ரூ.20 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டி ருந்தும் மொத்தம் வசூல் 44.6 கோடியில் நிகர வசூலாக 19 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.24 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள் ளது. இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முடிய 12 கோடியே 44 இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதில் நிதி வசூல் மட்டும் 2 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஆகும்.

**கிராமக் குடிநீர்த் திட்டம்**

கிராமக் குடிநீர் வழங்கலுக்கான போர்க்கால நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் மொத்தம் 577 கிரா மங்களும் 2,152 குக்கிராமங்களும் உள்ளன. இக்குக்கிராமங்களில் கடந்த ஆண்டில் 5 கிராமங்களுக்கு மட்டும் குடிநீர் வசதி செய்யப் படாமல் இருந்தது. அதையும் சேர்த்து தற்போது 1,210 ஊராட்சிகளில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது என்பது ஒரு சிறப்பான அம்ச மாகும். மேற்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 40 லிட்டர் குடிநீர்த் தேவையை அறிந்து, பழுதடைந்துள்ள குடிநீர்க் குழாய்களையும் விசைப் பம்புகளையும் ஆழ் குழாய்க் கிணறு களையும் முடிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் குடிநீர் வசதிக்காக 20.4 இலட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டு இதுவரை இவ்வசதிக்காக ரூ.10.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. மேலும் ரூ.10.2 இலட்சம் செலவிடத் திட் டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



★ கல்வியும், பக்தியும் நிறைந்த தாய்மார்களின் இல்லங்களில்தான் உலகத் தலைவர்கள் பிறக்கிறார்கள்.

★ தைரியமே வாழ்வு; பயமே சாவு.

—விவேகானந்தர்



# மீன் வளம்

சென்ற ஆண்டு 38.36 லட்சம் டன்கள் மீன்கள் பிடிக்கப்பட்டன. 1950-51ல் மீன் உற்பத்தி 7.52 லட்சம் டன்களாக மட்டுமே இருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. ஏழாவது திட்ட காலத்தில் மட்டும், மீன் பிடித்தல், 28 லட்சம் டன்களிலிருந்து 36.77 லட்சம் டன்களாக உயர்ந்தது.

1990-91ல் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன், நண்டு முதலிய கடலுணவுப் பொருட்களின் மதிப்பு ரூ. 890.40 கோடியாகும். 1961-62ல் வெறும் ரூ. 3.92 கோடி மதிப்புள்ள ஏற்றுமதியே நடைபெற்றது. ஐந்தாண்டுத் திட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி நடவடிக்கைகளின் காரணமாகவே ஏற்றுமதி இந்த அளவு அதிகரித்துள்ளது.

1973-74ல் ஒரு எக்டேர் பரப்பளவில் 50 கிலோ மீன்கள் உற்பத்தியாயின. 1989-90ல் இந்த அளவு 1865 கிலோவாக பெருகிவிட்டது. அரசு நிர்வகிக்கும் 44 மீன் குஞ்சு பொரிக்கும் குட்டைகளுடன், தனியார் நிறுவனங்களும் இணைந்து 1990-91ல் 1300 கோடி மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தன.

இறால் வளர்ப்புக்கான உவர்நீர் பகுதிகளை மேம்படுத்துவதற்காக, 25 'உவர் நீர் மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைகள்' ஏற்படுத்தப்பட்டு 5000 ஹெக்டேர் நீர்ப்பரப்பு அவற்றின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடல்மீன் பிடித்தலைப் பொறுத்தவரை சென்ற ஆண்டில் 7328 சாதாரண படகுகளுக்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. கடற்கரைவரை வந்து கரைசேரக் கூடிய 202 புதுவகைப் படகுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதுவரை, நான்கு பெரிய மீன்பிடித் துறைமுகங்களும், 23 சிறிய மீன்பிடித் துறைமுகங்களும், 96 மீன் இறக்கப்படும் இடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

எட்டாவது திட்டகாலத்தில், 'மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் இணையம்', 'மீன் வளர்ப்பு மேம்பாட்டு ஆணையக குழுமம்' ஆகியவற்றின் மூலம் மீன் வளர்ப்புத் திட்டங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மீன் வளர்த்தலுக்காக மேலும் அதிக குளங்களை உருவாக்குதல், மீன் வளர்ப்போருக்கு மீன்/இறால் குஞ்சுகளை தாராளமாக அளித்தல், புதியவகை படகுகளை அறிமுகப்படுத்துதல்; பழமையான முறைகளில் கட்டு மரங்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்போர் டீஸலைப் பயன்படுத்தினால் அதற்கான ஆயத்தீர்வையை திருப்பிக் கொடுத்தல் முதலிய திட்டங்கள் வரும் ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

மீனவர்களுக்காக, விபத்து காப்புறுதித் திட்டம், தேசீய நலவாழ்வு நிதி, சேமிப்பு இணைந்த நிவாரணத் திட்டம் ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

—நன்றி: 'திட்டம்'

**சத்துணவுத் திட்டம்**

இம்மாவட்டத்தில் 1,032 குழந்தைகள் நல நிலையங்களின் மூலம் சுமார் 50 ஆயிரம் குழந்தைகளும் ஏறக்குறைய 9,000 முதியவர்களும் பயன்பெற்று வருகின்றனர். 2,033 பள்ளி சத்துணவு நிலையங்கள் மூலம் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இன்னும் 180 குழந்தைகள் நல நிலையங்களுக்குப் புதிதாகக் கட்டட வசதிகள் செய்து தர வேண்டிய நிலை உள்ளது. மற்றும் மொத்தம் உள்ள சத்துணவு மையங்களில் 514 சத்துணவு மையங்கள் செப்பனிடப்பட வேண்டி உள்ளன. 447 மையங்களில் சமையல் கூடம் பழுது பார்க்கப்பட வேண்டி உள்ளது. இம்மாவட்டத்தில் இவற்றையெல்லாம் செப்பனிட தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பெரியோர்கள் முன்வந்துள்ளனர்.

**சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டம்**

இம்மாவட்டத்தில் நெல் குறுவைச் சாகுபடி மட்டும் 28,000 எக்டேரில் பயிரிடப்படுகிறது. இதுவரை 27,000 எக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. ஒரு எக்டேருக்குச் சராசரியாக 6 மெட்ரிக் டன் மகசூல் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலத்தில் 22,000 எக்டேரில் குறுவைச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஆரம்பத்தில் நல்ல மழை பெய்ததின் காரணமாக 5,000 எக்டேரில் அதிகமாகக் குறுவைச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவைச் சாகுபடியில் மட்டும் நெல் உற்பத்தி 1 இலட்சத்து 69 ஆயிரம் மெ.டன் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 1 இலட்சத்து 55 ஆயிரம் டன் நெல் விளைந்துள்ளது. ஆகவே, இவ்வாண்டு 14 ஆயிரம் மெ.டன் நெல் அதிக விளைச்சல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ●

# மூளையை மாற்றி அமைத்தல்

'தமிழம்' பன்னீர் செல்வம்

**நூ**ற்றுக்கணக்கானவர்கள் 1980-களில் தங்கள் மூளையில் இல்லாத உயிரணுக்களை (Cells) அதில் வைத்துக் கொள்ள அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். குணப்படுத்த முடியாத சிலவகை மூளை நோயைக் குறைப்பதே அதன் நோக்கமாகும். மூளை தனிச் சிறப்புக் கொண்ட இலக்கங்கோடி (Billions) உயிரணுக்களால் ஆனது. அவை ஒவ்வொன்றும் ஆயிரம் தொடர்பு களைக் (Connections) கொண்டவை

**உடலில் உள்ள மற்ற சில உறுப்புகளை மாற்றியமைக்கும் மருத்துவச் செய்திகளைப் பார்க்கிறோம்; மூளையை மாற்றியமைப்பது என்பது அவைகளிலிருந்து முற்றிலும் மாறுபாடானது; அதுபற்றி விளக்கும் கட்டுரை இது.**

மூளையை மாற்றி அமைத்தல் (Transplant) அல்லது மூளையில் ஒட்டுதல் என்பது, மற்ற உறுப்புகளை மாற்றி நடும் முறைகளுக்கு முற்றிலும் மாறானது. அறுவை மருத்துவர் முழு உறுப்பையே மாற்றி அமைப்பதில்லை. சிறுநீரகத்தை (Kidney) மாற்றுதல் வீட்டுக் குழாயின் வடிகட்டியை (Filter) மாற்றும் கம்மியர் வேலையைப் (Plumbing) போன்றது. மூளையை ஒட்டுதல் மின் பொறியியலைப் (Electric Engineering) போன்றது.

மூளை, பின்னிப் பிணைந்த சுற்றுக்களைக் (Circuits) கொண்டது. அவை ஒவ்வொன்றும் மற்றொன்றின் செயலில் மாற்றத்தை உண்டாக்கும். ஒரு வகையான சுற்றுப் பழுதடைந்தால் அதன் தொடர்பான பழுதடையாமல் இருக்கும் மற்ற சுற்றுகளும் சரிவர வேலை செய்யா. கோளாறுள்ள சுற்றுகளை மாற்றி அமைப்பதே ஒட்டுதலின் கொள்கை. அதனால் மூளையின் முழு அமைப்பும் மீண்டும் சரியாக வேலை செய்யும்.


**பொதுவான நோய்கள்:**


மனிதர்கள் பலவகை நோய்களால் துன்பப்படுகின்றனர். அவை மூளையைச் சேதப்படுத்துகின்றன. அதன் பாதுகாக்கப்பட்ட பகுதியை அல்லது உயிரணுக்கள் கூட்டத்தைத் தாக்குகின்றன. அவற்றில் பொதுவானவை:- (1) பார்க்கின்சன் நோய்- இது தசை நார்கள் (Muscles) ஒத்திசையும் தன்மையைப் பாதிக்கின்றது. (2) அல்மெய்மர் நோய் - இது, முதியோர்களை நினைவிழக்கச் செய்கின்றது. (3) அன்டிங்டன் நோய் - இது, தலைமுறையாக வந்து நடுத்தர வயதில் நடமாட்டம், மன நிலை ஆகியவற்றைப் பாதிக்கின்றது.

உறுப்புக் குலைவுகள் (Strokes) இவ்வகையாக ஏற்படுவதில்லை. மூளையில் குருதிக் குழாய்கள் (Blood Vessels) அடைப்பட்டு அல்லது பிளவுபட்டுப் போனால் அதற்கு உயிர்வளி (Oxygen) செல்லாது; அதனால் ஒரு சிறிய பகுதி சேதமடையும். மூளையின் ஒரு சிறிய பகுதி அளவுக்கு மீறி இயங்குவதால்

**படம் 1-இன் சொற்கள்**

CORTEX - மேல் மூளை
SEPTUM - இடைத் தடுக்கு
HYPOTHALAMUS - கீழ்மூளை
PITUITARY GLAND - பசை நீர்ச் சுரப்பி
MID BRAIN - நடு மூளை
SPINAL CORD - தண்டு வடம்
CEREBELLUM - பின்தலை சிறுமூளை






**படம் 2-இன் சொற்கள்**

FOETAL RAT BRAIN - முதிர்க்கரு எலிமூளை

ADULT RAT BRAIN - முதிர்ந்த எலி மூளை

SUBSTANTIA NIGRA - நடுமூளை உள் உயிரணுத் தொகுதி

COLLECT - தொகுப்பு

TREAT WITH TRYPSIN - கணையச் சுரப்பி நீரில் பதப்படுத்துதல்

DISSOCIATE - தொடர்பறுத்தல்

INJECT - உட்செலுத்தல்

STRIATUM - மேல்மூளை உள் நரம்பிழைமம்

NIGRO STRIATAL PATHWAY - நடமூளை - மேல்மூளை வழிப்பாதை

காக்கை வலிப்பு நோய் (Epilepsy) ஏற்படுகின்றது. அது, பின்பு மூளை முழுவதும் ஆட்படப் பரவுகின்றது.

நரம்பறுவை மருத்துவர்கள் (Neuro Surgeons) இப்படிப்பட்ட நோய்களை நலமுள்ள மூளையின் இழைமத்தை (Tissue) எடுத்து நலமிழந்தோர் மூளையில் ஒட்டிக் குணப்படுத்த முடியும் என்று எண்ணுகின்றனர். இவற்றைக் குணப்படுத்த தகுந்த மருந்துகள் இப்பொழுது இல்லை.

அறுவை மருத்துவர் மூளையிலிருந்து உயிரணுக்களை எடுக்கும் பொழுது அதன் பரவலான தொடர்புகள் சிதைந்து போகின்றன. ஏனெனில் நரம்பு அமைப்பில் மற்ற உயிரணுக்களோடு தொடர்பு கொள்ளப் பயன்படும் நீளமான இழைமங்கள் அல்லது நரம்பணுவின் வால்கள் (Axons) சிதைந்து போகின்றன. மூளையின் உயிரணுக்களை ஒருமுறை பிரித்தால் அவை உயிரோடிருக்க ஒன்றுமே. செய்ய முடியாது. மற்றொரு மூளையில் அமைத்தாலும் அவை உயிர் வாழா.

உடலின் உயிரணுக்களைப் போலல்லாமல் மூளையின் உயிரணுக்கள் பிறப்பின் பொழுதே முழு வளர்ச்சி அடைகின்றன. முதிர்கரு (Foetus) கருப்பையில் வளரும் பொழுதே மூளை நரம்பின் உயிரணுக்கள் பிரிந்து எண்ணிக்கையில் பெருகவும், புதிய தொடர்புகளைக் கொள்ளவும் ஆற்றல் பெறுகின்றன.

மூளையின் உயிரணுக்கள் ஒன்று போன்றவை அல்ல. செய்யும் பணியைப் பொறுத்தும் இருக்கும் இடத்தைப் பொறுத்தும் அவை உருவத்திலும் அளவிலும் வேறுபடுகின்றன. ஒவ்வொன்றும் வேதியல் (Chemical) தனித்தன்மை (Identity) உடையன. நரம்பின் உயிரணுக்கள், எல்லாம் நரம்பணு வால் முனைகளைக் கொண்டுள்ளன. அவற்றிலிருந்து ஒரு வேதியல் அல்லது நரம்புக் கடத்தியை (Neuro Transmitter) விடுவிப்பதன் மூலம் மற்றொன்றுடன் தொடர்பு கொள்கின்றன. சமிக்கையைப் (Signal) பெறும் உயிரணு தனக்கென்று தன்மீது எதிரடிப்பி (Receptor) என்னும்

**படம் 3-இன் சொற்கள்**

SEPTUM - இடைத் தடுக்கு

VENTRICLES - மூளை உட்குழிவுப் பள்ளம்

PUTAMEN - மேல் மூளை உயிரணுத் தொகுதி

CAUDATE - வால்


STRIATUM - மேல் மூளை உள் நரம்பிழைமம்.

SUBSTANTIA NIGRA - நடுமூளை உள் உயிரணுத் தொகுதி

PITUITARY GLAND - பசை நீர்ச் சுரப்பி

HIPPOCAMPUS - மேல் மூளை

HYPOTHALAMUS - கீழ் மூளை



அணுத் திரண்மங்களைப் (Molecules) பெற்றுள்ளது. அப்படிப்பட்ட எதிர டிப்பிகள் அவைகளுக்குரிய நரம்புக் கடத்திக்கு மட்டுமே மறுமொழி (Reply) தரும்.

ஓர் உயிரணு, தனக்கு இடையே யுள்ள நுண்ணிய இடைவெளிக்குக் குறுக்காக தன் நரம்புக் கடத்தியை மற்றோர் உயிரணுவுக்கு விடுவிக்கும் நரம்பணு இடையிடத்தில் (Synapse) தான் அவற்றிற்கிடையில் தொடர்பு ஏற்படுகின்றது. ஒவ்வோர் உயிரணு வும் ஆயிரம் வரை நரம்பணு இடை யிடத்தைக் கொண்டுள்ளது.

ஒருவகையான ஆராய்ச்சியில் ஓர் ஒட்டுதலுக்கு இழைமத்தின் (Tissue) சில ஆயிரம் உயிரணுக்கள் தேவைப்படுகின்றன. அவற்றை ஒரு துண்டாகவோ (Solid Piece) அல்லது தொடர்பறுந்த (Dissociated) உயி ரணுக் கூழாகவோ (Suspension) நுழைக்கின்றனர். ஒட்டுதலில் ஒட்டும் இழைமத்தின் அளவும், அதை மூளை யினுள் நுழைப்பதற்குக் கைக்கொள் ளும் முறையும் தான், அது புதிய உடலில் நாம் விரும்பும்படி கால் கொள்கின்றதா என்பதை முடிவு செய்யும்.

ஒட்டியின் வாழுந்தன்மையை அதிகரிக்க ஒரே வழி, அதை மூளை யின் உட்குழியில் (Ventricle) வைப் பதே ஆகும். மூளையின் இவ்விடங் களில் மூளை - தண்டுவட நீர்மம் (Cerebro Spinal Fluid) நிறைந்துள் ளது. ஒட்டி, தன் குருதி ஓட்டத்தைப் பெருக்கிக் கொள்ளும்முன் அது ஒரு வகை ஊட்டச் சத்தை அதற்கு அளிக்கின்றது. அதே நேரத்தில் ஒட்டி, வளர்வதற்கு உட்குழியில் உள்ள வெற்று இடம் வேண்டிய இடமளிக்கிறது.

ஒட்டி, மூளையின் உட்குழிவுச் சுவரில் ஒட்டிக்கொண்டு அருகி லுள்ள மூளை இழைமத்துடன் நாரிழையை (Fibers) வளர்க்கத் தொடங்கும். அது ஒட்டியை ஏற்றுக் கொண்ட மூளைக்குச் சிறிதளவு சேதத்தை ஏற்படுத்தினாலும் ஒட்டி, மூளையின் உட்குழிவுக்கு அருகி லுள்ள பகுதியை மட்டுமே அடையும்.

வாழ்வதற்கு வாய்ப்பு நலன்கள்:- நுண் குருதி நாளங்கள் (Blood - Capillaries) மிக அடர்த்தியாகப் பின்னிப் பிணைந்த மூளையின் மேற்பரப்புச் சாம்பல் நிறப் பகுதிக் குக் (Cortex) கீழே ஒட்டியை ஊன்று வது மற்றொரு முறை. புதிய நாளங்கள் ஒட்டியை நோக்கிப் பாய்ந்து வளர்வதனால் உயிர ணுக்கள் பிழைத்திருக்கும் வாய்ப்பு விரைவாக அதிகரிக்கின்றது. இவ் வுத்தியால் அவை அடையும் பரப் பிடங்கள் குறைவே.

எப்படியிருந்தாலும் நரம்பி யலார் மூளையில் இப்படிப்பட்ட இடங்களை ஏற்படுத்த முடியும். வரும் நாளில் செய்யப்போகும் ஓர் ஒட்டு அறுவைக்கு மூளையில் நடப் போகும் இடத்திலிருந்து சிறிய அளவில் இழைமங்களை எடுக்கும் போது பொந்து (Cavity) ஏற்படும். அப்பொந்தில் புதிய குருதி நாளங்கள் பின்னலமைப்பை உருவாக்குகின்றன.

பொந்தை உருவாக்கிய ஓரிரண்டு கிழமைகளுக்குப்பின் அமைக்கப் படும் ஓர் ஒட்டி உடனடியாக அமைக்கப்படுவதைக் காட்டிலும் அதிகமாகப் பிழைக்கும் வாய்ப்பைப் பெறுகின்றது. சேதம்தான் புதிய இழைமங்களின் வளர்ச்சியைத் தூண்டி ஊட்டமளிக்கும் அணுத் திரள்களை உருவாக்க வழி செய் கின்றது.

ஒட்டுதலில் வெற்றி கிட்டுதல் கொடையாளி உயிரணுக்களின் வயதையுங்கூடப் பொறுத்துள்ளது. நரம்பணு வால்களை வளர்க்கும் உயிரணுக்கள் செப்பமானவை. மூளையின் எப்பகுதியிலிருந்து உயிரணுக்கள் வருகின்றனவோ அதைப் பொறுத்தே பல இடங்களில் இவை வளர்கின்றன.

புதிய மூளையில் ஒட்டி சுறு சுறுப்பாக இயங்க வேண்டுமானால் அதன் உயிரணுக்கள் பிழைத்திருக்க வேண்டும். அப்படி அவை பிழைத் திருந்தால் மட்டும் போதாது. புதிய மூளையின் உயிரணுக்களோடு அவை சிலவகைத் தொடர்புகளை ஏற்படுத்துதலும் வேண்டும். சரி யான சூழ்நிலையில் ஒட்டப்படும் உயிரணுக்கள் நரம்பணு வால்களை வளர்க்கின்றன. அவை தம்மைச் சுற்றியுள்ள இழைமங்களின் உயிர ணுக்களோடு நரம்பணுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு சிறிது தொலைவுக்கு ஊடுருவுகின் றன. ஒட்டியுங்கூட புதிய இடத்தின் உயிரணுக்களைத் தன்னுள் புதிய நரம்பணு வால்களை வளர்க்கவும், தொடர்புகளைக் கொள்ளவும் தூண்டுகின்றது.

மூளையில் ஓரிடத்திற்கும், மற் றோரிடத்திற்கும் இடையில் தொடர்பு பல வகைகளில் நடைபெறுகின்றது. சில சுற்றுகள் (Circuits) அல்லது பாதை வழிகளுக்கு (Pathways) துல்லியமான செய்தியறிவிப்பு தேவைப்படுகின்றது. சான்றாக, கண்ணிலிருந்து மூளைக்குச் செல்லும் காட்சிப் பாதை வழிதான் நாம் பார்க்கும் பொருளை உணர்கின் றோம் என்பதைக் கூறலாம்.

மற்றப் பகுதிகளில் ஓர் இடம் மற்றோர் இடத்தின் நடவடிக்கை களை ஓர் ஒலி கட்டுப்படுத்தியைப்



★ அகிம்சையின் அவதாரம் பெண். அகிம்சை என்பது அழியாத, முடிவில்லாத அன்பும் எல்லையில்லா சகிப்புத் தன்மையும் ஆகும். தாயாகி உலகை வழிநடத்திச் செல்லும் பெண்களைத் தவிர வேறு யார்தான் இந்த மகத்தான சகிப்புத் தன்மையைக் காட்ட முடியும்?

—காந்தியடிகள்

(Volume Control) போல் எளிதாக ஒழுங்குபடுத்துகின்றது. இவ்வேலையைச் செய்ய வேண்டிய ஒட்டுகளில் சுற்று துல்லிய நிலைக்குத் திரும்பு தலைவிட, உரிய நரம்புக் கடத்தியைக் கொள்வது முக்கியமாகும். உடலசைவுகள், இயங்கிக் கட்டுப்பாட்டு மையமான (Motor Control Centre) நடுமூளை உள் உயிரணுத் தொகுதிக்கும், மேல்மூளை உள் நரம்பிழைமத்திற்கும் இடையிலான தொடர்புகளைப் பொறுத்தே நிகழ்கின்றன.

வட்டமாகச் செல்லுதல்:- ஓர் எலியின் ஒரு பக்க நடுமூளை - மேல்மூளை வழிப்பாதை சேதமடைந்தால் அது வட்டமாகவே நகரும். முதிர் கருவின் ந.மூ.உ. உயிரணுத் தொகுதியிலிருந்து உயிரணுக்களை எடுத்து ஒட்டினால் திருகு சுருளாகச் சுற்றிச் செல்லும் எலியின் தன்மை குறையும். ஆராய்ச்சியாளர்கள் ஒட்டியை புதிய மூளையின் ந.மூ.உ. உயிரணுத் தொகுதியில் ஊன்றாமல் நேரிடையாகவே மே.மூ.உ. நரம்பிழைமத்திற்குள் ஊன்றுகின்றனர். அங்கே அது புதிய இடத்தின் உயிரணுக்களோடு சில தொடர்புகளைக் கொண்டு சுரப்பிக் கடத்தியை விடுவிக்கின்றது. எலி மாறுபாடில்லாமல் இயங்குகின்றது.

இச்செயல் 'பார்க்கின்சன்' நோய் உடைய மனிதனைப் பொறுத்தவரை முக்கியமானதொரு சிக்கலாகும். மே.மூ.உ. நரம்பிழைமத்தில் சுரப்பிக் கடத்தி இல்லாமையால் அவர்களின் ந.மூ.உ. உயிரணுத் தொகுதியில் உள்ள உயிரணுக்கள் இறந்து போகின்றன.

நினைவாற்றல் குறைவு:- விலங்குகள் முதுமையடையும்பொழுது தங்கள் மூளை உயிரணுக்களில் பலவற்றைப் படிப்படியாக இழக்கின்றன. எலிகளில் இப்படிப்பட்ட இழப்புகள் சில ஒட்டுதல் வழி ஈடு செய்யப்படும். நரம்பிழைமத் தூண்டுதல் கடத்தியை நரம்புக் கடத்தியாகப் பயன்படுத்தும் ஒருபாதை வழியானது இடைத் தடுக்கிலிருந்து ஆற்றலைப் பெறுகின்றது. புதிய நினைவுகளைக் குவித்து வைக்கும் முக்கியச் செயல்களைப் பின்மூளை (Hippocampus) செய்கின்றது. மூளையில் உள்ள ந.தூ.க.யின் கூர்நோக்கு (Concentration) முதுமையில் குறைகின்றது.

முதிர் கருவின் இடைத்தடுக்கிலிருந்து உயிரணுக்களை எடுத்து ஒட்டினால், மறதித் தன்மையுடைய கிழ எலிகள் மீண்டும் கற்கவும் அவற்றின் சிக்கலான வழி முறைகளை நினைவு கொள்ளவும் கூடும்.

மூளையின் சில பகுதிகள் ஒரு வேதியல் சொடுக்கி போல் (Chemical Switch) தம்மை மாற்றிக் கொண்டு பிற பகுதிகளின் வேலையைச் செய்கின்றன. சான்றாக, கீழ்மூளை (Hypothalamus) ஒரு சுரப்பியை விடுவிக்கின்றது. அது, தன் முறையாகத் தன் அருகிலுள்ள பசைநீர்ச் சுரப்பியைத் (Pituitary Gland) தூண்டி அதிகமாகச் சுரக்கச் செய்கின்றது. அது, கருவகம் (Ovaries) விதைகள் ஆகியவற்றின்மீது பாலியல் பெருக்கத்தை உறுதிப்படுத்துகின்றது.

பாலியல் முதிர்ச்சி அடையாத ஓர் ஆண் அல்லது பெண் சுண்டெலிக்கு ஒரு சாதாரணச் சுண்டெலியிலிருந்து முதிர்க்கரு உயிரணுவை எடுத்து ஒட்டினால் அதன் சுரப்பி அருவி (Hormone Cascade) இயங்கும். அதனால் அவை இணைவுற்றுக் குஞ்சுகளை ஈனும்.

இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் மனிதர்களுக்குப் புதிய சிகிச்சை முறைகளை உறுதிப்படுத்துகின்றன. மரபியற் பொறியியல் (Genetic Engineering) உத்திகள் (Techniques) கொள்கையளவில் உடலின் ஏதாகிலும் ஒரு பகுதி உயிரணுவை மற்றொரு பகுதியின் தேவைக்கேற்றபடி உருமாற்றிப் பொருத்த முடியும் என்று கூறுகின்றன. சான்றாக நோயாளி ஒருவரின் உயிரணுவை எடுத்து, அது சுரப்பிக் கடத்தியை உண்டாக்கும்படி அதன் மரபியை (Genes) மாற்றலாம். அவற்றைக் கொண்டு ''பார்க்கின்சன்' நோயைக் குணப்படுத்தலாம். அதனால் பலவகை நன்மைகள் உண்டு. வேற்று உயிரின் முதிர்க்கரு இழைமத்தை நோயாளிகளுக்குப் பயன்படுத்தும்போது, ஏற்படும் நெறிமுறைக் (Ethical) கேடு, புதிய உடலுறுப்பை ஏற்க மறுக்கும் சிக்கல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு, அவர்கள் தங்கள் தோலின் உயிரணுக்களையே கொடையாக அளிக்கலாம்.

மனம் மனிதனின் தனித்தன்மை ஆகியவற்றுடன் பல வகைகளில் தொடர்பு கொண்டுள்ள மூளையில் ஒட்டு வேலை (Tinkering) செய்வதென்னும் கருத்தைப் பலர் இன்னும் ஏற்கவில்லை. மூளையைப் பழுது பார்க்கவும், அதன் இயக்கத் தன்மைகளை விளங்கிக் கொள்ளவும் தொடங்கியுள்ள நமக்கு அப்படிப்பட்ட கருத்துக்கள் இன்று காலங் கடந்தவையாகத் தோன்றுகின்றன. ஒரு மூளையை முற்றிலும் மாறுபட்ட வேறொரு உடலில் மாற்றி அமைக்கும் மர். பிராங்கெய்சுடீன் திட்டம் இன்னும் அறிவியல் நாவல் (Science Fiction) அளவிலேயே உள்ளது என்று கூறலாம்.

(இன்சைடு சயின்ஸ் (நியூ சயின்ஸ்) என்னும் நூற்பகுதி)

நன்றி: இந்து.



★ இந்த நாட்டிலே- சாதிதான்
மக்களுக்குள் பேதத்தை
ஏற்படுத்தும் முதல் சாதனம்;
மக்களின் இரத்தத்திலே
கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம்;
மனதிலே முடக்கு நோயைப்
புகுத்திவிட்ட முறை; எனவேதான்,
பேதமற்ற சமுதாயத்தை-
சமத்துவத்தை- சமதர்மத்தை நாம்
நாட வேண்டுமானால் முதலில்
சாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

# நூல் நயம்

### 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்'

**ஆசிரியர்: முனைவர் இரா. இளவரசு**

**வெளியீடு:**

மருதம்
672, பெரியார் சாலை,
கருணாநிதி நகர், திருச்சி-620 021.

பக்கம்:122 விலை:ரூ.20/-

**ப**குத்தறிவுக் கவிஞர், சுயமரியாதைக் கவிஞர் என்றெல்லாம் மக்களால் போற்றிப் பாராட்டப் பெற்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கும் நாட்டுப் பற்றுக்கும் தொடர்பே கிடையாது என்ற பிரச்சாரம் நாட்டில் நெடுங்காலமாக நிலவி வருகிறது. அந்தப் பிரச்சாரத்தைத் தகர்த்து எறிய உதவுகிறது இந்நூல். நூலாசிரியர், வழக்குரைஞரின் வழி நன்று, சாட்சியங்களை வழங்கி வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்.

நாட்டு விடுதலையில் நாட்டம், தலைவர்களின் திறம் போற்றல், ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தல், மதுவிலக்கை வலியுறுத்தல், அந்நிய மொழியாம் ஆங்கிலத்தை வெறுத்தல், தாயின் மணிக்கொடியைப் பணிந்து வணங்குதல், கதரியக்கத்தை ஆதரித்தல் போன்ற தன்னாட்டு உணர்வுகள் அனைத்தும் பாரதிதாசனிடம் மண்டிக் கிடந்தன. அதன் காரணமாகவே அவற்றைக் குறித்து அரிய கவிதைகளைக் கடமையுணர்வுடன் பாவேந்தர் படைத்திருக்கிறார் என்பதை இந்நூல் தெளிவாக்குகிறது.

தமிழ்ச் சமுதாயத்துக்கு இந்நூல் ஒரு புதையலாகும். நூலின் நடை இனிமை! சான்று காட்டி நிறுவும் தன்மை, அதனினும் இனிமை. நூலாசிரியரின் கடும் உழைப்புக்குக் கட்டியங் கூறுகிறது இந்நூல்.

'கால ஓட்டத்தில் இன்னும் பல செய்திகள் கிடைக்கலாம்; அதனால் நூலின் அளவு பெரிதாய் வடிவெடுக்கலாம்' என நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது அவரது தன்னம்பிக்கையைத் தெரிவிப்பதுடன் நமக்கு நன்னம்பிக்கையையும் ஊட்டுகிறது.

### 'பாரதியாரும், பாவேந்தரும்'

**ஆசிரியர்:**

**அமரர் டி.என். சுசிசுப்பிரமணியன்**

**வெளியீடு:**

கதிர் வெளியீடு
7, பொன்னம்பலம் தெரு, சோழபுரம்
அம்பத்தூர், சென்னை-600 053.

பக்கம்:64 விலை:ரூ.7.50/-

**டி**.என். சுசிசுப்பிரமணியன் அவர்கள், தாம் வாழும் காலத்தில், பாரதியாரையும், பாவேந்தரையும் குறித்து எழுதிய இந்நூல் இப்போதுதான் தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கிறது.

இருபெருங் கவிஞர்களின் கவித்துவத்தைக் குறித்த திறனாய்வுஇந்நூலில்காணப்படுகிறது. அவர்கள், ஒரு சிலரால் வரவேற்கப்பட்டதையும் வேறு சிலரால் கண்டனத்துக்கு ஆளானதையும் நூலாசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். நூலின் நடை இனிமை பயக்கிறது. அளவில் சிறியதுதான் எனினும் ஏந்தி வந்துள்ள செய்தியைப் பொறுத்தவரை இந்நூல் பெரியது என்றே சொல்லலாம்.

**—தமிழ்ப்பித்தன்**

### 'நம்பிக்கை நாற்றுக்கள்'

**ஆசிரியர்: வாசவன்**

**வெளியிட்டோர்:**

கதிர் வெளியீடு
7, பொன்னம்பலம் தெரு
சோழபுரம்
அம்பத்தூர், சென்னை-600 053.

பக்கம்: விலை:ரூ.10

**தொ**ழில் அதிபர், பத்திரிகையாளர், எழுத்தாளர், பதிப்பகத்தார், திரைப்படத் துறையினர் என்று பலதரப்பட்ட பெருமக்களை, தான் அறிந்தவகையில் சிறந்த நடையில் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் ஆசிரியர். அவர்களது அருமை, பெருமைகளை அழகாகக் கூறி உள்ளார்.

### 'தேன்துளிகள்'

**ஆசிரியர்: புலவர் காவிரிச் செல்வன்**

**வெளியீடு:** காவிரி வெளியீடு,
7/14, இணைவு 1 மறைமலை நகர்
செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டம்-603209

பக்கம்:64 விலை:ரூ.6/-

**சி**றுவர்களுக்கான இசைப் பாடல்களைக் கொண்ட கவிதை நூல்.

வழக்கமான தலைப்பில் உள்ள கவிதைகளோடு உலகு உன் காலில் விழ, உன்னை நம்பு, இதயப் பூ, பொங்கும் எரிமலை, உயிர்-மெய் போன்ற சில வித்தியாசமான பாடல்களும் இந்நூலில் உண்டு.

**என்.குமார்**

### 'வீரமா முனிவர் இயற்றிய தமிழ் மருத்துவ நூல்'

**ஆசிரியர்: முல்லை. பி.எல்.முத்தையா**

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.
41பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600 098.

பக்கம்:68 விலை:ரூ.8/-

'**நூ**ச காண்டம்-100' என்ற தலைப்பில் வீரமாமுனிவர் எழுதிய நூலை புதிதாகப் பதிப்பித்திருக்கிறார்கள்.

இந்நூலில் நோயின் விவரங்களும் அதற்கான மருந்துகளும், செய்முறைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, மருத்துவர்களுக்கும் ஒரு நல்ல கையேடாக உதவும்.

### 'வீட்டு மின்சாதனங்களை பழுது பார்ப்பது எப்படி?'

**ஆசிரியர்: ஏ.கே. சேஷய்யா**

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கையம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:120 விலை:ரூ.14/-

**ந**மது இல்லங்களில் அன்றாடம் பயன்படுத்தப்படும், மின் கருவிகளான மின் அடுப்பு, ஹீட்டர்கள், மின்கெட்டில், மிக்ஸி, மின் ஆட்டுக்கல், மின்விசிறி குழல் விளக்கு போன்றவை பழுதுபட்டு விட்டால் நாமே அவற்றை எப்படிச் சரி செய்வது என்பதைக் கற்றுத் தருகிறது இந்நூல்.

பழுது பார்க்கத் தேவைப்படும் கருவிகள் நம்மிடம் இருக்குமாயின், இப்புத்தகத்தின் துணை கொண்டு நாம் பயன்படுத்தும் மின் கருவிகளை நாமே பழுது பார்த்துக் கொள்ளலாம்.

**—என்.குமாரசாமி**

### மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

**மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வித்துறையின் சென்னைத் தகவல் மையம் 298, தம்பு செட்டித் தெரு, சென்னை-1 என்ற முகவரியிலிருந்து தக்கர் பாபா வித்யாலயா, 36, வெங்கட நாராயணா சாலை, தியாகராயநகர், சென்னை-17 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று அஞ்சல் வழிக் கல்வித்துறை நெறியாளர் அறிவிக்கின்றார். (தொலைபேசி எண்: 44 65 49)**



வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
COMPLEX
N P K
17-17-17
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
விஜய்
UREA-N46%
MADRAS FERTILIZERS LTD.
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068
HTA 7343

# வளர்ச்சிக்கு வழிகாட்டும் வணிகவரிச் சீரமைப்பு

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

**வணிக வரித்துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 25.9.'91 அன்று சட்டப் பேரவையில் பேசியதாவது:**

'வணிக வரிகள்' என்பதில் பொது விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, விற்பனை மேல் வரி, மத்திய விற்பனை வரி, கேளிக்கை வரி, பந்தய வரி, தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதி மீதான வரி, விளம்பர வரி மற்றும் வாகனங்கள் மீதான நுழைவு வரி ஆகியவைகள் அடங்கும்.

விற்பனை வரியின் சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்தால், அதன் ஆரம்பம் நீதியை நிலை நாட்டிய 'மனுச் சக்கரவர்த்தி' காலத்திலேயே தொடங்கப்பெற்றது என்பது நமக்கு வியப்பளிப்பதாக உள்ளது. மனுச் சக்கரவர்த்தியின் காலத்தில் அரசின் வருவாயில் முக்கியப் பங்காக விளங்கியது விற்பனை வரி. இவ்வரி வாங்கி விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலையில் 5 சதவிகிதமாக இருந்தது. எல்லாப் பொருட்களையும் பற்றி அறிந்த, அனுபவம் மிக்கவர்கள் மூலமாகப் பொருள்களின் விலை அறியப்பட்டு, அவற்றின் மீது 5 சதவிகித விற்பனை வரி வசூல் செய்யப்பட்டது. அக்காலத்தில் வரியைப் பணமாக அன்றி அதற்கிணையான பொருளாகவும் செலுத்திட வழி இருந்தது. மக்கள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாக்கும் அரசருக்கு விற்பனை செய்யப்படும் 50 பசுக்களுக்கு ஒரு பசுவும், தங்கத்தில் 50-இல் ஒரு பங்கும், தானியங்களில் பத்தில் ஒரு பங்குமாக வரி செலுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் விற்பனை வரியின் ஆரம்பம் 1939-ஆம் ஆண்டாகும். அரசின் மதுவிலக்குக் கொள்கையினால் அப்போது மிக அதிகம் எனக் கருதப்பட்ட ரூ.5 கோடி வருவாய் இழப்பினை ஈடுசெய்ய அன்றைய சென்னை மாகாணப் பிரதம மந்திரி மூதறிஞர் இராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்படும் மாண்புமிகு சர்.சி. இராஜாகோபாலாச்சாரியார் அவர்களால் விற்பனை வரி மசோதா சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. மசோதாவை அறிமுகப்படுத்தி இச்சட்டத்தின் நோக்கத்தினையும் காரணங்களையும் விளக்கி ஆற்றிய உரையின் ஒருசில பகுதிகளைப் படிப்பதற்கு உங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

'இந்த மசோதாவில் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா என்ற அளவில் உள்ளது. தரும காரியங்களுக்காகப் பெரும்பான்மையான வணிகர்கள் வழக்கமாகத் தாங்கள் செய்யும் விற்பனைக்கு எந்த அளவிற்கு வரி செலுத்த வேண்டுமோ, அதைவிட மூன்று மடங்கு அதிகமாக 'மகிமை' என்ற பெயரில் செலவிடும் வழக்கம் வேரூன்றி உள்ளது. அரசின் தேவைகளை ஈடுகட்ட புதிய வருவாய் வழிவகைகளைத் தேடும் தற்போதைய நிலையில் இந்தப் புதிய வரி அதிகச் சுமையாக இருக்காது எனக் கருதப்படுகிறது.'

1939-ஆம் ஆண்டு நிலவிய அதே நிலைதான் தற்போது நிலவுகிறது என்பதை உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதோடு பிற நல்வாழ்வுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முற்படும் இவ்வேளையில் புதிய வருவாய் வழிவகைகளைத் கண்டறியும் நிலையில் இந்த அரசு உள்ளது. விற்பனை வரி, அன்றிருந்ததைப் போன்றே இப்பொழுதும் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

மாநிலத்தின் மொத்த வருவாயில் வணிகவரியின் பங்கு 70 சதவிகிதமாகும். அரசின் கொள்கைகள் மற்றும் வணிகர்களின் கோரிக்கைகள் ஆகியவற்றின்பேரில் விற்பனை வரி விகிதம் மற்றும் வரி விதிப்புமுறை ஆகியவற்றில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. வணிகவரிச் சட்டத்தினைச் சீரமைக்கும் பொருட்டு ஆரம்பத்தில் பொருளாதார நிபுணர் திரு. பி.எஸ். லோகநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த திரு எஸ்.ஆர்.செய்வார், திரு எஸ்.பி. சீனிவாசன், திரு கே. கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுக்கள் வணிகவரிச் சீரமைப்பிற்கான பல்வேறு ஆலோசனைகளை நல்கியுள்ளன.

எங்களது தேர்தல் அறிக்கையில் வரிச் சீரமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை உறுப்

# வணிகவரிச் சட்டத்தினை எளிமைப்படுத்த - உயர்மட்ட விற்பனைவரி சீரமைப்புக் குழு

பினர்கள் நன்கு அறிவார்கள். வரி விதிப்பு அலுவலர்கள் நேர்மையற்றவர்களாக இருக்கும்போது வரி ஏய்க்கும் போக்கு நிலவுகிறது. அதே நேரத்தில், வணிகர்களில் சிலர் நேர்மையற்ற வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும்போது நேர்மையான அலுவலர்களின் நடவடிக்கைகள் கண்டிப்பானவையாகக் கருதப்பட்டு வணிகர்கள் தொல்லைப்படுத்தப்படுகின்றனர் என்ற புகார்கள் வருகின்றன.

உங்களுக்குத் தகவலுக்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் - ஏறத்தாழ 8,640 நீதிப்பேராணை மனுக்களும், சுமார் 2000 வரி வழக்குகளும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன. இதிலிருந்து பல வழக்குகளைத் தீர்ப்பாயத்திற்கும், நீதிமன்றத்திற்கும் எடுத்துச் செல்லும் வணிகர்களின் மனப்போக்கினை நாம் அறிகின்றோம். இதுபோன்ற வழக்குகள் உச்சநீதிமன்றத்திலும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களிலும், மேல்முறையீட்டு உதவி ஆணையர்களிடமும் தேங்கியுள்ளன. வழக்குகள் தேவையற்ற முறையில் நீட்டிக்கப்பட்டு, அரசிற்கு வரவேண்டிய வருவாய் செலுத்தப்படாமல் தாமதப்படுத்தப்படுகிறது. எனவே, வணிகவரிச் சட்டத்தினை எளிமைப்படுத்திச்சீரமைக்க, ஆய்ந்து தகுந்த பரிந்துரைகள் அரசிற்கு வழங்க உயர்மட்ட விற்பனை வரி சீரமைப்புக்குழு ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளோம்.

அரசின் தற்போதைய நெருக்கடியான நிதி நிலையிலும், நாங்கள் விற்பனை வரிச் சலுகைகள் அறிவித்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இவற்றில் முக்கியமானது உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மீதான வரியில் அரை சதவிகிதம் குறைத்ததாகும். மத்திய அரசு உரங்கள் விற்பனை மீதான மானியத்தைக் குறைத்தும், சிலவகை உரங்களின் விற்பனை விலையையும் உயர்த்தியுள்ள கால கட்டத்தில் விலை உயர்வினால் அரசிற்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் வருவாயினையும் பொருட்படுத்தாது இந்த வரிக்குறைப்பு அறிவிக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நாங்கள் இந்த வரிக்குறைப்பினைச் செய்துள்ளோம்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து வரிச் சலுகைகளையும் மீண்டும் தற்சமயம் நான் குறிப்பிட விரும்பவில்லை. எனினும், இந்நேரத்தில் சில முக்கியமான தகவல்களைத் தெளிவுபடுத்திட விரும்புகிறேன். ஆண்டிற்கு ரூபாய் 5 இலட்சத்திற்குக் குறைவான மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் பயன்படும் வகையில் புதிய 'தன் மதிப்பீட்டு' வரிவிதிப்பு முறையினை (Self Assessment) நாங்கள் அறிவித்துள்ளோம். சென்ற ஆண்டு வரையில், சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு கணக்குத் தணிக்கையில்லாமல் முடிவுற்றதாகக் கருதப்படும் வரிவிதிப்பு முறை (Deemed Assessment) நடைமுறையில் இருந்தது. அதன் நிபந்தனைகள் பின் வருவன:-

1. வணிகரின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ஐந்து இலட்ச ரூபாய்க்கு அதிகமாக இருக்கக் கூடாது.
2. மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழான விற்பனைக்குரிய படிவங்கள் பெற்றிருக்கக் கூடாது.
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைக்குரிய படிவங்கள், படிவம் 17, 20, 20-பி ஆகியவற்றைப் பெற்றிருக்கக் கூடாது.
4. விற்பனை வரிச் சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டுள்ள எந்தவொரு விதிமுறைகளையும் மீறியிருக்கக் கூடாது.

கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் காரணமாக இம்முறையினைச் செம்மையாக நடைமுறைப்படுத்த இயலவில்லை. மிகச் சிறிய தவறுகளுக்காக வணிகர்கள் இம்முறையில் வரிவிதிப்பிற்கு உட்படும் தகுதியினை இழக்க நேரிட்டது. எனவே, எங்களது அரசு திருத்திய 'தன் மதிப்பீட்டு வரிவிதிப்பு' (Self Assesment) முறையினை அமல்படுத்த உறுதியாக உத்தேசித்துள்ளது. விற்பனை வரிச் சட்டம் மற்றும் விதிகளை மீறும் வணிகர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படலாமெனவும், சிறிய தவறுகளுக்காகச் சுயமதிப்பீட்டு வரிவிதிப்புச் சலுகையினை, வணிகர்கள் இழக்க வேண்டாமெனவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். சில குறிப்பிட்ட விற்பனைக்குரிய படிவங்கள் பெற்றிராத, ஆண்டிற்கு ரூ.5 இலட்சத்திற்குக் குறைவாக மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு, இப்புதிய திட்டம் பொருந்தும். வணிகர்கள் பல்வேறு தொல்லைகளிலிருந்தும் சிரமங்களிலிருந்தும் விடுபட வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் அறிவிக்கப்படும் இத்திட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேற வணிகர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இவ்வாண்டில் நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பிக்கும்பொழுது வணிகர்களுக்குக் கணிசமான அளவில் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அதன் தொடர்ச்சியாகச் சில வரி விகிதங்களில் மாற்றங்களையும் மற்றும் சலுகைகளையும் அறிவிக்கின்றேன்.

தற்பொழுது, முயல், குரங்கு, பன்றி ஆகியவற்றின் தீவனங்கள், மனிதத் தலைமுடி மற்றும் டோபா (Wig) ஆகிய பொருள்களுக்கு 8 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. இந்தப் பொருள்களுக்கு முழுவதுமாக வரி விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மரவள்ளிக் கிழங்கின் உபபொருள்களான, திப்பி, திப்பி மாவு மற்றும் கப்பி, அத்துடன் புளியங்கொட்டை மற்றும் நார், பழைய அலுமினியம் (Aluminium Scrap) மற்றும் இரப்பர் பலூன்கள் ஆகிய பொருள்களுக்குத் தற்சமயம் 8 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. அதை மாற்றி 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.

மேலும், கழிவுத்தாளின் வரி விகிதம் 8 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாகவும், பாட்டில் மூடிகள் 8-இல் இருந்து 5 ஆகவும், இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பட்டு (Imported Raw Silk) 8-இல் இருந்து 2 சதவிகிதமாகவும் வரிக் குறைப்புச் செய்யப்படும் என்பதை அறிவிக்கிறேன்.

தற்பொழுது, பொது விற்பனை வரிச்சட்டத்தில் முதல் அட்டவணையில் 192 வரிசை எண்ணாகக் கிரேனைட் கருங்கல் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தப் பதிவை (Entry) மாற்றி, புதிய வரிசை எண்ணில் கிரேனைட் கற்கள் மற்றும் மெருகேற்றப்பட்ட கிரேனைட் பலகை ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றின் மீதும் 8 சதவிகிதம் வரி விதிக்கப்படும். இதனால் இப் பொருளின் வரிவிதிப்புத் தொடர்பான குழப்பங்கள் நீங்கும்.

கைவினைப் பொருட்களுக்கு 1.4.1990-லிருந்து 8 சதவிகிதம் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. ஆனால், ஒவ்வொன்றும் ரூ.1,000-க்குக் குறைவாக விற்பனை மதிப்புள்ள சில குறிப்பிட்ட கைவினைப் பொருட்களுக்கு 18.3.1987-லிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கடல் சங்குகளால் செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் பொருட்களும் அடங்கும். கடல் சங்குகளால் பலவிதமான கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களால் குடிசைத் தொழில் முறையில் செய்யப்படுகின்றன. இவ்வகைக் கைவினைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கடல் சங்குகளால் செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் விற்பனை வரி விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்படுமென மதிப்பிடப்படுகிறது.

பொது விற்பனை வரிச்சட்டத்தில், முதல் அட்டவணையில் உள்ள 36-வது வரிசை எண்ணாகத் தேயிலை சேர்க்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள முறைப்படி, மொத்தமாகத் தேயிலைத்தூள் வாங்கி 20 கிலோவிற்குக் குறைவாகப் பிரித்து பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு மீண்டும் வரி செலுத்த நேரிடுகிறது. இதை மாற்றி, தேயிலை விற்பனை மீது

## உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மீதான வரியில் அரை சதவிகிதம் குறைப்பு

ஒரே கட்டமாக 6 சதவிகிதம் வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் உணவிற்கு அரசாங்கம் தற்போது 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரியைக் குறைத்துள்ளது. ஹார்லிக்ஸ், விவா, ஸ்பர்ட் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவைகள் பால் உணவுகள் என்று தவறாகக் குறிப்பிட்டு 4 சதவிகிதக் குறைந்த வரி செலுத்தப்படுகிறது. அரசின் நோக்கம், குழந்தைகளுக்கான பால் உணவிற்கு வரியினைக் குறைத்திடுவதாகும். எனவே, இது தொடர்பான அறிவிப்பில் திருத்தம் செய்யப்பட்டு, குழந்தைகளுக்கான பால் உணவிற்கு மட்டுமே 4 சதவிகிதம் குறைந்த வரி வசூலிக்கப்படும்.

நீண்ட காலமாக நிலுவையிலுள்ள வரி பாக்கியை வசூலிப்பது சம்பந்தமான அறிக்கையைச் சமீபத்தில் அவையில் சமர்ப்பித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் மட்டும் 1.1.91 முடிய ரூ.270.49 கோடி வரி பாக்கியாக உள்ளது. இதில் உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் மேல் முறையீட்டு உதவி ஆணையர் ஆகியோரின் தடை ஆணையின் காரணமாக ரூ.163.99 கோடி வசூலிக்க முடியாமல் உள்ளது. இது தவிர வரி செலுத்தத் தவறியோர்களுடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் பொது ஏலத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரி நடவடிக்கையின் மூலம் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.44.18 கோடி ஆகும். அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பிறகு வசூலிக்க இயலாது எனக் கருதப்பட்டுத் தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை ரூ.34.08 கோடி ஆகும். இத்தனை முயற்சிகளுக்குப் பிறகு 'மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பது' என்ற பழமொழிக்கு ஏற்ப ரூ.28.24 கோடிதான் வசூலிக்கக் கூடிய வரி பாக்கி என நான் அறிகின்றேன். வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையிலுள்ள சுமார் 50 கோடியையும் இத்துடன் சேர்த்தாலும் கூட பழைய பாக்கியை வசூலிப்பதன் மூலம் நமது வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்ய இயலாது. எனினும் 'சிறு துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழிக்கு ஏற்ப வணிகவரித்துறை அலுவலர்கள் கடுமையான முயற்சி எடுத்து வசூலிக்கக் கூடிய வரி பாக்கியை விரைவாக வசூலித்திடுமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

வணிகவரி வருவாய் கணிசமான அளவிலும், திருப்தி அளிக்கும் வகையிலும் உயர்ந்து வருவது உறுப்பினர்கள் அறிந்ததே. வணிகவரித் துறை அலுவலர்களின் உண்மையான உழைப்பினை மதிக்கும் பொருட்டு களப் பணியாற்றும் பணியாளர்களது அடிப்படைத் தேவைகளை ஓரளவிற்காவது அரசு நிறைவேற்றுவது நல்லது எனக் கருதுகிறேன். இதனைக் கருத்திற் கொண்டு சென்னைக்கு மாற்றலாகி வரும் உதவி ஆணையர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யும் பொருட்டு குடியிருப்புகள் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் வீட்டு வாடகை மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கணிசமான அளவில் குடியிருப்புகள் கட்டியிருந்தாலும் சென்னைக்கு மாற்றலாகி வரும் அனைத்து வலுவலர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவில் கட்டடங்கள் இல்லை. எனவே, முதற் கட்டமாக திருவான்மியூரில் வணிக

# வணிகர்கள் பயன்படும் வகையில் புதிய ‘தன் மதிப்பீட்டு’ வரிவிதிப்பு முறை அறிவிப்பு

வரித் துறைக்குச் சொந்தமாக உள்ள இடத்தில் 14 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இக்கட்டடம் கட்ட ஆகும் செலவினை அரசு நேரடியாக ஏற்காமல் இப்பணியினைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடு கட்ட ஹட்கோ அல்லது நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று இச்செலவினை ஈடு செய்யும். இதற்காகப் பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மட்டுமே அரசு வீட்டு வசதி வாரியத்திற்கு நிதி வழங்க நேரிடும்.

தற்போதுள்ள நடைமுறைப்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் வாடகைக்குக் குடியிருக்கும் அலுவலர்கள் தங்களது சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட சத விகிதத்தை வாடகையாகச் செலுத்தி வருகிறார்கள். அதைப்போன்றே, தற்போது கட்டப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள குடியிருப்புகளில் தங்கும் உதவி ஆணையாளர்களும் குறிப்பிட்ட வாடகையைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வீட்டு வசதி வாரியம் திருப்பிச் செலுத்தும் கடன் தொகையில் வாடகை மூலம் வசூலாகும் தொகை போக மிகுதியை அரசாங்கம் மானியமாக அளித்திடும். இதனால் கட்டுமானப் பணிக்கு அரசாங்கத்தின் செலவு கணிசமாகக் குறைக்கப் படும்.

வணிகவரித் துறையை நவீனப் படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஒரு சில நடவடிக்கைகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தற்பொழுது கணக்குகள் பராமரிப்பதில் கணிப் பொறி இயந்திரங்கள் (Computer) பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன இதன் காரணமாக வணிகவரித் துறை அலுவலர்கள் கணிப் பொறி இயந்திரங்களின் பயன்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு வணிகவரித் துறை பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.5 இலட்சம் செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள் ஆகியோருக்குக் கணிப் பொறி மூலம் கணக்குகளைப் பராமரிப்பது சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப் படும்.

அண்ணா மேலாண்மைக் கழகத்தில் உயர்நிலை அலுவலர்களுக்கு ஏற்கெனவே ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது வணிகவரித் துறையில் இயங்கி வரும் கணிப் பொறி மையம் மேலும் பயன் உள்ள வகையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இந்த மையம், வசூலிக்கப்படும் வரித்தொகை, அதிக அளவில் வரி செலுத்துவோர் பற்றிய விவரங்கள் மற்றும் வரிக்குட்படும் பலவகையான பொருட்கள் பற்றிய விவரங்களை உடனுக்குடன் அளிப்பதன் மூலம் வரிவசூலின் நிலைமை பற்றி விரைவாக ஆய்வு செய்து தக்க முடிவுகள் எடுக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும், சோதனைச் சாவடிகளிலிருந்து எடுக்கப்படும் சில ஆவணங்களை உடனடியாகக் கணிப் பொறி மூலம் பாகுபாடு செய்து தேவையான விவரங்களைச் சேகரித்துச் சம்பந்தப்பட்ட வரி விதிப்பு அலுவலர்களுக்கு அனுப்பி மாநிலத்தில் பொருட்களின் மீது செலுத்தப்பட வேண்டிய வரி முறையாகச் செலுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க முடிகிறது.

மேலும், செயலாக்கப் பிரிவு அலுவலர்கள், சிறப்பாகப் பணியாற்றிட சோதனைச் சாவடிகள், சுற்றுப்படை ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள கம்பியில்லாத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சென்னையிலுள்ள செயலாக்கப் பிரிவை நவீனப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தற்போது 301 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 102 வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும், 193 வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும், ஏனைய 6 வட்டங்கள் உதவி ஆணையர் தலைமையிலும் இயங்குகின்றன. வரி விதிப்புத் தரத்தை உயர்த்தி, வணிகர்களின் கணக்குகளை நுணுக்கமாக ஆய்வு செய்து வருவாய் இழப்பு ஏற்படாதவாறு செயல்படுவது மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. இதன்பொருட்டு அதிக வரிப்பளுவுள்ள 15 வரி விதிப்பு வட்டங்களைப் பிரித்து, கூடுதலாக 11 வரி விதிப்பு வட்டங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 4 மத்திய வரி விதிப்பு வட்டங்களிலும், கோவையிலுள்ள 2 மத்திய வரி விதிப்பு வட்டங்களிலும் கூடுதலாக ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு துணை வணிக வரி அலுவலர் பணியிடம் ஏற்படுத்தி

# வணிகர்களுக்குக் கணிசமான அளவில் சலுகைகள் வரி விகிதங்களில் மாற்றங்கள்

பணித் தரத்தை உயர்த்தி, குறிப்பாகப் பெரிய வர்த்தக நிறுவனங்களின் கணக்குகளை மிகுந்த கவனத்துடன் பார்வையிட்டு வசூலைத் துரிதப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டங்களை அமல்படுத்துவதற்கு நடப்பாண்டில் ரூ.57.99 இலட்சம் தொடர் செலவிற்கும் ரூ.18.25 இலட்சம் தொடராச் செலவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**வணிகர் நல வாரியம்**

வணிகர் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு வணிகர்கள் நலனுக்காகப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என எங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளோம். இவ்வாரியத்தின் தலைவராக முதலமைச்சர் செயல்படுவார் மற்ற அலுவலரல்லாத உறுப்பினர்கள் 5 நபர்களும், அலுவல் சார்ந்த உறுப்பினர் 6 நபர்களும் உறுப்பினர்களாக இடம் பெறுவார்கள். ஏற்கெனவே அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக விளங்கும் வணிகவரித் துறைச் செயலர், நிதிச் செயலர், தொழில்துறைச் செயலர், வேளாண்மைத்துறைச் செயலர், வணிகவரி ஆணையர் மற்றும் இணை வணிக வரி ஆணையர் நிலையிலுள்ள உறுப்பினர்- செயலர், உறுப்பினராகச் செயல்படுவார்கள்.

இந்நலவாரியம் முன்பே நிறுவப்பட்டு ஒரு சில திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தும் அவைகள் சிறிதளவேனும் செயல்படுத்தப்படவில்லை. எந்த வணிகரும் உதவி அடையவும் இல்லை. இந்நிலையை மாற்றிப் பயனுள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வறிய நிலையிலுள்ள வணிகர்கள் பலருக்கு நலம் கிட்டும் வகையில் இவ்வாரியம் செயல்படுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

இந்நலவாரியத்தில் தற்போது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஒரு ஆண்டு பதிவு பெற்று வணிகம் செய்து வரும் வணிகர்கள் அனைவரும் தலா ரூ.25 செலுத்தி உறுப்பினர் ஆகலாம். அவர்கள் தொடர்ந்து நபருக்கு ரூ.25, ஒவ்வொரு ஆண்டும் செலுத்தி தங்களுடைய உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக ஆயுள் உறுப்பினர் என்ற முறையை மேற்கொண்டு ஆயுள் உறுப்பினர்களுக்கு ரூ.150 என நிர்ணயித்து ஆயுள் உறுப்பினர்களைச் சேர்க்கலாம்.

இவ்வாரியத்தில் 1990-91-இல் உறுப்பினர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை 1,009 நபர்கள் மட்டுமே. இந்த நிதியாண்டில் (1991- 92) இது 1,900 நபர்களாக உயர்ந்துள்ளது. மீண்டும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆண்டு வருவாய் ரூ.15,000-க்கு மேற்படாமல் பெறுகின்ற வணிகர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டாலோ அல்லது அவர்கள் இறக்க நேரிட்டாலோ அவர்களுடைய குழந்தைகள் பாலிடெக்னிக், கலைக் கல்லூரி அல்லது அதற்கு சமமான முதுநிலை பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு, ஆண்டுதோறும் அவர்களுக்கு ரூ.1,000-லிருந்து ரூ.1,500 வரை உதவித்தொகை வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

வணிகர் குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால், இறந்த உறுப்பினர் ஆண்டு வருமானம் ரூ.15,000-க்கு மேற்படாமல் உள்ள உறுப்பினர் குடும்பத்திற்கு ஒருமுறை உதவித்தொகையாக ரூ.5,000 வழங்கலாம் என்ற கருத்துருவும்,

ஆண்டு வருவாய் ரூ.24,000-க்கு மிகைப்படாமல் இருந்தால், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, இருதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கு அரசு அனுமதித்துள்ள மருத்துவ மனைகளில் ரூ.10,000 வரை வழங்கலாம் என்ற கருத்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டங்கள் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும். இதற்கு ஏறத்தாழ ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படும்.

## கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள்

கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 1990-91-ஆம் நிதியாண்டில் 168 கிராமங்களுக்குக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டது. 168 கிராமங்களில் 110 கிராமங்களுக்குக் கையிறைப்பான் மூலமாகவும், 38 கிராமங்களுக்கு மின் இறைப்பான் மூலமாகவும், 9 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகவும், எஞ்சியுள்ள 11 கிராமங்களுக்குக் குழாய் விரிவாக்கம் மூலமாகவும், திட்டங்கள் முடிக்கப்பட்டன. இதன் மூலம், சுமார் 93,600 மக்கள் பயன் பெறுகிறார்கள். இத்திட்டங்களைச் செயல்படுத்த ஆன தொகை ரூ.219 இலட்சமாகும்.

பருவமழை பெய்யாததனால், வறட்சி நிவாரணப் பணியின் கீழ், 92 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் 25,000 மக்கள் பயன் அடைந்தனர்.


மேலும், இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமிற்கு 19 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின் கீழ் 40 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு 11,200 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 1991-92-இல், 207 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இவற்றில் 141 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படும். இதுவரை 16 கிராமங்களுக்குக் கையிறைப்பான் மூலமாகவும், 2 கிராமங்களுக்கு விசைப் பம்புத் திட்டமும், 3 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், ஒரு கிராமத்திற்குக் குழாய் நீடிப்பு மூலம் குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணியின் கீழ், இதுவரை 46 கிராமங்களில் கையிறைப்பான் பொருத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கரும விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Programme), 123 கையிறைப்பான், 6 குழாய் நீட்டிப்புத் திட்டமும் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.





# தமிழகத்தில் வனமும் வன உயிரினமும்

தமிழ்நாடு நிலவளம், நீர்வளம், வனவளம் செறிந்த நல்லதொரு சூழ்நிலையைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,30,057 ச.கி.மீ. ஆகும். அதில் 22,699 ச.கி.மீ. காடுகளாக உள்ளது. நாட்டின் மொத்தப் பரப்பில் குறைந்தது 33 சதவிகிதம் வனப் பரப்பாக அமைய வேண்டும். ஆனால், தற்போதுள்ள வனப் பரப்பளவு சுமார் 17.45 சதவிகிதம் ஆகும்.

ஆந்திரா, கேரளா, கர்நாடகா மாநிலங்கள் அமைந்த பின்பும் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்திலிருந்து சில பகுதிகள் மேற்படி பகுதிகளுக்குத் தரப்பட்ட பின்பு, சுமார் 15 சதவிகிதம் தான் காடுகளாக இருந்தன. தற்போது தமிழகத்தில் 17.45 சதவிகிதம் காடுகளாக இருப்பதற்குக் காரணம் ஜமீன், ஜாகீர் வன நிலங்கள், ஒதுக்கக் காடுகளாக அறிவிக்கை செய்ததாலும், சமூகக் காடுகள் மூலம் பல்வேறு இடங்களில் வனத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளதாலும் வனப்பரப்பு தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 25,000 எக்டேர் ஜமீன், ஜாகீர், வனப்பகுதிகள் ஒதுக்கக் காடுகளாக மாற்றத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வனப் பொருட்கள்**

வனத்தினைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் வழங்குதல், கூழ்மரங்கள் அளித்தல் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.2.15 இலட்சம் பெறுமானமுள்ள மூலப்பொருட்கள் வனத்துறையிலிருந்து தரப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் முக்கிய மூலப் பொருட்கள் புளுகம், சிவப்புகம், மைசூர்கம், தோல் உரிக்கப்பட்ட மிலாறுபட்டை, மூங்கில் ஈத்தல், வாட்டில் பட்டை, தணுக்கு மரம், பைன்ஸ் பட்டுலா முதலியனவாகும்.

குறிப்பாகச் சொல்லப்போனால் சமூகக் காடுகள் திட்டம் மூலம் எழுப்பப்பெற்ற தோட்டங்களில் முதிர்ச்சியடைந்த கருவேல், வெல்வேல் மரங்கள் வெட்டப்படுவதன் மூலம் மக்களுக்குத் தேவையான விறகுத்தேவை பெருமளவில் பூர்த்தி செய்யப்படுகிறது.

**ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வனத்துறையின் வளர்ச்சிப் பணிக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.140 கோடி ஆகும். இதன் மூலம் 1,73,000 எக்டேர் பரப்பளவில் பல்வேறு வனத்தோட்டங்கள் எழுப்பி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்**

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைக் கொண்ட ஒரு குழு மூலம் தயாரிக்கப்பட்டது. அவரது அறிக்கையின் அடிப்படையில் வனத்துறைக்கு 8-வது திட்டக் கால இலக்காக ரூ.191 கோடி பல்வேறு திட்டப் பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவைகள் முக்கியமாக வன வளத்தைப் பாதுகாத்து வளர்த்தல் சுமார் ரூ.11 கோடி இயற்கை வளத்தினைப் பாதுகாத்தல் சுமார் ரூ.55 கோடி சமுதாயம் மற்றும் இடைப்படுவன அமைப்பு அமைத்தல் என்ற முறையில் ரூ.86 கோடி, வனப்பொருட்கள் உற்பத்திக்கு ரூ.22 கோடி, விஞ்ஞானம், தொழில் நுட்பப் பயிற்சிக்கு ரூ.11 கோடி, மண்வளப் பாதுகாப்புப் பணிக்காக ரூ.6.00 கோடி, மொத்தம் ரூ.191 கோடி ஒதுக்கப்பட்டு 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொண்டு வனத்துறையில் ஒரு மறுமலர்ச்சி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிடா நிதி உதவியுடன் செயல்படும் சமூகக் காடுகள் திட்டம்**

சமுதாய நிலக்காடுகள் 1.3 இலட்ச ஏக்கரில் எழுப்பி சமுதாய நிலங்களில் காடு வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. இப்பணி 1981-82-லிருந்து சிடா நிதி உதவி

**எஸ். டட் இ.வ.ப.,**
**வன உயிரினக் காப்பாளர்**
**சென்னை**



யுடன் இவ்வனப் பண்ணைத் திட்டத்தைச் சமூகக் காடுகள் திட்டமாக மேம்படுத்தியுள்ளது. 1981-82-லிருந்து 1985-86 வரை ஐந்தாண்டுகளுக்கான முதல் கட்டம் 7 ஆண்டுகளாக ஆக்கப்பட்டு 1987-88 வரை செயல்பட்டது. அதற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.45 கோடிக்குப் பதிலாக ரூ.57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் நோக்கத்தினை மனதிற்கொண்டு, சிடா உதவியுடன் சமூகக் காடுகள் திட்டப்பணிகள் இரண்டாவது கட்டம் 5 ஆண்டுகளுக்கு 1988-89-லிருந்து 1991-93 வரை நீடிக்கப்பட்டது. இந்த இரண்டாம் கட்ட திட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை மரபட்டா திட்டத்தையும், வேளாண்மைத்துறை வறண்ட நிலங்களில் வேளாண்மைக் காடுகள் வளர்த்தல் திட்டத்தையும், வனத்துறை சமூக-வளப் பண்ணைத் திட்டம், விதை நாற்று உற்பத்தி, ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் பயிற்சி விளம்பரத்திற்கான ஒத்துழைப்பு வழங்கல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டுள்ளன. இவை தவிர புதிய திட்டமாக இடை முகதளக் காடு வளர்ப்புத் திட்டம் 3 கோட்டங்களில் (திண்டுக்கல்-அண்ணா, சேலம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களில், செயல்படுத்தப்படுகிறது. டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் தலைமையின் கீழ், சிடா உதவியுடன் இவ்விரண்டாம் கட்ட திட்டத்தில், சமூகக் காடுகள், ஆராய்ச்சி-வளர்ச்சி சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விரண்டாம் கட்டத்தில், புதிய சமுதாயக் காடுகள் 56,300 எக்டேரில் எழுப்புதல் மற்றும் ஏற்கெனவே உள்ள தோட்டங்களை மேம்படுத்தவும் செய்யப்படுகிறது. வரிசைத் தோட்டங்கள், வறண்ட நிலங்களில் வேளாண்மைக் காடுகள் ஊரக வளர்ச்சித் துறையில் மரப்பட்டா திட்டம், ஒதுக்கக் காடுகளில் இடை முகத்தளக் காடுகள், தரமான நாற்றுக்கள் உற்பத்தி, ஆராய்ச்சி - கண்காணிப்பு, பயிற்சி - விரிவாக்கம் ஆகியவற்றிற்கென 2-வது கட்ட திட்டத்தில் ரூ.85.4 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வனப் பண்ணைக் காடுகளை அறுவடை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை 50:50 என்ற விகிதத்தில் ஊராட்சிகளுடன் வனத்துறை பகிர்ந்து கொண்டது. கடந்த 9 ஆண்டுகளில் சுமார் ரூ.750 இலட்சங்கள் ஊராட்சிகளுக்குப் பங்குப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த வருமானத்தை ஊராட்சிகளும், வனத்துறையும் முறையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

## வான்வழி விதை தெளிக்கும் திட்டம்

1989-90-ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 5000 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990-91- ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள 11 கோட்டங்களில் தரந் தாழ்ந்த காட்டுப் பகுதிகளில் சுமார் 16,000 எக்டேர் பரப்பளவில் ரூ.112 இலட்சம் செலவில் வான் வழி விதைத் தெளிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டும், வான் வழி விதைத் தெளிப்புத் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

தமிழகத்தில் திருச்சி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி, சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் வாழும் 2.10 இலட்சம் பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டம் சுமார் ரூ.1.18 கோடி அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 42 பழங்குடியினர் கிராமங்களில் வசிக்கும் 2,062 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. சுமார் 2.85 இலட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு இத்திட்டத்தின் கீழ் கிடைக்கிறது. பழங்குடியினருக்காக 16 தொடக்கப் பள்ளிகளையும், ஒரு மேல்நிலைப் பள்ளி, ஒரு உயர்நிலைப் பள்ளியையும் வனத்துறை நடத்தி வருகின்றது. இப்பள்ளிகளில் மொத்தம் 2,485 மாணவர்களும், 109 ஆசிரியர்களும் உள்ளனர். தற்சமயம் பழங்குடியினர் நலனுக்காக இரண்டு உயர்நிலைப்பள்ளி விடுதிகளும், எட்டு ஆரம்பப்பள்ளி மாணவர் விடுதிகளும் திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பத்து விடுதிகளின் மூலம் மொத்தம் 750 பழங்குடி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழகக் காடுகளில் சில பகுதிகளில் மதிப்புமிக்க சந்தன மரங்கள் இயற்கையாக அமைந்துள்ளன. சந்தன மரக்காடுகள் சுமார் பத்து இலட்சம் எக்டேர் அளவில் ஆங்காங்கே பரவலாக அமைந்துள்ளன. அவற்றின் விலை தற்போது டன்னுக்கு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இச்சந்தன மரச் செல்வத்தின் மதிப்பு மிகவும் உயர்ந்து வருகின்றமையால், இவற்றைப் பாதுகாப்பது மிகவும் கடினமானதொரு பணியாகி வருகிறது. கடத்தல்காரர்கள் நவீன ஆயுதங்களுடன் கூட்டாகச் சேர்ந்து திருட்டுச் செயலில் ஈடுபடுகின்றனர். எனவே, மதிப்புமிக்க இந்த வனச் செல்வத்தைப் பாதுகாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக, அதிகமாகச் சேதப்படுத்தப்படுகின்ற மற்றும் மிகவும் பரந்துள்ள வனப் பாதுகாப்பு இலக்குகளை (பீட்) பிரித்து அமைக்க பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, வனக்காப்பாளர், வனக்காவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தவும், பாதுகாப்புப் பணியாளர்களுக்குத் தற்காப்பு ஆயுதங்கள், தொலைத் தகவல் தொடர்புச் சாதனங்களை வழங்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. சந்தன மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் நிகழ்ந்து வரும் சந்தனமரக் கடத்தல்களைக் கட்டுப்படுத்தி ஒடுக்க, வனத்துறையும், காவல்துறையும் இணைந்து முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. வனத்துறைப் பணியாளர்கள்

இவ்வரிய செல்வத்தைக் காக்கும் பணியைச் செவ்வனே செய்ய முடுக்கி விடப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் 8 பாதுகாக்கப் பட்ட இடங்கள் உள்ளன. அவை களின் விவரம் பின்வருமாறு:

1. புலிகாட் வன உயிரினச் சரணாலயம் 60 ச.கி.மீ.
2. கிண்டி தேசியப் பூங்கா 2.82 ச.கி.மீ.
3. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் 0.30 ச.கி.மீ.
4. வேட்டன்குடிபட்டி பறவைகள் சரணாலயம் 0.13 ச.கி.மீ.
5. வல்லநாடு வெளிமான் சரணாலயம் 16.41 ச.கி.மீ.
6. கரிக்கிளி பறவைகள் சரணாலயம் 0.60 ச.கி.மீ.
7. கஞ்சரான் குளம் பறவைகள் சரணாலயம் 0.38 ச.கி.மீ.
8. சித்தராங்குடி பறவைகள் சரணாலயம் 0.67 ச.கி.மீ.

புலிகள் காப்பகத் திட்டம், மன்னார்வளைகுடா பகுதிகளில் 21 தீவுகளை உள்ளடக்கிய பகுதியில் தேசிய கடல்வாழ் உயிரினப் பூங்கா என அமைக்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலிகள் காப்பகத் திட்டம் போல், யானைகள் காப் பகத் திட்டம் ஒன்றும் (Project Elephant) தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக் குழு ஒன்று இத்திட்டம் பற்றி ஆய்வு செய்து சென்றுள்ளது.

**நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்பு**

தமிழ்நாடு, கேரளம், கர்நாடக மாநிலங்களின் பகுதிகளைக் கொண் டதாக அமையப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் உயிரினச் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே இது ஒரு முன்னோடித் திட்டமாக அமையப் பெற்று செயல்பட்டு வரு கிறது.

தமிழகத்தில் 3 வனக் கழகங்கள் உள்ளன. அவையாவன:-

1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சி
2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்
3. அரசு ரப்பர் தோட்டக் கழகம், கன்னியாகுமரி

கோவை தென் வட்டார வனச் சரகக் கல்லூரியைத் தமிழ்நாடு அரசு மீண்டும் பிப்ரவரி 1990 முதற் கொண்டு, மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெற்று இயக்கி வருகிறது. இக்கல்லூரியில் வனச் சரகர்களுக் குப் பயிற்சி அளிப்பது, புத்தறிவுப் பயிற்சி அளிப்பது என்ற கோட் பாட்டுடன் செயல்படவுள்ளது.

தமிழக வனத்துறையில் பல்வேறு திட்டப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் மேம்படுத்த கூடுதல் உயர் அதிகாரிகள், பணியாளர்கள் 300 பணியிடங்கள் இந்த நிதி ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளன.


இந்தியாவிலேயே மிருகக்காட்சிச் சாலையை முதன்முதலாக 1855-ஆம் ஆண்டில் சென்னையில் அமைத் தலின் மூலம் தமிழகம் பெருமை யடைகிறது. 1985-இல் வண்டலூர் உயிரியல் பூங்கா திறந்து வைக்கப் பட்டது.

பொதுவான அனைத்து விலங்கு இருப்பிடங்களும் மிகப் பெரியதாக அமைக்கப்பட்டு, அங்கு விலங்குகள் இயற்கைச் சூழ்நிலையை ஒத்த சூழ் நிலையில் வைக்கப்பட்டு பராமரிக் கப்படுகின்றன. சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட யானை இருப்பிடத்தினுள் பல்வேறு வயது யானைகள் வைக்கப்பட்டு இயற்கையாகக் காணப்படும் யானைக் கூட்டம் போல் காட்சி அளிக்கிறது. மேலும் புதிய முறையில், புலியும், கடமானும், சிங்கமும், நீல்கை மானும் ஒரே திறந்தவெளியில் அவைகள் ஒன்றுக்கொன்று மிக அருகில் இருப்பது போன்று ஒரு காட்சியைத் தோற்றுவிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நவீன சிறப்பு இருப்பிடங்கள் வேறு எந்த உயிரியல் பூங்காவிலும் இல்லை.

இந்த உயிரியல் பூங்காவில் தற்பொழுது 350-க்கும் மேற்பட்ட 56 வகையான பாலூட்டி விலங்கு களும், 400-க்கும் மேற்பட்ட 103 வகையான பறவையினங்களும், 50-க்கும் மேற்பட்ட 20 வகையான ஊர்வனங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 30 வகையான அயல்நாட்டு விலங்குகளும் அடங்கும்.

**பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் விலங்குகள்**

இவ்வுயிரியல் பூங்காவில் அரிய விலங்கினங்கள் பலவற்றை இந்தியா மற்றும் அயல்நாடுகளிலுள்ள பல் வேறு உயிரியல் பூங்காவிலிருந்து பெறப்பட்டு வருகின்றன. இதுவரை அமெரிக்கா, (மனிதக்குரங்கு), யுகோஸ்லோவேகியா (தென் அமெரிக்க ஒட்டகங்கள் மற்றும் பழுப்பு நிறக்கரடி), மலேசியா (கரடிப்பூனை), ஆஸ்திரேலியா (கங்காரு), நாடுகளிலிருந்து விலங்குகள் பெறப்பட்டுள்ளன.



தமிழ்நாடு வனத்துறையில், வன ஆராய்ச்சிப் பிரிவு, வனமேம்பாட்டுக் காகவும் வன மூலப்பொருட்கள் உற் பத்திப் பெருக்கவும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்பு தேக்கு மரம் - பசுமை இலைக்காடு இனங்களில் தோட்டம் எழுப்பும் முறைகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. தற்பொழுது காலத் திற்கு ஏற்றாற்போல் மர வளர்ப்புக் கலையில் பல்வேறு பிரிவுகளில் வன ஆராய்ச்சி நடைபெற்று வரு கின்றது.

# பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு தருக!

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

30.9.91 அன்று சட்டப் பேரவையில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 340-வது விதி 'சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றிய பரிந்துரைகளைத் தர ஒரு குழுவைக் குடியரசுத் தலைவர் நியமிக்கலாம்' என்று குறிப்பிடுகிறது. இவ்வதிகாரத்தின் கீழ், முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குழு, மத்திய அரசால் 29.1.53-இல் அமைக்கப்பட்டது. முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குழு, ''கலேல்கர் குழு'' என்று பொதுவாக அழைக்கப்பட்டது.

திரு.காகாசாகிப் கலேல்கர் தலைமையில் அமைந்த இக்குழுவின் உறுப்பினர்களிடையே ஒன்றுபட்ட மனப்போக்கும், ஏகமனதான கருத்துகளும் ஏற்படவில்லை. எனவே இக்குழுவின் அடிப்படைப் பரிந்துரைகளில் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குழுவின் தலைவர் காகாசாகிப் கலேல்கரே தனது கடிதத்தில் மிகவும் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார் அதாவது, சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைப் பிரிப்பதைத் தாம் எதிர்ப்பதாகவும், குழு அறிக்கைகளில் தரப்பட்டுள்ள பல பரிந்துரைகளில் தமக்கு வேறுபாடு இருப்பதாகவும் குறிப்பிட்டார். இக்குழுவின் அறிக்கை 30.3.1955 அன்று குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அது 3.9.56 அன்று நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. கலேல்கர் குழுவின் பரிந்துரைகளின் மீது மத்திய அரசு எவ்வித உத்தரவுகளும் பிறப்பிக்கவில்லை.

கலேல்கர் குழுவின் அறிக்கையில் அடிப்படை மாறுபாடுகள் இருந்தமையால், மத்திய அரசு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவை 1978-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாள் அமைத்தது. இதன் தலைவராகத் திரு. பி.பி.மண்டல் அவர்களையும், உறுப்பினர்களாகத் திருவாளர்கள் ஆர்.ஆர்.போலே, திவான் மதன்லால், தீனபந்துசாஹூ, கே.சுப்பிரமணியம் ஆகியோரையும் நியமனம் செய்தது. இவர்களுள் திரு.தீனபந்துசாஹூ உடல் நலக்குறைவால் உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகவே அவருக்குப் பதில் திரு.எல்.ஆர். நாயக், குழுவின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

திரு.மண்டல் அவர்களின் தலைமையிலான இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு தனது அறிக்கையை 31.12.80 அன்று அரசிடம் சமர்ப்பித்தது. 1982 ஏப்ரல் திங்களில் மண்டல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது.

இப்பேரவை முந்தைய அரசின் ஆட்சிக் காலத்தில், 12.5.89 அன்று மண்டல் குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கோரி ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. மத்திய அரசு 13.8.90-ஆம் நாளிட்ட தனது குறிப்பாணையில், மத்திய அரசு அலுவலகங்களிலும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களிலும் 27 சதவிகித இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. ஆனால் இந்த ஒதுக்கீடு கல்வி நிறுவனங்களில் அனுமதி குறித்துப் பொருந்துமா என்பது பற்றி எவ்வித ஆணையும் பிறப்பிக்கவில்லை. எனினும், அன்றைய தமிழக அரசு இப்பேரவையில் 21.8.90-ஆம் நாளன்று மத்திய அரசின் இந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டு முடிவைப் பாராட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஆனால், இந்த முடிவை மத்திய அரசு அறிவித்தவுடன் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முழுமையாகவும், அதன் நோக்கம் நிறைவேறத்தக்க வகையிலும் நடைமுறைபடுத்த வேண்டும் என்றும், வற்புறுத்தி வந்த அ.இ.அ.தி.மு.கழகத்தின் சார்பில் நான் இந்த 27 சதவிகிதம் மட்டுமே ஒதுக்கீடு என்பதையும், கல்வித்துறையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை என அன்றைய மத்திய அரசு முடிவு செய்திருந்ததையும் வன்மையாகக் கண்டித்தேன் என்பதையும் அனைவரும் அறிவீர்கள்.

மண்டல் கமிஷன் தன்னுடைய பரிந்துரையில் பிற்பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு அம்மக்கள் தொகையின் அடிப்படையில் 52 சதவிகிதம் இருக்க வேண்டும் எனத் தன்னுடைய பிரதான பரிந்துரையாகச்

செய்திருந்ததை மத்திய அரசு கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டதைக் கண்டித்து அ.இ.அ.தி.மு.க. ஏற்கெனவே தமிழகத்தில் கடைப்பிடித்து வரும் 50 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை போன்று மத்திய அரசிலும் இருந்திட வேண்டும் எனத் தொடர்ந்து இக்கொள்கையைத்தான் தெரிவித்துள்ளோம்.

ஆனால், மத்திர அரசின் இந்த 27 சதவிகித ஒதுக்கீட்டு அறிவிப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பல 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் இந்த மத்திய அரசின் ஆணையினைச் செயல்படுத்தக்கூடாது என்று உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. மேற்படி தடையுத்தரவை நீக்கக் கோரி மத்திய அரசு, உச்சநீதி மன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசுக்கு ஆதரவாகத் தமிழ்நாடு அரசும் உச்சநீதி மன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்துள்ளது. ஆனால் 30.6.90 அன்று இந்தியப் பிரதமருக்கு முந்தைய அரசு எழுதிய கடிதத்தில் 52 சதவிகித ஒதுக்கீடுதான் தமிழ்நாடு அரசின் நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தாலும் இட ஒதுக்கீட்டினை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பிலும் கல்வி நிலையங்களில் சேர்க்கையிலும் அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவில்லை என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உச்சநீதிமன்றம், தற்போதைய மாறிய அரசியல் சூழலில், இப்பொருள் மீது மத்திய அரசின் திட்டவட்டமான கொள்கையைக் கூறுமாறு அறிவுறுத்தி, இறுதி விசாரணை நாளை, 10.10.91-ஆம் தேதிக்குத் தள்ளி வைத்துள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 4.7.91-ஆம் நாளன்று இப்பேரவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையிலும், 4.9.91 அன்று நிதி அமைச்சர் அவர்களால் நிகழ்த்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீதான உரையிலும், 18.9.91-ஆம் நாளன்று கோரிக்கை எண் 32-ன் மீது நிகழ்ந்த விவாதத்திற்கு நான் அளித்த பதில் உரையிலும் இம் முக்கியப் பொருள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

நமது நாட்டின் மக்கட் மதொகையில் (1981 Census) இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் அளவு 52 சதவிகிதமாக இருப்பதாலும், தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் 67 சதவிகிதம் இருப்பதாலும், இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை மத்திய அரசு 27 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டும்; இந்த ஒதுக்கீட்டினை வேலைவாய்ப்புக்கு மட்டுமின்றிக் கல்வி நிறுவனங்களின் அனுமதிக்கும் பொருந்துமாறு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்பதே இந்த அரசின் உறுதியான நிலையாகும்.

சமூக நீதியைக் காத்திட, சமுதாய நிலையிலும், கல்வித்துறையிலும் பின் தங்கியுள்ள வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு மண்டல் குழுவின் பரிந்துரைகளை விரைந்து, முழுமையாக நிறைவேற்றிச் செயல்படுத்திட மத்திய அரசு மனப்பூர்வமாக முன்வரவேண்டுமென்றும், அப்படி மண்டல் கமிஷனின் பரிந்துரைகளைச் செயல்படுத்துகையில் பிற்பட்டோருக்கு மட்டும் 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இப்பேரவை மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசின் இந்த உறுதியான நிலையைத் தெளிவாக மைய அரசுக்குத் தெரிவித்து வலியுறுத்த வேண்டி, தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்தத் தீர்மானத்தை முன் வைத்து நிறைவேற்ற வேண்டுமெனக் கோரி தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**தீர்மானம்**

''அரசியல் அமைப்புச் சட்டத்தின் 340-வது விதியின்படி சமுதாய நிலையிலும், கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றி வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இந்த நோக்கத்தினைச் சிறப்புடன் செயல்படுத்துகிற வகையில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டளவு 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாகத் தமிழக அரசால் 1980-ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர் தொழிற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதிலும், அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதிலும் அதிகப் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் மண்டல் குழுப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இன்றைய மத்திய அரசு 13.8.90 நாளிட்ட தனது குறிப்பாணையில் மத்திய அரசு அலுவலகங்களிலும், இதன் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டளவினை 27 விழுக்காடு என்று ஆணை பிறப்பித்தது. இன்றைய மத்திய அரசும் தனது சமீபத்திய முடிவின் மூலம் அதே 27 விழுக்காட்டைத்தான் குறிப்பிடுகிறது. ஆனால் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு பற்றி எந்தவித ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, சமுதாய நிலையிலும் கல்வித்துறையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு உதவுகிற வகையில் மண்டல் குழுவின் பரிந்துரைகளை, விரைந்து, முழுமையாக நிறைவேற்றிச் செயல்படுத்திட மத்திய அரசு முன்வரவேண்டும் என்றும், மேலும் மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் 27 விழுக்காடு என்பதற்குப் பதிலாக 50 விழுக்காடு என்று இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.''

# தொழுநோய் ஒழிப்புக்கு மருந்துகள் மட்டுமல்ல, மாறிய கண்ணோட்டமும் தேவை!

**தொழுநோயை நிச்சயமாகத் தடுக்க முடியும் என்றாலுங்கூட, அதைப் பற்றிய தவறான கருத்துக்கள் நிலவுவதை முதலில் தடுக்க வேண்டும். இந்நோய் ஒழிப்புக்கு மருந்துகள் மட்டுமல்ல, மாறிய கண்ணோட்டமும் தேவை என்கிறது இக் கட்டுரை.**

---

மனித இனத்தை வாட்டுகின்ற இன்னல்களில் ஒன்றான தொழுநோயைப் பற்றி வேதங்களில்கூட சொல்லப்பட்டுள்ளது. இன்றும் அதன் தாக்கம் உலகின் பல பகுதிகளிலும் உள்ளது. தொழுநோயை நிச்சயமாகத் தடுக்க இயலும் என்ற அளவுக்கு மருத்துவ முறைகள் வளர்ந்துவிட்டபோதிலும், இன்றும்கூட அதைப்பற்றிய தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. குணப்படுத்தவே இயலாத நோய், பாரம்பரியமாக வருவது, தொற்றும் தன்மை வாய்ந்தது. ஏன், பாவத்தின் சம்பளம் என்று கூடத் தொழுநோயைப் பற்றி கருத்துக்கள் நிலவுகின்றன. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள், குடும்பத்தினரால் வெளியே துரத்தப்படும் நிலையும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த தள்ளிவைத்தலின் காரணமாக ஆங்காங்கே தொழுநோய்க் காலனிகள் தோன்றி, நவீன மருத்துவச் சிகிச்சைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத மனிதப் புழுக்களாகத் தொழுநோயாளிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதிக அளவில் தொழுநோய் பாதிக்கப்படும் பகுதிகளைக் கொண்ட நமது நாடு, இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அதை முற்றிலுமாக ஒழித்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டுள்ளது. உலகில் உள்ள ஒன்றரைக் கோடி தொழுநோயாளிகளில் மூன்றிலொரு பங்கினர் இந்தியாவில் உள்ளனர். இந்தியாவில் உள்ள தொழுநோயாளிகளில் 88 சதவிகிதம் பேர், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம், நாகாலாந்து, பீகார், கர்நாடகம், பாண்டிச்சேரி, இலட்சத் தீவுகள், அந்தமான்-நிகோபர் ஆகியவற்றில் வாழ்கிறார்கள்.

ஆர்மர் ஹவுஸன், 'எம்.லெப்ரே' என்ற தொழுநோய்க் கிருமியைக் கண்டுபிடித்ததிலிருந்து தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இன்று முழுமையாகக் குணப்படுத்தும் அளவுக்கு மருத்துவ முறை வளர்ந்துள்ளது. தொழுநோய் தடுப்பூசிகளை உருவாக்கும் பணி இறுதிக்கட்டத்தில் உள்ளது.

நாற்பதுகளில், தொழுநோய்க்கான ஒரே சிகிச்சை, அவர்களைத் தனிமைப் படுத்துவதே. அதன்பின்னர் 'டேப்ஸோன்' மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. என்றாலும், 1982-இல் 'குளோபாஸிமைன்', 'ரிபாம்பிஸின்' ஆகிய இரு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே, தொழுநோய்ச் சிகிச்சையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இவ்விரண்டு மருந்துகளுடன் சேர்த்து டேப்ஸோனையும் கொடுக்கும் முறைக்குப் 'பன்மருந்து சிகிச்சை' என்று பெயர். இச்சிகிச்சையை அளிப்பதன் மூலம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தொழுநோயை முழுவதுமாகக் குணப்படுத்த முடியும்.

இந்தியாவில் தொழுநோய் எதிர்ப்புக்கான முதலாவது திட்டம் 'தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்' என்ற பெயரில், 1954-55-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர் 1983-இல் 'தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முற்றிலும் மத்திய அரசின் உதவியாலேயே நடத்தப்படும் இத்திட்டம் கட்டம் கட்டமாகத் துவக்கப்பட்டு, 1995-ஆம் ஆண்டின் இறுதியில் நாடு முழுவதும் செயல்படத் தொடங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சரியான சிகிச்சையளித்தல் அனைத்து நோயாளிகளுக்கும் பன்மருந்து சிகிச்சையை அளித்தல், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் நோயாளிகள் மறுவாழ்வில் சமூகசேவை அமைப்புகளை ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நோயால் பாதிக்கப்படும் அபாயம் உள்ள மாவட்டங்களில், திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகச் சிறப்பு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 4.5 இலட்சம் மக்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் 758 தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்கள், ஐம்பதாயிரம் பேருக்கு ஒன்று என்ற விகிதத்தில் 902 நகர்ப்புறத் தொழுநோய் மையங்கள், 25,000 பேருக்கு ஒன்று என்ற விகிதத்தில் 6,099 கணக்கெடுப்புக் கல்வி மற்றும் சிகிச்சை மையங்கள் ஆகியன இயங்குகின்றன.

---

★ கற்களால் கட்டப்படும் கோயில்களைவிட, நரம்பாலும் தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையான கோயில்கள்.

— அண்ணல் காந்தியடிகள்

# காவல்துறை-

# தீயணைப்புத்துறை-

# மதுவிலக்கு ஆயத்தீர்வை

# மாண்புமிகு முதல்வர் அவர்கள்

# அறிவிப்புகள்

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 24.9.91 அன்று, சட்டப் பேரவையில் காவல்துறை மானியம், தீயணைப்புத்துறை மானியம், மாநில ஆயத்தீர்வை மானியம் ஆகிய முப் பெரும் மானியங்களின்மீது பேரவை உறுப்பினர்கள் பேசிய கருத்துக் களுக்குப் பதிலளித்து ஆற்றிய உரை விவரம் வருமாறு:

மொத்தம் 18 மாண்புமிகு உறுப்பினர்கள் தமது அரும்பெரும் கருத்துக்களைக் காவல்துறை, தீய ணைப்புத்துறை, மாநில ஆயத்தீர்வை மானியங்களின் மீது கூறியிருக் கிறார்கள். காவல்துறை மானி யத்தின்மீது 54 வெட்டுத் தீர்மானங் களும், தீயணைப்புத்துறை மானியத் தின்மீது 29 வெட்டுத் தீர்மானங் களும், மாநில ஆயத்தீர்வை மானி யத்தின்மீது 12 வெட்டுத் தீர்மானங் களும் உறுப்பினர்களால் கொடுக்கப் பட்டிருக்கின்றன. உறுப்பினர்களின் கருத்துரைகளும், வெட்டுத் தீர் மானங்களின் சாரமுமே இந்த மானி யங்களின் கூறுபாடுகளையும், குறை பாடுகளையும் தெளிவாக்குகின்றன.

எந்தத் திட்டத்திலும், செயல் பாட்டிலும், குறையும் உண்டு, நிறை யுமுண்டு. ‘குணம்நாடிக் குற்றம்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்’ என்பதே வள்ளுவம். இந்த அரசைப் பொறுத்த வரையில் குறைகள் இருந்தால் குறைக்கப்படவேண்டும்; நீக்கப்படவேண்டும் - நிறைகள் இன்னும் நீட்டிக்கப்படவேண்டும் என்பதுதான்.

மற்ற மாநிலத்தோடு ஒப்பிடும் போது, நமது மாநிலக் காவல்துறை யினர் செயல்வீரர்கள் என்று சொன் னால், அது மிகையாகாது. இந்த நேரத்தில் ஒரு சில புள்ளி விவரங் களைத் தருவது பொருத்தமாக இருக் கும் என்றே கருதுகிறேன். தமிழ் நாட்டில் 1990-ஆம் ஆண்டு பதி வாகிய வழக்குகளின் மொத்த எண் ணிக்கை 1,28,829 ஆகும். அதே ஆண்டில் ஆந்திராவில் 88,084 குற்றங்களும், கர்நாடகாவில் 56,873 குற்றங்களும், கேரளாவில் 75,649 குற்றங்களும் பதிவாகி உள்ளன. தமிழ்நாட்டில் 52,000 பேருக்கு ஒரு காவல் நிலையமும், ஆந்திரா வில் 46,500 பேருக்கு ஒரு காவல் நிலையமும் அமைந்துள்ளன. இதை வைத்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் வேலைப்பளு அதிகம் என்பது தெரியும்.

இருப்பினும், பதிவான குற்றங் களின் எண்ணிக்கையில், தமிழகக் காவல்துறையிலும், 65.1 விழுக்காடு அளவிற்குக் குற்றங்களைக் கண்டு பிடித்து சிறந்த சேவை ஆற்றியுள் ளனர். அதேகாலத்தில், ஆந்திர மாநிலத்தில் 52.6 விழுக்காடும், கேரள மாநிலத்தில் 22.6 விழுக் காடும் என்ற அளவுதான் குற்றங் களைக் கண்டுபிடித்துள்ளனர். குறிப்பாகக் களவாடப்பட்ட பொருட் களை மீட்பதில், தமிழ்நாடு 65.5 விழுக்காடு அளவை எட்டி முதலிடம் வகிக்கிறது. கர்நாடகம் 52.9 விழுக் காடும், ஆந்திரா 45.6 விழுக் காடும், கேரளா 25.8 விழுக்காடும் பெற்றுள்ளன. களவுச் சொத்துக் களை மீட்பதில், அகில இந்திய அளவான 48 விழுக்காட்டை மிஞ்சும் அளவிற்குத் தமிழ்நாடு அதிக அளவில் கண்டுபிடித்துள்ளது குறிப் பிடத்தக்கதாகும். தமிழகத்தில் இழக் கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் ரூ.13.50 கோடி. மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் 8.25 கோடி. இத்தனைச் சிறப்புக்குரிய காவல்துறையினருக்கு நமது மாநிலத் தில் 1,075 காவல் நிலையங்களும், 180 புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றை வைத்து 1.30 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவில், பரவிக் கிடக்கின்ற 5½ கோடி தமிழ் மக்களைப் பாதுகாத்தாக வேண்டிய பொறுப்பு அவர்களிடம் சுமத்தப் பட்டிருக்கிறது.

காவல்துறையின், மற்றொரு முக்கியப் பணியை என்னால் இது



**• மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத் தையும் சிறுவயதிலேயே ஒருவன் கற்றுக்கொண் டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.**

**—தந்தை பெரியார்**

சமயம் நினைவு கூறாமல் இருக்க முடியவில்லை. சமீபகாலம்வரை அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த நமது மாநிலம், இலங்கைப் போராளிகள், குறிப்பாக விடுதலைப் புலிகளால் அமளிக்காடாக, ஆயுதக் கலாச்சாரத்தின் கிடங்காக மாறியது தான், பேரதிர்ச்சியையும், பெரும் பயத்தையும் உண்டாக்குகிறது.

அண்டை நாட்டிலே ஏற்பட்ட அவர்களின் பிரச்சினை, நம் மாநிலத்தை இவ்வளவு தூரம் பாதிக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு விளைந்த இன்னலைக் களைய முற்பட்ட தமிழகம், இன்று அந்த நாட்டு விடுதலைப் புலிகளின் அட்டகாசத்திற்கும், அடாவடிச் செயல்களுக்கும் ஆட்பட்டு, அல்லோல கல்லோலப் படுவது தெளிவாகிவிட்டது.

எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையில், தமிழ்நாட்டை இலங்கைத் தீவிரவாதிகள், தங்களுடைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இருப்பிடமாக ஆக்கிக் கொள்ள இம்மியளவும் அனுமதிக்கமாட்டோம் என்று குறிப்பிட்டிருந்தோம். அதன் அடிப்படையில் இலங்கைத் தீவிரவாதிகள், மற்றும் அகதிகள் ஆகியோரின் மீது எங்களுடைய தெளிவான கொள்கையை, மக்களுக்கும், மத்திய அரசுக்கும் எடுத்து வைத்துள்ளோம்.

அதாவது-

**1. இந்த அரசு அரசியல் மன உறுதியை (Political will) தெள்ளத் தெளிவாக்கியுள்ளது.**

**2. இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதிகளுக்கும், உதவும் கரமாகவும், ஊட்டும் கரமாகவும், திகழும் அதே நேரத்தில் இந்த அரசு ஆயுதத்தையும், பலாத்காரத்தையும் பிரயோகப் படுத்தி, பல்வேறு கொடுஞ்செயல்களைச் செய்யும் விடுதலைப் புலிகளின் விஷயத்தில் இணக்கம் காட்டவோ, அவர்களை அடக்குவதில் தயக்கம் காட்டவோ தயாராக இல்லை, என்று தெளிவாகச் சொல்லியுள்ளது. இன்னும் சிறிது வெளிப்படையாகச் சொன்னால், அமைதியான தமிழகத்தில் இப்படிப்பட்ட கொடுமையாளர்களுக்கு இடமில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. காவல் துறையினரையும் நிர்வாக இயந்திரத்தையும் முடுக்கி விட்டிருக்கிறது. இப்படி, விடுதலைப் புலிகளையும், பயங்கரவாதிகளையும் அடக்கியே தீருவது என்பதை முடிந்த முடிவாகக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசு தீவிரமாக இறங்கியது. ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே, 26.6.91-இல் காவல்துறை, கப்பல் படை, கடலோர உயர் அதிகாரிகளின் மேல் மட்டக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளை, குறிப்பாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தமிழகத்தில் எப்படியும் ஒடுக்குவது என்பது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டது. இவர்களை அடக்கி ஒடுக்குவதில், காவல் துறையினர் எடுத்த அதிரடி நடிவடிக்கை வெகுவாகப் பாராட்டத் தக்கது.**

**★ நம் நாட்டில் பெண்களின் நிலை உயர்த்தப்பட வேண்டும். அவர்கள் மூலம் தான் வருங்காலக் குழந்தைகள் உயர்ந்த கருத்துக்களைப் பெறுவார்கள். பெண்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட்டால் அவர்கள் மூலம் பண்பாடு, கல்வி, பக்தி, நம்பிக்கை ஆகியவை நாட்டில் மலரும்.**

**—விவேகானந்தர்**

அகதிகள் முகாமில் இல்லாத இலங்கைத் தமிழர்கள், நம் மாநிலத்தில் தங்கியிருப்பதைச் சீராக்கவும், அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புகலிடம் கொடுப்பதைத் தடுக்கவும், முகாமில் தங்களைப் பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்கள், தங்கள் அருகிலுள்ள காவல் நிலையங்களுக்குச் சென்று, தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று, எல்லாத் தினசரி பத்திரிகைகளிலும், தமிழ்நாடு அரசு 28.6.91 அன்று அறிவிப்புக் கொடுத்தது. இது தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், 27,187 இலங்கைத் தமிழகர்கள் தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுத்த 3,569 வீட்டு உரிமையாளர்களும், இலங்கையைச் சேர்ந்த நபர்கள் தங்களது நிறுவனங்களில் பணி செய்து கொண்டிருப்பதாக 1,104 நிறுவனங்களும், அந்தந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களில் இது குறித்த தகவல்களை அளித்துள்ளனர். இவ்வாறு காவல் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளும் கடைசித் தேதி முடிவடைந்த பின்னரும் பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்களைக் கண்டு பிடிக்கும் சிறப்பு நடவடிக்கை ஒன்றைக் காவல்துறையினர் மேற்கொண்டனர். இத்தகைய இலங்கைத் தமிழர்கள் சுமார் 500 பேர் தனி முகாம்களில் தற்போது வைக்கப் பட்டுள்ளனர்.

மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் கடத்தல்காரர்கள், மற்றும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் முக்கியமான இடங்களில், நவீன ஆயுதங்களைத் தாங்கிய ஆயுதப் போலீசாரின் 34 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. கடல் வழியே தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வண்ணம், மத்திய ரிசர்வ் காவல் படையின் 10 கம்பெனிகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 10 கம்பெனிகளும் கடலோரப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளை வெளிக்கொணர, மத்திய ரிசர்வ் காவல் படையின் மேலும் இரண்டு கம்பெனிகள் உட்பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ளன. கடலோரக் கிராமங்களில், வாகனம் மற்றும் காலால் நடந்து செல்லும் ரோந்துப் பணியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடலோரத்தின் முக்கிய இடங்களில், தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டு விரைவு வாகனங்களில், அதிரடிப்படையினரும் நிலை கொண்டுள்ளனர்.

மீனவர்கள், அவர்கள் வழக்கமாகப் பயன்படத்தும் படகுகளுக்குத் தேவையான அளவு எரிபொருட்களைத்தான் வாங்குகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு, அனைத்து மீனவர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டில் பரந்த கடலோரப் பகுதி, கப்பற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, மற்றும் சுங்கத் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்

போடு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கடற் பகுதிகளில், நம் எல்லை வரையிலும் சென்று மீன் பிடித்தல் சீராக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. காவல் துறையினரின் துணையோடு செல்லும் மீன்பிடிப் படகு அணிகள் மட்டுமே நமது கடல் எல்லை வரை சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கை மீனவர்களோடு மீனவர்களாகக் கலந்து இலங்கையிலிருந்து இங்கு வந்து செல்வதற்கான ஒரு வாய்ப்பை, விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்காமல் செய்ய முடியும் என்று ஒரு உறுதிப்பாட்டை நமக்கு அளிக்கிறது.

**கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை**

இதுவரை 10 விடுதலைப் புலிகளும், 21 இலங்கைத் தமிழர்களும், விடுதலைப் புலிகளின் உள்ளூர் ஆதரவாளர்கள் 40 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 4,760 லிட்டர் டீசல்; 2,444 லிட்டர் என்ஜின் ஆயில்; 150 லிட்டர் மண்ணெண்ணெய்; 1 லாரி; 6 மோட்டார் சைக்கிள்கள், 2 வேன்கள்; 3 பிளாஸ்டிக் படகுகள், 8 படகு என்ஜின்கள், ரொக்கம் ரூ.2,72,773, 5 பிஸ்டல்கள், 2 நாட்டு ரக ரிவால்வர்கள்; 13 நாட்டு ரக துப்பாக்கிகள்; 5,597 தோட்டாக்கள், 6 கையெறி குண்டுகள், 7,650 காலி கையெறி குண்டுகள், 19 பயன்படுத்தப்பட்ட ஏ.கே.47 துப்பாக்கித் தோட்டாக்கள், 46 கிராம் தங்கம், 26 வயர்லெஸ் செட்டுகள், 10 மீட்டர் விடுதலைப் புலிகளின் சீருடைத் துணி; 26,523 வெடிகுண்டுக் குச்சிகள், 38,440 மின்சார டிடொனேட்டர்கள், 1,21,853 சாதாரண டிடொனேட்டர்கள் மற்றும் 10,000 அடி ஃப்யூஸ் ஒயர் ஆகியவற்றைக் காவல்துறையினர் கைப்பற்றினர்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிப்பதிலும், குற்றத் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்வதிலும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நமது காவல்துறையை நவீனப்படுத்துவது, தற்போது காலத்தின் கட்டாயமாகும். காவல்துறைக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்படுவதும், சரியான பயிற்சி அளிக்கப்படுவதும் முன்னுரிமையோடு கவனிக்கப்படவேண்டிய விஷயம் குறிப்பாக இலங்கைப் போராளிகள் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால், தமிழகக் காவல்துறை உடனடியாக நவீனப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

இன்னும் இலங்கைப் போராளிகள் அச்சுறுத்தல் தொடரும் நிலையுள்ளதாலும், மிகவும் நவீன சக்தி வாய்ந்த நுட்பமான ஆயுதங்களைப் போராளிகள் பயன்படுத்தி வருவதாலும், நமது காவல்துறையினரின் வசமுள்ள ஆயுதங்கள் போராளிகள் பயன்படுத்தும் ஆயுதங்களுக்கு நிகரானது இல்லை என்பதாலும், நமது காவல் படையினருக்கு நவீன ஆயுதங்கள், சிறப்புப் பயிற்சி மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அளிப்பது மிகவும் அவசியமாகிறது. அதன் அடிப்படையில், காவல் துறையை வலுப்படுத்தவும், நவீனப்படுத்தவும், ரூ.80.45 கோடிக்கு ஒரு செயற்குறிப்பை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது.

இந்த உதவிகளைப் பெறுவதற்கு நான் புதுடில்லி சென்று பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் சந்தித்து இதற்கான நிதியுதவி கோரியுள்ளேன். இந்த உதவி,100 சதவிகித மானிய அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுள்ளேன்.


**மது ஒழிப்பு**

குடிப்பழக்கத்தை அகற்றிக் குடிகளைக்காக்க வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கைக்கு, குறிப்பாகத் தாய்மார்களிடமிருந்து வந்துள்ள பாராட்டும் ஆதரவும் பலரும் அறிந்ததுதான். இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலே அதாவது 16.7.91-லிருந்து சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டாலும், அந்தச் சமுதாயக் கொடுமை மீண்டும் எந்த உருவிலும் திரும்ப வந்துவிடக் கூடாது என்பதற்காகவும், கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்திலும், இதற்கென ஒரு தனிக் காவல் பிரிவைத் தமிழக அரசு உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. இந்தப் பிரிவில் ஏறத்தாழ 1886 காவல்துறையினர் பணி புரிவர். காவல்துறையினருக்கு, இந்தப் பிரிவை விரிவாக்குவதன் மூலம் வேலைவாய்ப்புப் பெருகும். அதே நேரத்தில், கள்ளச் சாராயத்தைத் தமிழ்நாட்டில் ஒழிப்பதற்கும், இந்த முயற்சி பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

அடுத்து, முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்பிற்கென ஒரு தனிப் பாதுகாப்புக் குழு (Special Security Group) காவல் துறையைக் கொண்டு நிர்மாணிக்கப்படவிருக்கிறது. இதற்கெனச் சிறப்புப் பயிற்சிகளும், நவீன ஆயுதங்களும் பெறப்படவிருக்கிறது. இப்படை முழு அளவில் நிர்மாணிக்கப்பட்டால், முதலமைச்சர், முக்கியப் பெருமக்கள் ஆகியோரது பாதுகாப்பில் தனிக்கவனமும், தரமான பாதுகாப்பும் செலுத்த இயலும்.

காவல் நிலையங்களின் பற்றாக்குறை, காலம் காலமாகப் பேசப்பட்டு வருகிற கருத்தாகும். ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கின்ற காவல் நிலையங்கள் போதாது என்ற கருத்தினை இங்கே பேசிய உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தினார்கள், இதன் முக்கியத்துவத்தை அரசு நன்றாகவே உணர்ந்திருக்கிறது. நிதி வசதிக்கேற்ப இவை பரிசீலிக்கப்படும் எனக் கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில், இலங்கைப் போராளிகள் நடமாடும் கடற்கரைப் பகுதிகளில், புதிதாகச் சில கடற்கரைக் காவல் நிலையங்கள் (Marine Police Stations) அவசியம் காரணமாக உடன் நிறுவும் எண்ணம் அரசுக்கு உள்ளது.

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அவற்றைக் களைந்து, பெண்ணுரிமை காக்கப்பட்டு, ஆணுக்குப் பெண் சமம் என்னும் சத்தியம் நிலை பெறச் செய்திட எங்கள் அரசு அயராது பாடுபடும்.**



**• பற்றற்ற முயற்சியே சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய விரும்பும் மக்களுக்கு வேண்டும்; ஆசையும் பற்றும் மயக்கத்தை உண்டாக்கி வேலையைக் கெடுத்துவிடக் கூடியவை.**

**—மூதறிஞர் இராஜாஜி**

பெண்களின் குறைகளை, கோரிக்கைகளைப் பரிவோடும், கவனத்தோடும் கேட்டுப் பரிகாரம் காணுகிற வகையில், பெண்களே முழுவதும் காவல்துறைப் பணியாளர்களாக, அதாவது முழுக்க முழுக்க பெண் அலுவலர்கள், காவலர்கள் அடங்கிய ஒரு காவல் நிலையத்தை முதலில் சோதனை முறையில் அதாவது ஒரு Experimental basis - இல் தொடங்கவிருக்கிறோம். இந்தக் காவல் நிலையம் சென்னையில் தொடங்கப்படும். அதன் செயல்படும் திறம் அறிந்து, பிறகு படிப்படியாக மற்ற இடங்களிலும் விரிவுபடுத்துவது பற்றி முடிவு எடுக்கப்படும். இப்படி சென்னையில் தொடங்கப்படும் இந்தப் பெண்கள் காவல் நிலையத்தில், தமிழகத்தில் உள்ள பெண்கள் யாரும், தமக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களைக் களைய நடவடிக்கை கோரி அணுகலாம்.

காவலர்களுக்கு வீட்டு வசதி வழங்க வேண்டுமென்பதில், இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அதுவும் காவலர்களை மொத்தமாக ஓரிடத்தில் தங்க வைக்கிற வகையில், வீட்டு வசதி செய்வதன்மூலம், அவர்களை விரைந்து கூட்டவும், வேலைக்கு அனுப்பவும் வாய்ப்பாகவும் இருக்கும். தற்போது சுமார் 42 விழுக்காடு காவலர்களுக்குத்தான் வீட்டு வசதி இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒட்டுமொத்தமாக ஒரு பரிகாரம் தேட வேண்டும் என்பதற்காகத்தான், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இவர்களுக்கெனத் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஒன்றை நிறுவி செயல்பட வைத்தார். அக்கழகம் 1,561 வீடுகளையும், 601 குடியிருப்புகளையும் கட்டியது. துரதிருஷ்டவசமாக அதற்குப் பின்வந்த தி.மு.க. அரசு, அந்தக் காவலர் வீட்டுவசதிக் கழகத்தைக் கலைத்துவிட்டது.

**காவலர் சமுதாயத்தின் நலத்தில் அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்களின் வீட்டுப் பிரச்சினையைப் போக்க அவர்களுக்கென ஒரு வீட்டுவசதிக் கழகத்தை மீண்டும் ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன்மூலம் நடப்பு ஆண்டில் ரூ.8 கோடி செலவில் குறைந்தது 1000 வீடுகளையாவது கட்டி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

> **அட்டைப்பட விளக்கம்:**
>
> முதல் அட்டை:
>
> சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் நடந்த, அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிப் படம்.
>
> இரண்டாம் அட்டை:
>
> அக்டோபர்-5 வனவிலங்கு வாரத்தையொட்டி, சிங்கக் குட்டிகள் படம் வெளியிடப்படுகிறது.
>
> கடைசிப்பக்க அட்டை:
>
> ஆயுத பூசைப் பண்டிகையையொட்டி, உலோகத்தாலான கலைமகள் திருவுருவச்சிலையின் படம் வெளியிடப்படுகிறது.
>
> சிலையை உருவாக்கியவர்: சிற்பி எல்.ராதாகிருஷ்ணன், ஈரோடு.

**தீயணைப்புத் துறை**

**இயற்கை அளித்த அரும்பெரும் நன்கொடைகள் சில சமயம் சீற்றமடைந்து சீறும்போது, விளைவுகளும் விபத்துக்களும் படுபயங்கரமாகி விடுகின்றன. மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. நடக்கப் போகும் தீ விபத்துக்களைத் தடுப்பதும், தீ விபத்துக்களின்போது, உடனடி நடவடிக்கைகள் எடுத்து, அதில் சிக்குண்ட உயிரையும், உடமையையும் காப்பதும், தீயணைப்புத் துறையின் தலையாய கடமையாகும். மேலும் இயற்கைச் சீற்றத்தின்பாற் பட்ட புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற சமயங்களிலும், இத்துறையினரின் மீட்புப் பணி மகத்தானது.**

**நமது மாநிலத்தில் தீயணைப்புத் துறையில் 5,690 பேர் பணிபுரிகின்றனர். 201 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் 69 தீயணைப்பு நிலையங்களில் 75 ஆம்புலன்ஸ் வாகன வசதி உள்ளது.**

**ஆண்டுக்குச் சுமார் 10,000 தீ விபத்துக்களை இத்துறையினர் சந்தித்து வருகின்றனர். சென்ற ஆண்டில் மட்டும் விபத்தால் விளைந்த நட்டம் சுமார் ரூ.10 கோடி ஆகும். இதில் காப்பாற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் ரூ.92 கோடி என்றால், இத்துறையின் பணித் திறனைப் பாராட்டத்தான் வேண்டும். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது மாநிலத்தில் இத்துறையின் மீட்புப் பணி நிலை திருப்தி அளிக்கிறது.**

வளரும் சமுதாயத்தின் தேவைகளை விரைந்து நிறைவேற்றுவது வலிமை மிக்க அரசாகும் என்ற தத்துவத்தை நான் நன்கறிந்தவள். எனவே, மக்களுக்கு வேண்டியதை உரிய காலத்தில், தொடர்ந்து, போதுமான அளவிற்கு, திருப்திகரமான வகையில், திறம்படச் செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறேன். அதாவது Timely Service, Adequate Service, Continuous Service, Efficient Service என்பதே எங்கள் குறிக்கோள்.

**அரசின் நோக்கமும், செயலும்**

இந்த அரசைப் பொறுத்தவரையில், 25 கிலோ மீட்டருக்குள் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படும். குறிப்பாகக் குடிசைவாழ் பகுதிகளுக்கும், தொழிற்சாலைகள் இயங்கும் பகுதிகளுக்கும் முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்கப்படும். இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் தெரிவித்தபடி 6 தீயணைப்பு நிலையங்களைக் கும்முடிப்பூண்டி, அனுப்பானடி, நாவல்பட்டு, கணபதி, திரூர், பவானி ஆகிய இடங்களில் திறக்க உள்ளோம்.

விரைந்து இயங்க காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ஒன்றாக இருந்த கோட்ட தீயணைப்பு அலுவலகத்தைக் காமராசர் மாவட்டத்திற்கு ஒன்றாகவும், இராமநாதபுரத்திற்கு ஒன்றாகவும், ஆக இரண்டு கோட்டத் தீயணைப்பு அலுவலகங்கள் தொடங்கப்படும்.

வளரும் தேவைகளை விரைந்து தர, இருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்த வேண்டும்; புதுப்புது முறைகளைக் கையாள வேண்டும் என்பதில் எங்கள் அரசு அக்கறை கொண்டுள்ளது. இருக்கும் ஊர்திகள், கருவிகள், ஆகியவற்றைச் செப்பனிட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. புதுப்புதுக் கருவிகளையும், இயந்திரங்களையும் சேர்க்க

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒன்றைத் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், ஜப்பான் நாட்டி லிருந்து ரூ.3.32 கோடிக்கு ஒரு சுழல் மேஜை நீட்டிப்பு ஏணி (Turn Table Ladder) ஒன்றைத் தமிழகத்திற்கு வாங்கி இருக்கிறோம். 46 மீட்டர் நீளமுள்ள இந்த ஏணி பொருத்தப் பட்ட வாகனம் விரைந்து சென்று, எந்தப்பக்கம் வேண்டுமானாலும் ஏணியை இயக்கி, பலமாடிக் கட்ட டங்களில் ஏற்படும் தீ விபத்தில் சிக்கியவர்களை இதன் மூலம் எளி தாக மீட்க உதவும். இதை இயக்க 50 பேருக்கு ஜப்பானியர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு, 15.9.1991 அன்று இந்தப் புதிய சாதனம் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னால் அர்ப்பணிக்கப் பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மதுவிலக்கு**

உங்களுக்கு அளிக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் தமிழக அரசின் மதுவிலக்குக் கொள்கையும், குறிப்பாக மலிவுவிலை நாட்டு மதுவை இந்த மாநிலத்திலிருந்து ஒழித்ததையும், அதன்மூலம் நலிந்த, ஏழை, எளிய சமுதாயம் எப்படிக் காக்கப்படுகிறது என்பது பற்றியும், இந்தத் துணிவான கொள்கையால், அரசுக்குச் சுமார் ஆண்டுக்கு ரூ.400 கோடி வரை நட்டம் ஆனாலும், அதைத் தாங்கிச் செயல் படத் துணிந்ததையும் விளக்கியுள் ளேன். ஆட்சிக்கு வந்த உடனேயே, இவ்வளவு பெரிய முடிவு, சமுதாய நலன் கருதித் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு துணிந்து எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**இதுவரை காவலர்கள் தமது கடமைகளுக்கு மத்தியில் மதுவிலக்கு குற்றங்களையும் கண்காணித்து வந்தார்கள். அதன்மூலம் அவர்கள் கவனம் சிதறுண்டது என்பதை அறிந்து இந்த அரசு, மதுவிலக்கைப் பிரத்தியேகமாக அமுலாக்க ஒரு பிரத்தியேகப் பிரிவை (Prohibition Enforcement Wing) ஒரு காவல் துறைத் தலைவரின் (Inspector General of Police) மேற்பார்வையில் உருவாக்க முன்வந்துள்ளது. இந்தப் பிரிவில் 1,800 பேர்களுக்கு மேல் பணிபுரிவார்கள். அவர்களுக்கு வேண்டிய வாகன வசதி, ஏனைய வசதிகள் கொடுக்கப்படும். அப்படிச் செய்வதன்மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றை எளிதில் ஒழித்துக்கட்ட முடியும் என்று இந்த அரசு நம்பு கிறது.** இவர்களைத் தவிர எப் பொழுதும் உள்ள காவல்துறையின ருக்கும் இவ்விஷயத்தில் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மது விலக்குப் பிரிவு காவலர்களைக் கொண்டு மற்ற மாநில எல்லை களில் சோதனைச் சாவடிகள், திடீர் திடீரென்று நடவடிக்கை எடுக்கப் பறக்கும் படைகள் உருவாக்கப்பட இருக்கின்றன. சுருங்கக்கூறின் வெளி மாநிலங்களிலிருந்து கள்ளச்சாராயம் வருவதோ, இந்த மாநிலத்தில் காய்ச்சிப்பின் விற்கப்படுவதோ, இரும்புக் கரங்கொண்டு தடுக்கப்படும் என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

அடுத்து, இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே, கிராம நிர்வாக அலுவலர்களையும்,காவல்துறை அதி காரிகளையும் அந்தந்த இடங்களுக்குப் பொறுப்பாக்கி, அவரவர்கள் அதி கார வரம்பிற்குள் நடைபெறும் கள்ளச் சாராய நடவடிக்கைகள், ஏனைய மதுவிலக்குக் குற்றங்கள் பற்றி நட வடிக்கை எடுக்கத் தவறினாலோ அதுவிஷயத்தில் திறமைக் குறைவாக நடந்து கொண்டாலோ அவர்கள்மீது கடுமையான ஒழுங்குமுறை நட வடிக்கை எடுக்கப்படும் என்ற இந்த அரசின் சமீபகால ஆணை ஒரு மகத் தான விளைவை உருவாக்கி இருக் கிறது. மதுவிலக்குக் கொள்கை அமுலாக்கத்தில் ஒரு Major break through என்று கூட இதைச் சொல் லலாம் இது விஷயத்தில் சட்டப் பேரவை உறுப்பினர்களும், ஏனை யோரும், அரசுக்கு உதவ வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படும் எரி சாராயம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக, எங்கெல்லாம் தொழில் நீடிப்புச் சாத்தியக் கூறுகள் உள்ளனவோ, அங்கெல்லாம் இயல்பு மாற்றப்பட சாராவியை (Denatured spirit) வழங்க வேண்டும் என்று அ.இ.அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தபின் ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் கள்ளச் சாராயம் காய்ச்சப் பயன்படும் எரி சாராயத்தின் துஷ்பிரயோகம் தடுக் கப்படுகிறது.

**இத்தனை தத்துவங்களையும் ஊருக்கு உரத்த குரலில் எடுத்து ரைக்க மாநில அளவிலான ஒரு பிரச்சாரக் குழுவை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அந்தக் குழுவிற்குத் தமிழக முதலமைச்சரே தலைவராகவும், தமிழகத்தில் நன்கு அறிமுகமான, பிரபலமான, பல் வேறு துறைகளில் ஈடுபாடு உடைய பெருமக்கள் 22 பேரையும் சேர்த்து, மாநில மட்டத்தில் ஒரு குழு அமைக் கப்பட்டுள்ளது. இதைத் தவிர மாவட்ட ரீதியில், வட்ட ரீதியில், வட்டார ரீதியில், கிராம ரீதியில் குழுக்களைத் திருத்தி அமைக்க இந்த அரசு விரும்புகிறது. வெவ்வேறு மாவட்டங்களில் இருக்கும் குழுக்கள் பெயரளவில் இருந்தனவே தவிர, அவை செம்மையாகச் செயல்பட்ட தாகத் தெரியவில்லை. இந்தக் குழுக் களில் எல்லாம் பெண்கள் பங்கு பெற்றதாகத் தெரியவில்லை. இனி மேல் அமைக்கப்படும் குழுக்களில் அவர்கள் கணிசமான அளவிற்குப் பங்குபெறுவார்கள்**

மதுவின் கொடுமைகளை விளக்க சினிமா படங்கள், பிரச்சார சாத னங்கள், சேவா சங்கங்கள் முழுக்க முழுக்க பயன்படுத்தப்படும். பள்ளிப் பாடப் புத்தகங்கள்கூட இதைப்பற்றி கருத்துக்கள் கூற முயற்சிக்கப்படும்.

குடிப்பழக்கத்தால் விளையும் கேடுகளை மக்களுக்கு உணர்த்த அரசின் செய்தித்துறை திரைப்படப் பிரிவு, விசேஷ திரைப்படங்களைத் தயாரித்து, தொலைக்காட்சியிலும், வீடியோ கேஸட்டுகள் மூலமாகவும், திரைப்பட அரங்குகளிலும் இப்பிரச் சாரப்படங்கள் மக்களுக்குக் காண் பிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு வாரத்தை மதுவிலக்கு எழுச்சி வார மாகக் கொண்டாடி, மக்களின் மனதில் இந்தத் தத்துவங்களை நன்கு பதிய வைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

தமிழகத்தில் உள்ள 31 சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கருப்பஞ் சாற்று கசண்டை (Molasses) தேக்கம் இல்லாது பார்த்துக் கொள்ளப் படும். அதேபோல வடிசாலைகளில் (Distilleries) உற்பத்தியாகும் சாராவி (Alcohol) தக்கபடி பயன்படுத்தப் படும். உபரியாக இருக்கும் மொலாசஸ், சாராவியை எப்படிப் பயன்படுத்தி என்னென்ன தொழில்களைத் தொடங்குவது என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926. 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

